விலை
ரூ.100/-

மாதாந்த பல்சுவை சஞ்சிகை

# பனங்கூடல்

இதழ் 03 மாசி 2014

Panangkoodal



எம் மண் எமக்களித்த அருஞ் செல்வமே பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்குழு
எஸ். அருளானந்தம்
சு. சசிரேகா
க. அபராசுதன்
இ. இலங்கன்



அட்டைப்படம்


# பனங்கூடல்

இதழ் 03 மாசி 2014





தொழிற்சங்கவாதி அமரர் கணபதி மெய்யழகன் 04



பனை அபிவிருத்தி சபைத் தலைவரின் பேட்டி 06



எமது பாரம்பரியத்தின் பெருமையை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்வோம். 10



கந்தன் கருணைப் படுகொலை - அமலியா ஷைனி அருண் 15



கள்வனே, 'கள்வனைப் பிடி' என்று சொல்லும் கடைகெட்ட தந்திரோபாயம் - எஸ்.அருளானந்தம் 18



வெள்ளரி நிலத்தில் பிள்ளைப் பேறு -சிறுகதை (இறுதிப்பகுதி) 28



டானியலின் "கானல்" ஒரு பார்வை - அபராசுதன் 31



சினிமா விமர்சனம் - அம்பேத்கார் 46



தேடல் - கவிதை 48



**தொடர்புகளுக்கு:**
**பனங்கூடல் சஞ்சிகை**
**ஜீவ பவனம், மல்வம், உடுவில்.**
**தொலைபேசி:** 0779114549 / 0775304317/ 0777568734
**மின்னஞ்சல் :** panangkoodal@gmail.com


ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், சொந்த ஆக்கங்களையும் அனுப்பி உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
-ஆசிரியர்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக, பொருளாதார, அரசியல் தளத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு, இன்று தமது வாழ்விற்கான உரிமையை வேண்டி நிற்கும் மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதே எமது இலக்கு**

# திக்கம் வடிசாலை செயற்பட வேண்டும்

“திக்கம் வடிசாலை செயலிழந்துள்ளது. தொழிற்சாலையின் ஊழியர்கள் வருமானம் இழந்து தவிக்கிறார்கள்.” என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் புலம்பெயர் அமைப்புகளைச் சேர்ந்த தமிழர்கள். சிவில் நிர்வாகம் இல்லாத காலத்தில் திக்கம் வடிசாலை இலாபத்தில் இயங்கியதாகவும் புள்ளிவிபரங்களைப் போட்டுக் காட்டுகிறார்கள்.

அன்று இலாபத்தில் இயங்கிய தொழிற்சாலையின் இயந்திரங்கள் இன்று பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. திக்கம் வடிசாலை தொழிற்சாலையிலுள்ள இயந்திரங் களால் மதுசாரத்தை தயாரிக்க முடியவில்லை. ஸ்பிரிட்டாக களஞ்சியப் படுத்துவதற்கும் அங்கு போதிய கொள்கலன்கள் இல்லை. கழிவினை வெளியேற்றும் அங்கீகரிக்கப்பட்ட வசதி மேம்படுத்தப்படவில்லை. தொழிற்சாலையின் தொழிலாளர்கள் அல்லது அதனை அண்டிப் பிழைக்கும் தொழிலாளர்கள் வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

திக்கம் வடிசாலை நன்றே செயற்பட வேண்டும். தொழிலாளர்கள் வருமானத்தைப் பெற வேண்டும் என்ற நல் நோக்கம் கொண்ட புலம்பெயர் தமிழர்கள் அல்லது அரசியல்வாதிகள் இருப்பார்களாயின் அவர்களுக்குரிய பொறுப்பை மக்கள் நலன்சார்ந்து நிறைவேற்ற முன்வர வேண்டும். தங்களது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக ஜெனீவாவைப் பயன்படுத்துவது போல திக்கம் வடிசாலையையும் பயன்படுத்த முயலக்கூடாது.

தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இனம். பழந்தமிழ் மன்னர்களான சோழர்களின் கொடியில் பனை இடம்பெற்றிருந்தது. “தமிழ் எம் மூச்சு, வீடுகள் வேண்டாம், வீதிகள் வேண்டாம், அபிவிருத்தி வேண்டாம்” என்று கூச்சல் போடும் அரசியல் கட்சி ஆட்சி செய்யும் இலங்கையின் வட மாகாண சபையின் கொடியில் கூட பனை உண்டு.

பனையை இலட்சினையாகக் கொண்டிருக்கும் தமிழினம் பனை சார்ந்த தொழில்களுக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கும் சம அந்தஸ்த்தை வழங்க வேண்டும். இது குறித்த சரியான சிந்தனைகளையும் விழிப்புணர்வையும் செயற்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இளம் தலைமுறையினருக்கு உண்டு.


# பனங்கூடல்

இதழ் 02 தை 2014 விலை:ரூ.100/-

## விளம்பரக் கட்டணம்

முழுப்பக்கம் [18.5செ.மீ. x 27செ.மீ.]

முழுக்கலர்

| | |
|---|---|
| பின் அட்டை | : ரூ.15,000/- |
| முன்அட்டை உட்பக்கம் | : ரூ.10,000/- |
| பின் அட்டை உட்பக்கம் | : ரூ. 8,000/- |

கறுப்பு வெள்ளை

| | |
|---|---|
| முன்அட்டை உட்பக்கம் | : ரூ. 8,000/- |
| பின் அட்டை உட்பக்கம் | : ரூ. 6,000/- |

கறுப்பு வெள்ளை [ உட்பக்கங்கள்]

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | 16செ.மீ. x 24செ.மீ. | : ரூ. 5,000/- |
| அரைப்பக்கம் | 16செ.மீ. x 12செ.மீ. | : ரூ. 3,000/- |
| | 16செ.மீ. x 4செ.மீ. | : ரூ. 1,000/- |

விளம்பரம் / விநியோகம் தொடர்புகளுக்கு:
பனங்கூடல் சஞ்சிகை, ஜீவ பவனம், மல்வம், உடுவில்
தொலைபேசி: 0779114549 / 0777568734
மின்னஞ்சல் : panangkoodal@gmail


## மேல் சாதி தண்ணீர்



என் இனிய நண்பன்
அவன் யாரையும் வெறுத்ததில்லை
அவன் யாரையும் தாக்கியதில்லை
அவன் யாருக்கும் எதிரியல்ல.

அவனுக்கு தாகம் எடுத்தது
தொண்டை வரண்டது - ஒரு
வீட்டு வாசலில் தண்ணீர் குடம்
வயிறு குளிர - அவன்
தண்ணீரைக் குடித்தான்

உள்ளேயிருந்து வந்தவன்
காலில் எகிறிப் பாய்ந்து,
சிதறியது குடம்
மேல் சாதித் தண்ணீர்
தெருவில் ஓடியது

- மனோஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



பனை அபிவிருத்திச் சபையினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினதும் அனுசரணையுடன் மாதாந்தம் பிரசுரமாகும் "பனங்கூடல்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள யாழ் மண்ணின் மணத்தை அடையாளப் படுத்தி அணி சேர்க்கும் கற்பகதருவாம் பனையை வளர்த்து பயன் பல பெற்று வந்த எம் முன்னோரை அடியொற்றிப் பனை தென்னை வளங்களின் பயன்பாடு இன்று பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தவகையில் பனை, தென்னை வளத்தைச் சார்ந்து நிற்கும் மக்களின் கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களுடன் பல பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் "பனங்கூடல்" சஞ்சிகை மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக அமையும் எனவும், இதன் மூலம் வாசகர்களின் வரவேற்பினைப் பெற்றுக்கொள்ளும் எனவும் நம்புகின்றேன்.

இத்தகைய வெளியீடுகள் பனை, தென்னை வளங்களைச் சார்ந்து நிற்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்குத் துணையாக அமையவும், அதன்மூலம் பனை அபிவிருத்திச் சபையினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினதும் இலக்குகள் வெற்றி பெறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்

07.03.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "சமூக விடுதலையே எம்மினத்தின் விடுதலை" என அயராது உழைத்து உயர்ந்தவன்

## அமரர் கணபதி மெய்யழகன்

குப்பிளான் கப்பம்புலம் கிராமத்தில் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பிறந்த மெய்யழகன் கடந்த வருடம் 2013 ஜூலை மாதம் 5ஆம் திகதி மரணமடைந்தார்.

மெய்யழகன் ஒரு சீவல் தொழிலாளியாகவே தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். பொருளாதார நிலையிலும், சமூக நிலையிலும் தனது சமூகத்தின் அவலநிலை கண்டு மனம் மிக வேதனையடைந்தார். தனது சமூகம் தலைநிமிர்ந்து வாழ உழைக்கத் தீர்மானித்தார். தனது குடும்பத்திற்காக தன்னை அர்ப்பணிக்காது சமூகத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார்.

1984களில் கிராமிய தொழிலாளர் சங்கத்தில் இணைந்து பணியாற்றியபோது, நேரகாலம் பாராது வேலைகளில் ஈடுபட்டார். தனது தொழில் காரணமாக ஒருபோதும் சமூகப் பணியை அவர் இடைநிறுத்தியதில்லை. அதிகாலையிலேயே எழுந்து முழுநாளும் உழைத்தார். அவரது சமூகப் பணிகளில், முன்பள்ளிகள், வாசிகசாலைகள் உருவாக்கப்பட்டன. மானிப்பாய் தொகுதி பொறுப்பாளராக இருந்து வறிய தொழிலாளர்களின் எழுச்சிக்கு வித்திட்டார். புன்னாலைக்கட்டுவனில் உயர் சாதியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்களுக்கான பொதுப் பாதையினைத் திறக்கும் போராட்டத்தில் பங்குபற்றினார். கைதடி இராஜ கிராமம், அச்சுவேலி குடியேற்றத் திட்டம் போன்றவற்றை உருவாக்குவதிலும் கி.தொ.ச. நடத்திய அனைத்துப் போராட்டங்களையும் வெற்றி பெறச் செய்வதில் மெய்யழகனின் பங்கு பெரியது.

1986இற்குப் பின்னர், புலிகள் தம்மை ஏகப் பிரதிநிதிகளாக வரித்துக்கொண்டு ஏனைய இயக்கப் போராளிகளை அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியபோது, ஏனைய



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயக்கப் போராளிகளைப் பாதுகாப்பதில் முன்னின்றார். எந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் என்று பாராது மனிதாபிமான அடிப்படையில் அவர்களின் உயிரைப் பாதுகாப்பதில் தீரத்துடன் செயற்பட்டார்.

அவரது துணிகரமான செயற்பாட்டுக்கு ஒரு உதாரணம் இது: புலிகளின் தனி ஆட்சி வடக்கில் இருந்த காலம். அப்போது சீவல் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக மெய்யழகன் இருந்தார். இறந்துபோன ஒரு தொழிலாளிக்கான அஞ்சலி நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அந்த நிகழ்வுக்கு புலிகளின் பிரதேசப் பொறுப்பாளரையும் அழைத்திருந்தார். புலிப் பொறுப்பாளர் அஞ்சலிச் சுடரை ஏற்றியபோது அதிர்ச்சியடைந்தார். தனது அமைப்பால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவருக்குத் தானே அஞ்சலி செலுத்த வந்திருப்பதை உணர்ந்தான். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அமைதியாக இருந்துவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

தமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக சேவையாற்றுவார் என்று கருதி முன்னாள் எம்.பி. சிவநேசன் தேர்தலில் வெற்றி பெற மெய்யழகன் பாடுபட்டார். ஆனால், தனது மக்களுக்காக சேவையாற்ற முடியாததையிட்டு இறுதிக்காலத்தில் சிவநேசன் மனவருத்தமடைந்ததாகவும் மெய்யழகனே குறிப்பிட்டார்.

தலைவர்-சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம், உப.தலைவர்-யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், தலைவர்-வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் என்பவற்றில் இணைந்து பணிகளை ஆற்றிவந்தவர்., இறுதியாக யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் பணிப்பாளராகவும் மெய்யழகன் பணி புரிந்துள்ளார். இச் சங்கங்களினூடாக மாணவர்களுக்கான கல்வி உதவித் திட்டங்கள், வேலையற்றவர்களுக்கான உதவிகள் மற்றும் பல திட்டங்களை தூர நோக்குடன் செயற்படுத்தி தொழிலாளர்களின் குடும்பங்கள் உயர்வு பெற உழைத்துள்ளார்.

எந்தக் கட்சி அரசியலுக்கும், ஆயுத இயக்கங்களுக்கும் அடிபணியாது சமூக விடுதலையை இலக்காகக் கொண்டு சேவையாற்றியவர் மெய்யழகன். அதனால்தானோ என்னவோ அவர் நோயில் விழுந்த இறுதிக் காலத்தில் தனது சமூகத்தின் ஏழைத் தொழிலாளர்களுடனும் வறுமையுடனும் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

10 பேர் பின்னால் நின்றால் ஒரு கட்சி ஆரம்பிக்கும் இக்காலத்தில் பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு வழிகாட்டிய தலைவனாக இருந்தபோதும் எந்தக் கதிரையின் சொகுசையும் அனுபவிக்காது ஒரு தொழிலாளியாகவே வாழ்ந்து மறைந்துவிட்டார் மெய்யழகன்.

நேர்மையான சமூக விடுதலைப் போராளியாக, தொழிற்சங்கவாதியாக, மனிதாபிமானியாக தமிழ் இனத்திற்கு கிடைத்த ஒரு தலைவன் தனது வாழ்நாளைக் குறுக்கிக் கொண்டுவிட்டான். மெய்யழகனின் மரணம் தொழிலாளர் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு என்றே சொல்லவேண்டும்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்", வாசிப்பு அரசின் கஜானாவை விட உயரியது. என்கிறார் ரஸ்கின். வாசிப்பு மூலம் அறிவு வளர்ச்சி மட்டுமல்ல எழுத்துப் பிழையின்றி எழுதவும், கிரகிக்கும் சக்தியை அதிகரிக்கவும் முடியும். நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள். நீ நூலைத் தேடு, உன்னை உலகம் தேடும். ஒரு நூலகத்தினை உருவாக்குவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிட முடியும்" என்கிறார்கள் அறிஞர்கள். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என எமது முன்னோர்கள் கூடச் சொல்லி வைத்துள்ளார்கள். பாடசாலைப் புத்தகங்களை மட்டும் கற்பவர்களால் கிணற்றுத் தவளைகள் போலவே வாழ நேரிடும். கண்டதை எல்லாம் கற்காவிட்டாலும், தேவையானவற்றை என்றாலும் தேடிக் கற்க வேண்டும். "சுயமாகக் கற்றல்" என்பதே எதிர்காலத்தின் சிறந்த கல்வி முறையாக அமையக்கூடியது. மாணவர்களே! நூல் நிலையங்களுக்குச் செல்லுங்கள். தேடிப் படியுங்கள்.

**பிழைதிருத்தம்:**

பனங்கூடல் இதழ்-2 இல் பிரசுரமான கட்டுரைகளில், "மாவிலாற்றை மூடியபோது குடிநீரின்றித் தவித்த மக்களின் எண்ணிக்கை 35 ஆயிரம்" எனத் திருத்தி வாசிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை அம்மை பனை அப்பர் பல காலம் காப்பர் எமை"

**பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டது ஏன்?**

வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதான வளமாகப் பனை விளங்குகின்றது. இலங்கையில் உள்ள ஒரு கோடியே பத்து இலட்சம் பனைகளில் கிட்டத்தட்ட 96 வீதமான பனைகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே உள்ளது. எனவேதான் வடக்கு மாகாண சபையின் இலட்சனையில் பனை முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. எனவே பனைசார் அபிவிருத்திகளை வேகப்படுத்தும் நோக்குடன் தலைமைக் காரியாலயத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றினோம்.

அது மட்டுமல்ல இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலின்படி பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயம் யாழ்ப்பாணத்திலேயே இருக்க வேண்டும். ஆனால் யுத்த சூழல் காரணமாகவும் சிலரின் சொந்த இலாபங்களுக்காகவும் தலைமைக் காரியாலயம் கொழும்பில் இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருப்பதனால், வாடகை, மின்சாரம், போக்குவரத்து போன்ற காரியாலய செலவுகள் குறைவடையும்.

**யுத்தம், இயற்கை அழிவு மற்றும் பிறதேவைகளுக்குமாக, அதிகளவு பனைகள் அழிவடைந்துபோயுள்ளன இவற்றை ஈடுசெய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி கூறுங்கள்?**

யுத்த காலத்தில் பனைகள் அழிக்கப்பட்டாலும் அப்போதும் பனை மர மீள் நடுகை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தற்போது பனை தறிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பனை தறிக்க விண்ணப்பிப்போரிடம் ஒரு பனைக்குப் பதிலாக அவர்கள் 10 பனைகளை நட வேண்டும் என்பது எம்மால் வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் எமது ஆராய்ச்சி நிலையம் மூலம் குட்டைப் பனை நடுகை, கூடிய பயனைத் தரக்கூடிய விதை தெரிவு போன்ற விடயங்கள் தீவிரமாக ஆராயப்படுகின்றன.

பனை தறிப்பிலும் முறிந்த பனைகள், மக்கள் குடியிருக்கும் வீட்டுக்கு பாதுகாப்பற்ற சூழலில் இருக்கும் பனைகள், பயன்பாடுகள் அற்ற பனைகள் எனத் தெரிவு செய்யப்பட்டே பெரும்பாலும் தறிக்கப்படுகின்றன. அத்துடன் ஒரு வருடத்தில் 20 ஆயிரம் பனைக்கு மேல் தறிக்க அனுமதிப்பதில்லை என்பது தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வருடத்தில் ஒரு இலட்சம் பனைகள் மீள் நடுகை செய்யப்பட வேண்டும் என்ற திட்டம் உறுதியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**வடக்கு, கிழக்கு பகுதிக்குரிய சிறப்பம்சமே விவசாயம், கடல்வளம் பனைவளம்**

## பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களுடனான நேர்காணலின் தொடர்ச்சி



**போன்றவற்றைக் குறிப்பிடலாம். தேசியளவில் பனை வள மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?**

பனை வளத்தை இலங்கையின் தேசிய வளமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எமது "கற்பகச் சோலை முன்மாதிரிப் பனம் தோட்டம்" உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விட, குருநாகல், புத்தளம், கற்பிட்டி, அநுராதபுரம் போன்ற இடங்களில் பனை ஓலை சார்ந்த கைப்பணிப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் பனை நாற்றுக்கள் நடுவதற்கான திட்ட சுற்றறிக்கை எல்லா மாவட்டங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்ற மாவட்டச் செயலகங்களில் பனை நடுகை எம்மால் ஊக்குவிக்கப்படுகின்றது. குறிப்பாகத் தென்னை மர நடுகை செய்யப்படும் இடங்களில் பனையும் நடலாம் என்ற விடயம் எம்மால் வலியுறுத்தப்படுகின்றது.

பனை வளம் இல்லாத இடங்களிலுள்ள பனைசார் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு மூலப் பொருளை வழங்கி ஊக்குவிப்பை செய்து வருகின்றோம்.

**பனை வள உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்கள் எந்தளவில் விஸ்தரித்துள்ளீர்கள்?**

எமது ‘கற்பகம்’ விற்பனை நிலையங்களை விஸ்தரிப்பதன் மூலம் சந்தைப்படுத்தலை விஸ்தரித்து வருகின்றோம். மேலும், சிறப்பு சந்தைகள் ஊடாகவும், சகல மாவட்டங்களிலும் விசேட கண்காட்சிகளை நடாத்துவதன் மூலமும் சந்தை வாய்ப்பை பெற்று வருகின்றோம்.

**வெளிநாட்டவர்கள் பனைசார் உற்பத்திப் பொருட்களில் ஆர்வம் உள்ளவர்கள். சர்வதேச சந்தைப்படுத்தல் தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்?**

எமது வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு இரண்டு விதமாக உள்ளது. ஒன்று பனைசார் உற்பத்திகளை விரும்பும் புலம்பெயர் தமிழர்கள். பெரும்பாலும் பனங்கட்டி, கல்லாக்காரம், பனம்களி, பனாட்டு, பாணிப்பனாட்டு போன்றவற்றையே பெரிதும் விரும்புவார்கள். இரண்டாவதாக வெளிநாட்டுப் பிரஜைகள் பனைசார் அலங்காரப் பொருட்களையே பெரும்பாலும் விரும்புகிறார்கள்.

இவற்றை, வெளிநாட்டு முகவர்கள் மூலம் ஏற்றுமதி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அத்துடன் வெளிநாட்டிலிருந்து வரும் கேள்விகளை ஏற்றுக் கொண்டும், கற்பகச்சோலை இணையத் தளத்தினூடாகவும் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை விஸ்தரிக்கின்றோம்.

**நெடு நாட்களின் பின்னர் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனம் இயங்குகிறது. இதன் பயன்பாடுகள் தொடர்பாக கூறுங்கள்?**

கைதடி ஆராய்ச்சி நிலையம் இயங்க ஆரம்பித்ததன் பின்னர் பனம் பொருள் சார்ந்த அபிவிருத்தியில் பல்வேறு வகைப்பட்ட முன்னேற்றங்களை நாம் காணக் கூடியதாக உள்ளது.

- ஓலை சார்ந்த கைப்பணிப் பொருட்களை பங்கஸில் இருந்து காப்பாற்றி நிறங்களை உறுஞ்சும் நிலையை ஏற்படுத்தி அவை நீண்ட காலம் பாவிக்கும் சூழலை ஏற்படுத்தக் கூடியதாய் உள்ளது.
- பனை சார்ந்த உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்துக்களையும் மருத்துவக் குணாம்சங்களையும் கண்டு கொள்வதன் மூலம் பனை சார் உணவுப் பொருட்களின் நுகர்வை அதிகரிக்கச் செய்யலாம்.
- பனை சார் உணவுப் பொருட்களை நீண்டகாலம் பழுதடையாமல் வைத்திருக்கும் வழிகளை கண்டு கொள்ளலாம்.

கிராமியத் தொழில்களை வளப்படுத்தி வளர்ப்பதற்கு இன்றைய விஞ்ஞான வளர்ச்சியை பயன்படுத்துவது அவசியமாகின்றது. அந்த வகையில் கைதடி ஆராய்ச்சி நிலையம் எமக்குப் பெரும் பங்களிப்பை செய்யும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

**தங்கள் சபையினால் பல பயிற்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கூறுகின்றீர்கள், பயிற்சி அளித்ததன் பின்பு இதன் விளைவுகள் என்னவாகவுள்ளது?**

தலைமைப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் பயிற்சி பெற்றவர்களில் 75 வீதமானவர்கள் தொடர்ந்து பனை சார் கைத்தொழிலில் ஈடுபடவில்லை. ஆனால் தற்போது “சிறு சுவடுகள்” என்னும் பெயரில் உற்பத்தியாளர் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு சிறந்த முறையில் செயற்படுகின்றது.

எம்மால் பயிற்றப்பட்ட அவைரும் இச் “சிறு சுவடுகள்” கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு அவர்களது உற்பத்தி முயற்சியை ஊக்குவிப்பதோடு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவர்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கின்றோம். அத்தோடு தும்பு சம்பந்தப்பட்ட கைத்தொழில் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு இருப்பதால் அதற்கான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம்.

“சிறு சுவடுகள்” என்ற கட்டமைப்பினூடாக இணைக்கப்பட்ட பனையோலைக் கைப்பணி சார்ந்த உற்பத்தியாளர் மத்தியிலே அதிக உற்பத்தி, தரம், மற்றும் புதிய வடிவிலான உற்பத்தியை மேற்கொள்பவர்களை கௌரவிப்பு செய்வதன் மூலம் அவர்களை ஊக்குவித்து வருகின்றோம்.

**அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் வாழ்வின் எழுச்சிக்கு பனை அபிவிருத்திச் சபை எத்தகைய பங்கினை ஆற்ற முடியும்?**

வாழ்வாதாரம் தேடும் பெண்களுக்கான பனைசார் தொழில் பயிற்சிகளை வழங்கி, அத்தொழிலை ஓர் குடிசைக் கைத்தொழிலாக மாற்றி, தொடர்ந்து அத்தொழிலை செய்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்கி, சந்தைப்படுத்தல் வாய்ப்பையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களது வாழ்வின் எழுச்சிக்கு உதவி வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்காலத்தில் கொண்டுவரவுள்ள திட்டங்கள் தொடர்பாக கூறுங்கள்?**

மாதிரிப் பனைத் தோட்டங்களை அமைத்தல், பனைசார் தொழிலை இயந்திர மயப்படுத்தல் மூலம் இலங்கையில் காணப்படும் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தல். பனை வெல்லம், பனங்களி, பனம்பானம் என்பவற்றை 'ரின்னில்' அடைத்து ஏற்றுமதி செய்தல், பனை வள ஆராய்ச்சிக்கூடாக புதிய உற்பத்திப் பொருட்களைக் கண்டுபிடித்தல், காரைநகர் பனைசார் பல்தொழில் தொகுப்பு நிலையத்தை இயங்க வைத்தல், பனைசார் கைத்தொழில் பேட்டையை உருவாக்கல், கைதடியில் "பனை எழில் நகர்" ஒன்றை உருவாக்கி அதில் விற்பனைக் காட்சியகம், பனை அருங் காட்சியகம் என்பவற்றை அமைத்தல் என்பன எமது எதிர்கால திட்டமாக உள்ளது.

**சபையின் மேலதிக வேலைத்திட்டங்களுக்காக அமைச்சுகளின் ஊடாக கிடைக்கும் உதவிகள் தொடர்பாக கூறுங்கள்?**

அமைச்சின் ஒதுக்கீட்டு நிதியை விட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பனைசார் கைத்தொழில் பயிற்சிக்கான உதவிகளைப் பெற்றுத்தரல், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கூடாக அரசாங்கத்திடமிருந்தும் இந்திய அரசிடமிருந்தும் உதவிகளை பெற்றுத் தருவதோடு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எமது பனை அபிவிருத்திச் சபையினூடே அவர்களது தொழிலுக்கு தேவையான உபகரணங்களை அன்பளிப்பு செய்தல் போன்றவையாகும்.

**பனையின் பானமான கள் உற்பத்தியாளர்கள் சமூக ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் மனக் குறையைப் போக்க முடியாதா? இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பனையின் பானமான "கள்" உற்பத்தி தொழிலானது ஓர் சமூகம் சார்ந்த தொழிலாகவும், அச் சமூகத்தின் வாழ்வாதாரத்தை தாங்கி நிற்கின்ற தொழிலாகவும் இருப்பதால் அத் தொழில் சார் பிரச்சினையை சற்று விரிவாகவும், ஆழமாகவும் பார்க்க வேண்டியுள்ளது. தமிழினத்தின் விடுதலையை கோரி நின்ற தமிழ் காங்கிரஸ்கட்சி தமிழரசுக்கட்சி போன்ற தமிழ்கட்சிகள் மிக நீண்ட காலமாக தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வருகின்றோம் எனக் கூறிவருகின்றபோதும் இக் "கள்" உற்பத்தி தொழிலாளர்கள் முகம்கொடுத்து வந்த ஒடுக்குமுறைகள் பற்றி அவர்கள் எப்பவுமே சிந்தித்ததில்லை. அத் தொழில்சார் சமூகம் தமிழ் மேட்டுக் குடியினரால் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகள் போலவே நடாத்தப்பட்டு வந்தார்கள். "கள்" இறக்கும் தொழிலாளர்கள் மிகச் சிறந்த உழைப்பாளர்களாக இருந்தபோதும் அவர்களது குடும்பங்கள் 1972ம் ஆண்டு வரை பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்ந்து வந்தார்கள்.

தமிழ் மக்களின் விடுதலை பற்றிப் பேசிய தலைவர்கள் எங்கும் இந்த மக்களின் அவலமான அடிமைநிலை வாழ்வு பற்றி கொஞ்சமேனும் சிந்திக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க உண்மையாகும். ஆனால் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தேசிய விடுதலைக்காக போராடி இம் மக்கள் வாழ்ந்த சில கிராமங்களில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட சிங்கள இடதுசாரித் தலைவர்களே இம் மக்களின் சோகமான வாழ்நிலை பற்றி சிந்தித்தார்கள். இவ்வாறு ஒடுக்கப்பட்ட சாதியாகக் கருதப்பட்ட இம்மக்களின் கடைநிலை வாழ்வு பற்றிச் சிந்தித்த சிங்கள தலைவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தபோதுதான் இந்த மக்களின் வாழ்வின் ஒளி பிறக்க ஆரம்பித்தது என்ற வரலாற்று உண்மையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

1972ம் ஆண்டு சிறீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் நிதி மந்திரியாய் இருந்த டாக்டர் என்.எம்.பெரேரா அவர்கள் கள் உற்பத்தி தொழிலை கூட்டுறவு மயப்படுத்தினார். அதன் பின்புதான் இத்தொழில் சார் மக்களின் பொருளாதார கலாசார வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்ற வரலாற்று உண்மையை யாராலும் மறுக்க முடியாது. நீண்ட காலமாக இம்மக்களை அடக்கி ஆண்ட யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினரால் இந்த மக்களின் முன்னேற்றத்தை ஜீரணிக்க முடியவில்லை இதனால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் தொடர்ந்தும் பல்வேறு தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது "கள்" விற்பனை முறையில் நவீன மாற்றங்களை கொண்டுவர முயன்றாலும், அவர்களது விற்பனை நிலையங்களை நவீன முறையில் அமைப்பதற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தால் சொந்தமான காணிகளை கொள்வனவு செய்ய முடியவில்லை. கொள்வனவு செய்த காணிகளில் இயங்கும் கிளைகளைக் கூட அவ்விடத்திலிருந்து அகற்றும் முயற்சியில் யாழ்பாணத்து மேட்டுக்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையாளர்கள் மிகத் தீவிரமாக முயற்சித்து வருகிறார்கள். இது மிகுந்த கவலைக்குரிய விடயமாகும்.

"கள்" விற்பனை நிலையங்களை நவீன மயப்படுத்தி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பை மேலும் பலப்படுத்தி முகாமைத்துவச் சீர்கேடுகளை சீரமைத்து, "கள்ளில்" உள்ள ஊட்டச் சத்துக்களையும், மருத்துவக் குணங்களையும் ஆராய்ச்சி நிறுவனத்தினூடே கண்டறிந்து பிரச்சாரப்படுத்தி, கள்ளை ஓர் ஏற்றுமதிப் பானமாக மாற்றுவதன் மூலம் கள் இறக்கும் தொழிலாளர்களின் தேசியப் பெறுமானத்தை உயர்த்தும் நடவடிக்கைகள் என்னால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனது இந்தச் செயற்பாட்டிற்கு ஊடகங்களினதும், ஆய்வாளர்களினதும், புத்திஜீவிகளினதும் மேலான ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளுடன் பனை அபிவிருத்திச் சபை எத்தகைய தொடர்புகளை கொண்டிருக்கிறது?**

பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிற்கான தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குவதுடன், உபகரண அன்பளிப்பு, சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் எனப் பல்வேறு வகைப்பட்ட உதவிகளை செய்து வருவதுடன், அச்சங்கங்கள் சமூக ரீதியாக முகங்கொடுக்கும் பிரச்சனைகளிற்குத் தீர்வு காண்பதற்கான உதவிகளையும் செய்து வருகின்றோம்.

**சபையின் நிர்வாக கட்டமைப்பு, ஆளணி வளம் தொடர்பாக கூறுங்கள்?**

பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் கட்டமைப்பு ஏனைய அரச நியதிச் சபைகளைப் போன்று அமைந்துள்ளது. முகாமையாளர்களின் கீழ் முகாமைத்துவ உதவியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், ஏனைய பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். சகல உத்தியோகத்தர்களும் சபையை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கு எனக்கு உறுதுணையாகவுள்ளனர். சபையின் மாவட்ட அலுவலகங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ளதோடு, உற்பத்தி நிலையங்கள் யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், சிங்கைநகர், சரசாலை, நெடுந்தீவிலும் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்காரன் குடியிருப்பு, செல்வாரி, படப்படி, தரவன்கோட்டை, ஓலைத்தொடுவாயிலும் திருகோணமலை மாவட்டத்தில் வரோதயநகரிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் முகத்துவாரத்திலும் கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பிட்டியிலும் புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டியிலும் அமைந்துள்ளது. இவற்றை விட 54 பனங் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் இலங்கை முழுவதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பனைவள அபிவிருத்தியில் ஒரு திருப்புமுனையாக யுத்த சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக இயங்க முடியாமல் சேதமடைந்திருந்த பனைவள ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 20.07.2012 அன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு மீள இயங்க ஆரம்பித்துள்ளது. இவ் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி தொழிற்பாட்டிற்கான சகல உபகரணங்களும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கற்பகம் விற்பனை நிலையங்கள் யாழ் மாவட்டத்தில் நெல்லியடி, நல்லூர், கண்டி வீதி - யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி -யாழ்ப்பாணம், பஸ் நிலையம் - யாழ்பாணம், கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பிட்டியிலும், மன்னார் மாவட்டத்தில் பெரியகடையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு நகர், வெளிச்சவீட்டிலும், திருமலை மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும், அம்பாறை மாவட்டத்தில் கல்முனையிலும், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டியிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமகராமையிலும் அமைந்துள்ளது.

சபையின் கற்பகச்சோலைகள் (மாதிரி பனந்தோட்டங்கள்) யாழ் மாவட்டத்தில் மாமுனை, சிங்கைநகர், நெடுந்தீவு, குடத்தனையிலும் வவுனியா மாவட்டத்தில் புளியங்குளத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்றுப்புலம், கௌதாரிமுனை, முழங்காவில், அறிவியல்நகரிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளத்திலும் மன்னாரில் நறுவிலிக்குளத்திலும் அம்பாந்தோட்டையில் வீரவிலவிலும் அமைந்துள்ளது.

மனிதவள மேம்பாடு தொடர்பில் காலத்துக்காலம் பல்வேறுபட்ட பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படுவதோடு வெளிநாட்டு பயிற்சி நெறிகளுக்கும் பணியாளர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர். மனித வளத்தின் உச்சப் பயன்பாடு எமது சபையின் இலக்கினை நோக்கிய பயணத்துக்கு ஓர் ஊன்றுகோலாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் கிடையாது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**நன்றி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாரம்பரியத்தின் பெருமையை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்வோம்!




பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்தி சபை கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வெற்றிகண்டு வருகின்றது. பனைசார் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பனைசார் தொழிற்துறையில் நவீன தொழில்நுட்பங்களின் பயனைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

அதனடிப்படையில் முதலாவதாக கைதடி பனை ஆராய்ச்சி நிலையம் மீள் புனருத்தாரணம் செய்யப்பட்டது. 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டு செயற்படத் தொடங்கிய பனை ஆராய்ச்சி நிறுவனம் பல ஆராய்ச்சி முடிபுகளையும் மக்களுக்காக அர்ப்பணித்துள்ளது. பனங்கூடல் முதலாவது இதழில் பனை ஆராய்ச்சி நிலையத்தின் வினைத்திறன்மிக்க செயற்பாடு பற்றிய ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது. அவ்வாறு இங்கும் ஆராய்ச்சியாளர்கள் இருவரின் ஆய்வு விளக்கங்கள் மற்றும் முடிபுகளைத் தருகின்றோம்.

## பனங்களி உணவுப் பாதுகாப்பு

பனம் பழக்களியை உணவு நற்காப்புப் பதார்த்தத்தைப் பயன்படுத்தி பாதுகாத்தல் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பனை அபிவிருத்தி சபையின் உற்பத்திப் பிரிவுப் பகுதியால் போத்தலில் அடைக்கப்பட்ட பனம் பழக் களியில் பின்வரும் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன.

1. காலாவதி திகதிக்கு முன்னர் நிறமாற்றம்.
2. நுகர்வு எல்லைக்கு அதிகமான உணவு நற்காப்புப் பதார்த்தம்
3. அதிக நுண்ணங்கிகளின் எண்ணிக்கை
4. பனம் பழக்களியிலிருந்து நீர் வேறு பிரிதல்.




ஆய்வாளர்:
செல்வி.ரோபிகா.கைலாயலிங்கம்



மேற்கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எமது நுண்ணுயிரியல் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் பிரச்சினைகளுக்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டு அதற்கான தீர்வுகளாக பின்வருவனவற்றை முன்வைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பூச்சி தாக்கத்துக்கு உட்படாத பனம் பழத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

2. பழத்தை உரிக்க முன்னர் மேற்பரப்பு ஓடும் நீரினாலும் பின்னர் கொதி நீரினாலும் கழுவப்பட வேண்டும்.

3. விதையிலிருந்து களி எடுக்கும்போது ஒரு விதைக்கு 100 மி.லீ. சுடுநீர் என்ற வீதத்தில் சேர்த்துக் களியைப் பெற வேண்டும்.

4. பெறப்பட்ட களியின் அமிலத் தன்மையை சிட்ரிக் அமிலத்தை (1வீதம்) சேர்ப்பதன் மூலம் 3.5 - 4 இற்கு இடையில் பேண வேண்டும்.

5. பனம் பழக்களியிலிருந்து நீர் வேறு பிரிதலைத் தடுப்பதற்கு சாதாரண கிரைண்டரில் குறைந்த வேகத்தில் 5 நிமிடம் அரைக்க வேண்டும்.

6. பின்னர் பனம் பழக்களியை நீர்த்தொட்டியில் வைத்து $90^0$C க்கு மூடிய நிலையில் கலக்கிக்கொண்டு வெப்பப்படுத்த வேண்டும்.

7. நீர்த்தொட்டியில் இருந்து எடுத்து $80^0$C வரும்வரை கலக்கிய பின் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட அளவில் தெரிவுசெய்யப்பட்ட உணவு நற்காப்புப் பதார்த்தத்தை இட்டு நன்றாகக் கலக்க வேண்டும்.

8. துப்பரவு செய்யப்பட்டு 30 நிமிடங்கள் $100^0$C அல்லது கொதிநீரில் அவித்த கண்ணாடிப் போத்தல்களினுள் மேற்குறிப்பிட்ட பனம் பழக்களியை விரைவாக வளியிடைவெளியின்றி ஊற்றி இறுக்கமாக மூடுதல் வேண்டும்.

9. போத்தல்களினுள் அடைக்கப்பட்ட களியினை $80^0$Cயில் உள்ள நீர்த் தொட்டியில் 30 நிமிடங்கள் வைத்துப் பாய்ச்சற்படுத்த வேண்டும்.

10. அதன் பின்னர் நீர்த்தொட்டியில் இருந்து எடுத்து அறை வெப்பநிலைக்கு வரும் வரை ஆறவிட வேண்டும்.

11. பாதகமான நுண்ணங்கிகள் களியுடன் சேர்வதைத் தடுக்க தொழிற்சாலைத் தேவை களுக்குப் பாவிக்கப்படும் நீர், நுண்ணுயியிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள் ளப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

12. தனிநபர் சுகாதாரம் மற்றும் தொழிற்சாலைச் சுகாதாரம் ஆகியன உறுதியாகப் பேணப்படல் வேண்டும்.

# பனங்களி சேர்ந்த யோகட்

பனங்களி உடலாரோக்கியத்துக்குத் தேவையான உயிரிரசாயனக் கூறுகளையும், விட்டமின்-A, நார்ச்சத்து, ஒக்கிஜனேற்றற் தடுப்பான் (anti-oxidants) உட்பட பல ஊட்டச் சத்துக்களையும் நிறமூட்டிகளையும் கொணடுள்ள ஒரு சிறந்த இயற்கைவளமாகும்.

இருந்தபோதும் பனங்களியில் உள்ள கயர்ப்புத்




ஆய்வாளர்:
செல்வி.சங்கீதா ஸ்ரீஸ்கந்தராஜா



தன்மை காரணமாக பெருமளவான பனங்களி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. பனங்களியில் உள்ள கயர்ப்புத் தன்மையை உணரமுடியாதவகையில் அதனை வேறு பதார்த்தங்களையோ சுவையூட்டிகளையோ பயன் படுத்தி மறைக்கும் வகையிலமைந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதால் பனங்களியின் பயன்பாட்டை அதிகரிக்க முடியும்.

கடந்த 25 வருடங்களாக யோகட்டிற்கான சந்தை வாய்ப்பு உலகளவில் பெருமளவு அதிகரித்துள்ளதுடன் நுகர்வோரும் ஊட்டச் சத்துக் கூடிய உணவுப் பொருட்களிலேயே அதிக நாட்டம் கொண்டவர்களாக மாறிவருகின்றனர். பனங்களி யோகட்டில் பனங்களியும் பாலும் சேர்க்கப்படுவதால் ஊட்டச்சத்து மிக்க ஒரு உணவாக இது அமைகின்றது.

**நன்மைகள்:**

பனங்களியில் உள்ள பெக்டின் யோகட்டின் கட்டமைப்பை மேம்படுத்தும். ஃப்லபெல்லிஃபெரின் மூலக்கூறு குருதியில் குளுக்கோஸ் சேரும் வீதத்தைக் கட்டுப்படுத்தும். விட்டமின்-A உம் யோகட்டில் சேரும்.

பாலும் பயன்படுத்தப்படுவதால் பாலிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டச் சத்துக்களும் கிடைக்கும்.

வேறு ஒரு உணவுப்பொருளாக மாற்றும்போது பனங்களியின் கயர்ப்புத் தன்மையை மறைக்கக்கூடியதாக இருக்கும்.

பனைசார் உணவு உற்பத்தியில் ஒரு புதிய பரிணாமமாய் இது இருக்கும்.

### நோக்கம்:

பனங்களி சேர்க்கப்பட்ட யோகட்டை உற்பத்தி செய்து பனங்களியின் உபயோகத்தையும் சந்தைப்படுத்தலையும் அதிகரித்தல்.

### செயன்முறை:

இவ்வாராய்ச்சியில் சுவிஸ் யோகட், செற் யோகட், ஜெலி யோகட், ட்விஸ்ற் யோகட் என நான்கு வகையான யோகட் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு வகையிலும் வெவ்வேறு அளவு பனங்களி சேர்க்கப்பட்ட ஐந்து கலவைகள் தயாரிக்கப்பட்டு அவற்றை இங்குள்ள உத்தியோகத்தர்களிடையே புலன் மதிப்பீட்டுக்கு உற்படுத்தி அந்தந்த வகை யோகட்டுகளில் சிறந்த சேர்மானக் கலவை தெரிவு செய்யப்பட்டு மேலதிக ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வகை யோகட்டிலும் உள்ள நீர்க் கொள்ளளவு, தாதுப்பொருட்கள், மாச்சத்து, நார்ப்பொருட்கள், கொழுப்பு, புரதம் போன்ற ஊட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணுயிரியல் காரணிகள் என்பனவும் அவற்றின் பாவனைக் காலமும் பரிசோதிக்கப்பட்டன. மேலும் இலங்கைத் தரக் கட்டளைச் சபையின் 824:1989ஆம் இலக்க கட்டளைக்கமைவாக யோகட் தயாரிப்பதற்கு ஏற்ப ஒரு உற்பத்திசாலையை அமைக்கத் தேவையான நிதி மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான அனைத்தும் ஆராயப்பட்டு அதனைச் செயலில் கொண்டு வருவதற்கான செயலாக்க ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

### தீர்வுகளும் விளக்கமும்

**பனங்களி யோகட்டில் உள்ள மூலக்கூறுகள்**

| மூலக்கூறுகள் | சுவிஸ் யோகட் | ஜெலி யோகட் | ட்விஸ்ட் யோகட் |
|---|---|---|---|
| புரதம் | 6.12 | 7.77 | 2.48 |
| கொழுப்பு | 0.71 | 0.90 | 2.47 |
| நீர்ப்பதன் | 55.59 | 66.48 | 61.38 |
| மொத்தக் கனிம அளவு | 0.56 | 0.53 | 0.92 |
| அமிலகனிம அளவு | 0.15 | 0.46 | 0.29 |
| நார்ப்பொருள் உள்ளடங்கலாக காபோவைதரேற்று | 36.87 | 23.86 | 32.46 |

## பதநீர் மகிமை!

பனை மரத்தில் நுங்குப் பிஞ்சு உருவானதும், அதை நாரைக் கட்டி, வளர்ச்சியை கட்டுப்படுத்துவார்கள். பிஞ்சு ஓரத்தில் லேசாக கீறிவிட்டு, தினமும் மூன்று முறை மரம் ஏறி, அந்த பிஞ்சைத் தட்டி அழுத்த, சொட்டுச் சொட்டாக மண் பானையில் பால் (கள்) இறங்கும். இப்படி ஒரு மரத்தில் மூன்று மாதம் வரை பால் எடுக்கலாம். அந்த பாலில் சுண்ணாம்பு சேர்த்தால் பதநீர் தயார்.

சில இடங்களில் மண்பானை அடியில் சுண்ணாம்பைப் பூசிக் கட்டி விடுவார்கள். இதனால் மரத்திலிருந்து பானையை இறக்கும்போதே பதநீர் தயாராகவிருக்கும். பதநீரில் சோறு சமைக்கலாம், பொங்கல் வைக்கலாம், கொழுக்கட்டை தயாரிக்கலாம்,

மேகநோய் இருப்பவர்கள், 40 நாட்கள் இடைவிடாது பதநீர் அருந்தி வர அந்த நோய் பாதிப்பிலிருந்து விடுபடலாம். பதநீரில் இருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு, ஆகியவற்றுக்கும் நோய் தீர்க்கும் குணங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனஞ்சாராயமா, பனங்கட்டியா மக்களுக்கு வேண்டும்?

யாழ்ப்பாணம் வடமராட்சியிலுள்ள திக்கம் வடிசாலை செயலிழந்துள்ளது. திக்கம் வடிசாலையின் ஊழியர்கள் 23 பேர் 2014 பெப்ரவரி முதல் கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் "வேலைக்கு வரவேண்டாம்" என இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது உத்தியோகபூர்வமான அறிவித்தல் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் சேர்த்து, திக்கம் வடிசாலையை நம்பி சீவல் தொழில் செய்பவர்கள் ஏறத்தாழ 600 பேர் வரை வருமானத்தை இழந்துள்ளனர்.



திக்கம் வடிசாலையை நிர்வகித்துவரும், வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் இயக்குநர் சபை, கடந்த ஆண்டு 2013.11.18ஆம் திகதிய கூட்டத்தில் திக்கம் வடிசாலை தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:

1. மதுசாரம் வடிக்கும் பொறித்தொகுதி செயலிழந்துள்ளது. 2. மதுசாரத்தை களஞ்சியப்படுத்தி வைக்க போதிய இடவசதியில்லை. 3. சாராயம் விற்பனை குறைந்துள்ளது. 4. கள் வழங்கும் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தமுடியவில்லை. 5. மதுவரித் திணைக்களம் விடுக்கும் கோரிக்கைக்கு அமைவாக மதுசாரத்தை தரமானதாக தயாரிக்க முடியாது.

திக்கம் வடிசாலையின் ஒப்பந்தகாலம் முடிகின்றபோதும், வடிசாலையினை மேம்படுத்தவும், கொண்டு நடத்தவும் முடியாத நிலையில், 01.01.2013ஆம் திகதிய தீர்மான இலக்கம் 5.9 இற்கமைய திக்கம் வடிசாலையை முழுமையாக பனை அபிவிருத்தி சபையிடம் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

10.04.2008 வரை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் பொறுப்பில் திக்கம் வடிசாலை செயற்பட்டது. அதன் பின்னர் வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி பொறுப்பேற்றுக் கொண்டது. அப்போது நடுநிலையாளராக பனை அபிவிருத்தி சபை இருந்துள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் குறித்து, பனை அபிவிருத்தி சபை - வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணியுடன் 06.12.2013இல் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. அதன் பின்னர் 13.12.2013இல் பனை அபிவிருத்தி சபை கடிதமூலம் பதிலளிக்கையில், பனை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான சொத்துக்களை (காணி, கட்டிடம், தளபாடங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவை) பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மதுசாரம் மற்றும் பணியாளர் சம்பந்தமான பிரச்சினைகளை தம்மால் பொறுப்பேற்க முடியாது எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துள்ளது. எனினும் பொதுச்சபையைக் கூட்டி தீர்மானத்தை தமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டது.

பொதுச்சபையின் தீர்மானம் கிடைத்தபின்னர் 31.01.2014ஆம் திகதிய பின்னைய கடிதமூலமான தனது அறிவித்தலில், "பனை அபிவிருத்தி சபையானது "மகிந்த சிந்தனை" திட்டத்தின் கீழ் மதுசார உற்பத்தியினை மேற்கொள்ள முடியாதுள்ளதனால், தங்களிடமிருந்து பொறுப்பேற்கும்போது குத்தகைக்கு கொடுக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான வடிசாலையின் கட்டிடம், இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனம் போன்ற நிலையான சொத்துக்களை மட்டும் பொறுப்பேற்ற பின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தனியார் நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மேலும், தங்கள் இருப்பிலுள்ள மதுசாரத்தினை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் நீங்கள் விற்பனை செய்யவேண்டும். அதுவரை களஞ்சியப்படுத்த பனை அபிவிருத்தி சபை, மதுவரித் திணைக்களம் என்பவை உதவி செய்யும். பணியாளர்களின் விடயத்தை கூட்டு ஒப்பந்தம் செய்யும் தனியார் நிறுவனத்துடன் பேசித் தீர்மானத்திற்கு வர வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேநேரம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பனை அபிவிருத்தி சபையிடம் ஒரு கோரிக்கையை விடுத்துள்ளது. அதில், திக்கம் வடிசாலையை முழுமையாக தம்மிடம் ஒப்படைக்கும் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுமாயின், சமாசம் இது பற்றி ஆலோசிப்பதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளது.

அரசின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் 1984ஆம் ஆண்டு வடிசாலை கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் திக்கம் வடிசாலை அமைக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையும், பனை தென்னை வள, கூட்டுறவு சங்கங்களும் திக்கம் வடிசாலையின் வளர்ச்சிக்கு உதவியது. ஆரம்பத்தில் திக்கம் வடிசாலையின் மூலம் ஏனைய பனைசார் உற்பத்திகளும் சந்தைப்படுத்தப்பட்டன.

பனைசார் பொருட்களால் வடமாகாணத்தில் ஏதாவது நிறுவனம் நஷ்டமடைகிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை, பொருளாதாரத் தடைகள், போக்குவரத்துச் சிரமங்கள், தடைகள், காரணமாக உள்ளூர் வளங்களைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. உள்ளூர் உற்பத்திகளை வழங்கிய திக்கம் வடிசாலையும் இலாபத்தைக் காட்டியது. இலாபம் எங்கே போனது? தொழிற்சாலைக்கோ, தொழிலாளர்களுக்கோ இலாபம் பயன்படவில்லை.

ஒரு தொழிற்துறையின் இலாபக் கணக்கு வெறும் பணம் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அன்றைய யுத்த சூழ்நிலையில் பணமும், ஆயுதமும் மட்டுமே பலமிக்கதாக வடக்கை கட்டிப் போட்டிருந்தது. திக்கம் வடிசாலையும் அந்தக் கட்டமைப்பிற்குள்ளேயே இயங்கியது. தொழிற்துறையின் நிர்வாகக் கட்டமைப்பு, நிபுணத்துவக் கட்டமைப்பு, பௌதிகக் கட்டமைப்பு எதுவும் தொழிற்சாலையின் வளர்ச்சியை நோக்கிப் பேணப்படவில்லை.

2009இல் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரே வடக்கில் முழுமையான சிவில் நிர்வாகம் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எப்படியாகினும், தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையே கடல், வான் போக்குவரத்து மட்டுமே இடம்பெற்ற காலத்திலும் வெளியூர் சாராயங்கள் யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைத்தன. இன்றைய நிலையில் அதில் மேலும் முன்னேற்றமே ஏற்பட்டிருக்கிறது.

தரமும், கவர்ச்சியும் கையடக்குமாய் கைத்தொலைபேசி மட்டுமல்ல சாராயமும் கிடைக்கிறது. கைத்தொலைபேசியால் மக்களுக்கு 75வீதம் இலாபமும் 25 வீதம் நஷ்டமும் ஏற்படுகிறது. சாராயத்தினால் ஏற்படும் இலாபம் எவ்வளவு?

"மகிந்த சிந்தனை" போதைப் பொருட்களுக்கு இடம்கொடாது, ஆனால் தனியார்துறை மூலம் இந்த நாட்டிற்குள் "போதை" பேயாட்டம் போட்டாலும் அதைத் தடுக்க முடியாது.

**பனங்கள்ளை சாராயமாக்காமல், பனங்கட்டியாக்கினால் என்ன? மக்கள் சாராயத்தையா பனங்கட்டியையா விரும்புகிறார்கள்? மகிந்த சிந்தனையில் பனங்கட்டிக்கு இடம் உண்டு. பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சரால் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க முடியும் என்று சாராயத்தால் தாழ்ந்துபோன மக்கள் நம்புகிறார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கருணைப் படுகொலை

இந்தப் படுகொலை இடம்பெற்று 27 வருடங்கள் ஆகிவிட்டன. 1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்தப் படுகொலை இடம்பெற்றது. அரை



அமலியா சைனி அருண்

மணித்தியாலத்திற்குள் அதாவது 30 நிமிடங்களுக்குள் 63 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இரண்டே இரண்டு தமிழ் இளைஞர்கள் இந்த 63 பேரையும் சுட்டுக் கொன்றனர். ஒருவரின் பெயர் அருணா இவன் தன்னந்தனியனாக 50ற்கும் மேற்பட்டோரை சுட்டுக் கொன்றான். சூடுபட்டு உயிர் இழக்காமல் முனகிக் கொண்டிருந்தவர்களை சந்தியா என்பவன் சுட்டுக் கொன்றான். அருணா, சந்தியா என்பது அவர்களுடைய இயக்கப் பெயர்கள்.

யாழ்ப்பாணம் நகருக்கு அண்மையிலுள்ள கல்லூரி வீதியில் இந்தக் கொடூரம் இடம்பெற்றது. யாழ் இந்துக் கல்லூரிக்கும் இந்து மகளீர் கல்லூரிக்கும் இடையிலே இருந்த வீடொன்றிலேயே இக் கொலைகள் இடம்பெற்றன. அந்த வீட்டு உரிமையாளரின் பெயர் நடராஜா. அவர் யுத்தச் சூழல் காரணமாக அமெரிக்காவுக்கு குடும்பத்துடன் குடிபெயர்ந்துவிட்டார். இவ்வாறு யுத்தச் சூழலிருந்து பாதுகாப்புத் தேடி வடக்கு கிழக்கிலிருந்து கணிசமான தமிழ் மக்கள் குடும்பத்துடன் இந்தியாவின் தமிழ் நாட்டிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

கொலைகள் இடம்பெற்ற கல்லூரி வீதி வீட்டிற்கு கந்தன் கருணை என்ற பெயர் இல்லை. ஆனால் இந்தப் படுகொலை "கந்தன் கருணைப் படுகொலை" என்ற பெயராலேயே அழைக்கப்படுவதற்குக் காரணம் உண்டு. கைவிடப்பட்ட வசதியான விசாலமான வீடுகளை புலி இயக்கத்தினர் கைப்பற்றி தமது முகாமாகப் பயன்படுத்தி வந்தனர். சில முகாம்கள் சித்திரவதைக் கூடமாகத் திகழ்ந்தன. அப்படியான ஒன்று யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு அண்மையில் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்தது. இந்த வீடு அரஸ்கோ முதலாளிக்கு சொந்தமானது. அரசரட்ணம் என்பது அந்த முதலாளியின் பெயர். நல்லூர், கோவில் வீதியிலும் கந்தன் கருணை என்ற பெயரில் ஒரு மாடி வீடு இருந்தது. இந்த இரண்டு வீடுகளும்கூட புலிகளின் முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த கந்தன் கருணை வீட்டிலிருந்து இடமாற்றப்பட்டு கல்லூரி வீதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் கைதிகளேசுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால்தான் கந்தன் கருணை படுகொலை என இது அழைக்கப்படுகின்றது.

இந்தப் படுகொலைகள் நடைபெற்ற காலப் பகுதியில் புலிகளின் யாழ் மாவட்ட தளபதியாக விளங்கியவர் கிட்டு. இவரின் இயற்பெயர் சதாசிவம் கிருஷ்ணகுமார். அப்போது கிட்டுவுக்கு யாழ் இரண்டாம் குறுக்குத் தெருவில் சிந்தியா என்ற மாணவியுடன் காதல் தொடர்பு இருந்தது. சிந்தியா யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட இரண்டாம் வருட மாணவியாக அப்போது கல்வி கற்று வந்தார். சிந்தியாவின் தந்தை யாழ் பிரதான தபாலகத்தில் கடமையாற்றி வந்தார்.

கிட்டு ஆயுதம் தரித்த மெய்ப்பாதுகாவலர் சகிதம் நாளாந்தம் மாலை வேளைகளில் சிந்தியாவின் இரண்டாம் குறுக்குத்தெரு வீட்டிற்கு செல்வது வழக்கம். அன்று அதாவது 1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி மாலை சிந்தியாவை சந்திக்கச் சென்ற கிட்டுவின் வாகனத்தின் மீது கிரனைட் வீசப்பட்டது. கிட்டுவின் மெய்ப்பாதுகாவலர் 3 - 4 பேரும் ஆயுதங்கள் சகிதம் வாகனத்தில் சென்றுள்ளனர்.

மெய்ப்பாதுகாவலர் மூவர் கொல்லப்பட்டனர். மயக்கமுற்ற நிலையில் கிட்டு யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். கிட்டு உயிர் பிழைத்துக் கொண்டாலும் அவரது ஒரு கால் துண்டிக்கப்பட்டது.

அப்போது புலிகள் இயக்கத்தின் முக்கிய பொறுப்பு ஒன்றில் இருந்தவனே அருணா. கல்லூரி வீதி புலி முகாமுக்கு பொறுப்பாக இருருந்தவனே சந்தியா. 1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரெலோ இயக்கத்தையும் டிசம்பர் மாதம் ஈபிஆர்எல்எப் இயக்கத்தையும் புலிகள் தடை செய்திருந்தனர். அத்துடன் ரெலோ, ஈபிஆர்எல்எப் இயக்க முகாம்கள் மீது தாக்குதல்களையும் நடத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானவர்களை புலிகள் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர். இவர்களில் ஒரு தொகுதியினரே கந்தன் கருணை முகாமிலிருந்து கல்லூரி வீதி முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

கிட்டு மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் அருணா குதித்தெழுந்தார். ஈபிஆர்எல்எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்களே கிட்டு மீது தாக்குதல் நடத்தியிருக்க வேண்டும் என்று சந்தேகித்தார். எனவேதான் மாற்று இயக்கத்தவர்கள் சிறை வைக்கப்பட்டிருந்த கல்லூரி வீதி முகாமுக்கு சென்று அருணா வேட்டுகளைத் தீர்த்தார். ஆனால் கிட்டு மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு புலித் தலைமையில் அப்போது நிலவிய உள் முரண்பாடுகளே காரணம் என்பது பின்னர்தான் தெரியவந்தது. புலி இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்த கிட்டுவுக்கும் மாத்தையாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியின் விளைவே இந்தத் தாக்குதல். மாத்தையாவின் கையாட்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று பின்னர் சந்தேகம் பரவலாக வெளிப்பட்டது. இச் சம்பவத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தின் முழுப் பொறுப்பும் மாத்தையாவின் கைகளுக்கு மாற்றப்பட்டது.

பிற்காலத்தில் மாத்தையாவை கைது செய்து நிலத்திற்குக் கீழான சிறையில் அடைத்து சித்திரவதை செய்து பிரபாகரன் சுட்டுக் கொன்ற சம்பவம், இந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. இந்திய உளவுப் படையான றோவின் உளவாளி என்று குற்றம்சாட்டியே புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் மாத்தையாவைக் கைது செய்திருந்தார். வன்னியில் மாத்தையா சிறை வைக்கப்பட்டிருந்தபோது நாயிலும் பார்க்க மிகக் கேவலமாக நடத்தப்பட்டார் என்று வன்னிக்கு விஜயம் செய்த இந்தியப் பெண் பத்திரிகையாளரான அனிதா பிரதாப் குறிப்பிட்டிருந்தார். பிரபாகரனை பேட்டி கண்டவர் அனிதா பிரதாப். அத்துடன் சிறை வைக்கப்பட்டிருந்த மாத்தையாவை பிரபாகரனின் அனுமதியுடன் பார்வையிட்டதாகவும் அனிதா பிரதாப் குறிப்பிட்டிருந்தார். இந்த விபரங்களை (Island of Blood) இரத்தத் தீவு என்ற தனது ஆங்கில நூலில் அனிதா பிரதாப் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

கந்தன் கருணை படுகொலைகளின் பிரதான சூத்திரதாரியான அருணா இலங்கை இராணுவத்தினரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். இவரைப் படையினரது பிடியிலிருந்து விடுவிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்தவர் கிட்டு. 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி இரு சிப்பாய்களை விடுவிப்பதற்காக இரு புலி இயக்க முக்கியஸ்தர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் அருணா. மற்றைய புலி இயக்க உறுப்பினரது இயக்கப் பெயர் காமினி. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் கணவன் விஜயகுமாரதுங்கவின் முன் முயற்சியின் பேரிலேயே இந்தக் கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றது.

கந்தன் கருணைப் படுகொலை இடம்பெற்று சரியாக 4 மாதங்களின் பின்னர் இந்தியப் படை இலங்கையின் வடக்குக் கிழக்கில் நிலை கொண்டது. ஜூலை மாத இறுதியில் இந்தியப் படை நிலை கொண்டது. அக்டோபர் மாதம் 10ஆம் திகதி இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது. இந்தியப் படையினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது அருணா சுட்டுக் கொல்லப்பட்டான். மற்றைய கொலையாளியாகிய சந்தியா, முன்னாள் ரெலி என்ற தமிழ் ஆயுதக் குழுவிலிருந்து செயலாற்றியவன். அந்த இயக்கம் புலிகளால் தடை செய்யப்பட்டதையடுத்து சந்தியா தமிழகத்திற்கு சென்றிருந்தான். தமிழகத்தில் இருந்தபோது புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான். இலங்கை திரும்பியதும் யாழ்ப்பாணத்தில் புலிகளின் உளவுப் பிரிவில் இணைந்து செயலாற்றினான்.

கந்தன் கருணைப் படுகொலையின்போது கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் எரிக்கப்பட்டனவா அல்லது புதைக்கப்பட்டனவா என்பது இன்றுவரை சரிவரத் தெரியாது. ஆனால் யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளியில் சடலங்கள் எரிக்கப்பட்டதாக அப்போது தகவல்கள் வெளிவந்தன. இப்படுகொலைகள் இடம்பெற்று பல வருடங்களுக்குப் பின்னர் கல்லுண்டாய் வெளியில் மனித மண்டையோடுகளும் எலும்புக்கூடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் படுகொலைகள் குறித்து சுமார் ஒரு வார காலம் வரை புலிகள் மௌனம் சாதித்தனர். ஆனால் மெல்ல மெல்ல தகவல் கசியத் தொடங்கியதும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி அறிக்கை ஒன்றை விடுத்தனர். இச் சம்பவத்தை தமிழீழ துரோகிகளின் சதி என்று புலிகளின் அறிக்கை கூறியது.

"விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் அவர்களுக்கு காவலுக்கு நின்றவர்களின் துப்பாக்கிகளைப் பறித்துக்கொண்டு தப்பியோட முற்பட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலின்போது 18 கைதிகளும் 2 புலி இயக்க உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்." இவ்வாறு புலிகள் விடுத்த அறிக்கையின் சாராம்சம் இருந்தது. இப்படித்தான் தாம் அரங்கேற்றிய கொடூரங்களுக்கு அவர்கள் கதையளந்திருந்தனர்.

## அதிக விளைச்சல்

# சிறந்த பாரம்பரிய மரபணுக்களை இழந்துவிட்டோம்!





எமது நாட்டின் பயிர் பல்வகைமை நிலை மிக அதிகமாகும். பல்வேறு இடங்களில் வளரும் (கிழங்கு வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள், தானிய வகைகள், விலங்கு இனங்கள்) அவற்றுள் அடங்குகின்றன. அவை, மூலிகைக் குணம், போஷாக்கு என்பவற்றுக்கு அடுத்தபடியாக வெள்ளப் பெருக்கு, வரட்சி, பூச்சியினங்களால் ஏற்படும் அழிவுகள் மற்றும் நோய்களுக்கு தாக்குப் பிடிக்கும் திறன் கொண்ட பல்வேறு பூமி அமைவுகளுக்கேற்றவாறு இவை மனிதச் சூழலுக்கு ஏற்றவாறு விருத்தி செய்யப்பட்டன.

உதாரணமாக "தெவிருத்தரி" எனும் நெல் வகை நித்தமும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் பிரதேசங்களுக்கு பொருத்தமானதாக இருப்பதோடு பொக்காலி உலர்த் தன்மையுடைய வயல் நிலங்களுக்கு பொருத்தமான ஒரு நெல் இனமாக இருந்தாலும் 1960ஆம் ஆண்டின் பின்னர் இந்த நெல் இனம் பயிர்ச் செய்கைத் துறையிலிருந்தும் தூரமாகியது.

படிப்படியாக முன்னேற்றப்பட்ட நெல் வகைகள் பயிர்ச் செய்கைத் துறையை ஆக்கிரமிக்கத் தொடங்கின. தற்பொழுது முழு நெல் விவசாயத் துறையிலும் பயன்படுத்தப்படுவது முன்னேற்றப்பட்ட நெல் இனங்களாக இருப்பதால் எமது பாரம்பரிய நெல் இனங்களை நாம் இழந்துள்ளோம்.

1940ஆம் ஆண்டு கால கட்டம் வரை எமது நாட்டுப் பயிர் செய்கைத் துறையில் 600க்கும் மேற்பட்ட நெல் இனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. தற்பொழுது 95%மான வயல் நிலங்களில் பயன்படுத்தப்படுவது அதிக விளைச்சலைப் பெற்றுத்தரும் 10 வகையான நெல் இனங்கள் மட்டுமேயாகும்.

தற்கால பயிர் உற்பத்தித் துறையின் பிரதான நோக்கமாக இருப்பது பெற்றுக்கொள்ள முடிந்த விளைச்சல் எவ்வளவு என்பதேயாகும். இதன் காரணமாக அதிக விளைச்சலைத் தரும் விதை வகைகள் மீதும் உரங்கள் மீதும் அதிக கவனம் செலுத்தப்படுவதோடு பல்வேறு மரபணு தன்மைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்கிறார் கலாநிதி லயனல் வீரக்கோன்.

சிறு அளவிலான விவசாயிகளின் நிலையான பயிர்ச் செய்கையும் உணவுப் பாதுகாப்பும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கண்ட விடயங்களை அவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்வனே, 'கள்வனைப் பிடி' என்று கத்தும் கடைகெட்ட தந்திரோபாயம்

## ஜெனீவா யுத்தக்குற்றப் பிரேரணை ஒரு பார்வை



எஸ்.அருளானந்தம்
arulanantham12@gmail.com

இலங்கை மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நகல் வரைபு ஒன்றினை அமெரிக்கா அண்மையில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் முன்வைத்துள்ளது. அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டன், மொறிசீயஸ், மொன்டேக்கரோ, மசிடோனியா ஆகிய ஐந்து நாடுகள் இந்தக் குற்றப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளன. மொறிசியஸ் இந்தியாவின் பின்பலத்தோடு செயற்படும் ஒரு நாடு என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே 2012, 2013ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா இலங்கை மீதான யுத்தக் குற்றப் பிரேரணையைச் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளது. முன்னைய இரண்டு வருடங்களிலும் முன்வைக்கப்பட்ட குற்றப் பிரேரணை 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதி யுத்தம் தொடர்பானது ஆகும். தற்போதைய நகல் வரைபில் முன்னைய குற்றச்சாட்டுக்களுடன் மேலும் மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்துக் கோயில்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவத் தேவாலயங்கள மீது வேறு தனிநபர்களும் குழுக்களும் நடத்தும் தாக்குதல்கள் பற்றி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் புதிய நகல் வரைபு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிறுபான்மை மதக்குழுவினர் மற்றும் ஏனைய சிறு சமூகத்தவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றி விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்குமாறும் புதிய நகல் வரைபில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதற்கு நீதியரசர் ரவூப் ஹக்கீம் முக்கிய காரணம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேரடியாகவே அவரிடம் கடுமையான தொனியில் தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். இதனால் நீதியமைச்சரின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற நிலையிலிருந்து விலகும் என்றுதான் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நீதியமைச்சர் ஹக்கீமோ ஜனாதிபதியை தாஜா பண்ணும் நிலைக்கு சென்றிருக்கின்றார். மூன்றாவது தடவையாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி ஏற்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை வழங்குமென்று ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது அண்மைக் காலங்களில் பல்வேறு தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. முஸ்லிம் மக்களுக்கு எதிரான கேவலமான பிரசாரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஜாதிக ஹெல உறுமய, சிஹல ராவய, ராவண பலய என்ற மூன்று சிங்கள இனவாத அமைப்புகளே காரணம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சீயின் பங்காளிக் கட்சிகளே இவை. இத்தாக்குதல்கள் தொடர்பாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மணியை அண்மையில் சந்தித்தபோது எடுத்துக் கூறியிருந்தார். இதுவே அமைச்சர் ஹக்கீம் மீது ஜனாதிபதி சீறிச் சினந்தமைக்கு முக்கிய காரணமாகும்.

இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகல் வரைபு மட்டுமே இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இறுதி வரைபை இனித்தான் அமெரிக்கா வைக்கவுள்ளது. மார்ச் மாதம் 3ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமானது. எதிர்வரும் 26ஆம் திகதி இலங்கை மீதான குற்றப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் உறுப்பு நாடுகள் பங்குபற்றும். 47 அங்கத்துவ நாடுகள் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 27ஆம் திகதி குற்றப்



பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

ஐநா மனித உரிமைப் பேரவை என்றாலும் சரி, அதன் தலைவர் நவநீதம்பிள்ளை அம்மணி என்றாலும் சரி, அமெரிக்கா என்றாலும் சரி, இலங்கை என்றாலும் சரி, அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் சார்பாக பேசும் கட்சிகள் சார்ந்த தரப்புக்கள் என்றாலும் சரி எல்லாம் ஒரு பக்கச் சார்பாகத் தான் செயற்படுகின்றன. ஈராக்கிய ஆக்கிரமிப்பில் 5 இலட்சம் சிறுவர்கள் உட்பட சுமார் 10 இலட்சம் பேரை அமெரிக்கா கொன்றொழித்தது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா அட்டூழியங்களைப் புரிந்தது இன்னமும் புரிகிறது. அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தாக்குதல்களை நடத்தின.

இவற்றையெல்லாம் விசாரித்து அமெரிக்காவுக்கு தண்டனை வழங்கமாட்டாத ஐ.நா.மனித உரிமைப் பேரவையும் ஹெய்க்கிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் பெரும்பாலும் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் மீது விசாரணைகளை நடத்தியிருக்கின்றன. ஹொங்கோ, உகண்டா, சூடான், கென்யா, லிபியா, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, டுனீசியா, எகிப்து, லைபீரியா ஆகிய ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களே பெரும்பாலும் யுத்தக் குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வால்கன் பிரதேச நாடான யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதி ஸ்லோவோடன் மிலோசோவிக் யுத்தக் குற்ற நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். இவையெல்லாம் ஐ.நா.வுக்கு அதிக நிதி வழங்கிவரும் ஆதிக்கம் கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேலாதிக்க சக்திகளின் விருப்பு, வெறுப்புக்கே இடம்தருகின்றன.

பேரழிவு யுத்த ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கின்றது என்று கூறித்தான் அமெரிக்கா ஈராக்கில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டது. ஆனால் இன்றுவரை பேரழிவு யுத்த ஆயதங்களை ஈராக்கில் அமெரிக்காவால் கண்டுபிடிக்க முடியவில்லை. அமெரிக்கா என்ன சர்வதேசப் பொலிஸ்காரனா?

மத்திய நாடுகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட அமெரிக்காவைத் தண்டிப்பது யார்? நவநீதம்பிள்ளையின் கண்களுக்கு அமெரிக்கா பிரிட்டன் போன்ற மேற்கத்தைய வல்லரசுகளின் அத்துமீறல்கள் உறுத்துவதே இல்லை. பிரிட்டன் எத்தனை ஆசிய, ஆபிரிக்க நாடுகளை ஆக்கிரமித்து சூறையாடியது. இவை குறித்து யாராலும் கேள்வி கேட்க முடியவில்லை.

இலங்கை அரசாங்கமும் புலிகளின் சர்வதேச தொங்கு தசைகளான அமைப்புகளும் இன்று நியாயங்கள் பேசுகின்றன. இலங்கை அரசு மகுடம் சூட்டுவது போல இலங்கையின் அரச படையினர் வீரமிக்கவர்கள் அல்லர். இந்தப் படையினர் இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல, அதற்கு முன்னரும் கூட கண்மண் தெரியாது அப்பாவி மக்களைக் கொன்றொழித்திருக்கிறார்கள். மாவீரர்கள் என்று தங்களுக்கு மகுடம் சூட்டிக் கொண்ட புலிகள் சிறுவர்களைப் பிடித்து பலாத்காரமாக யுத்த முனைக்கு அனுப்பினார்கள். அப்பாவி மக்களுக்குள் மறைந்து நின்றுகொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினர் மீது தாக்குதல் நடத்தினார்கள். அரச படையினரும் தமது பங்கிற்கு மக்களைக் கொன்றொழித்தார்கள். கொக்கட்டிச்சோலை, மைலந்தனை வவுனியா உட்பட பல இடங்களில் அப்பாவித் தமிழ் மக்களைப் படையினர் வகைதொகையின்றி கொல்லவில்லையா? கந்தன் கருணைப் படுகொலைகள் போல எத்தனை இடங்களில் புலிகள் தமிழர்களைக் கொன்றொழித்தார்கள். புலிகளிடமும் அரச படையினரிடமும் வதை முகாம்கள் இருக்கவில்லையா? அப்பாவித் தமிழ் மக்களிடமிருந்து புலிகள் வரி வசூலிக்கவில்லையா? தமிழ்ப்புலிகள் அப்பாவி முஸ்லிம், சிங்கள மக்களை கொன்று குவித்திருக்கிறார்கள். முஸ்லிம்களிலுள்ள காடையர்களும் கிழக்கில் தமிழ் கிராமங்களைத் தாக்கி மக்களைக் கொன்றிருக்கிறார்கள். கிழக்கில் வீரமுனைக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 400இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை முஸ்லிம் காடையர்கள் கொன்றிருக்கிறார்கள். உயிருக்குப் பயந்து அவ்வப்போது பல இடங்களில் தஞ்சமடைந்த வீரமுனைத் தமிழ் மக்களை 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பல சந்தர்ப்பங்களில் தாக்கிக் கொன்றிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று புலிகளுக்கு சாமரம் வீசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று யுத்தக் குற்ற விசாரணையைக் கோரியிருக்கிறது. வட மாகாண முஸ்லிம்களை புலிகள் சொத்துப் பத்துகளை எல்லாம் பறித்துவிட்டு வெளி மாவட்டங்களுக்கு விரட்டியபோது மௌனம் சாதித்த தமிழ் கட்சிகளுக்கு அவையெல்லாம் மனித உரிமை மீறல்கள் என்று தெரியவில்லையா? தமிழ் கட்சித் தலைவர்களான அல்பிரட் துரையப்பா, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், சாம் தம்பிமுத்து உட்பட நாற்பதிற்கும் மேற்பட்டவர்களை புலிகள் கொல்லவில்லையா? வட மாகாணத்திலிருந்து சுமார் 78ஆயிரம் முஸ்லிம் மக்களை 72 மணி நேரத்திற்குள் புலிகள் விரட்டினார்களே. அப்போதெல்லாம் தமிழ் கட்சிகள் மௌனம் சாதித்தது ஏன்?

இந்தத் தடவை ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இறுதிப் பிரேரணையில் பல மாற்றங்கள் நிகழ்த்தப்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. இருந்தாலும் யுத்தக் குற்றப் பிரேரணையை முன்வைக்கும் அமெரிக்கா, அதனை முழுமையாக நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றின் நிலைப்பாடுகள் வஞ்சகத்தனமானவை. பிரதான தமிழ் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு யுத்தக் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டு மென்று வலியுறுத்தியுள்ளது. அத்துடன் இலங்கை மீதான பிரேரணையை

**இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல மூன்று தசாப்த யுத்த காலத்தில் யுத்தக் குற்றங்கள், நிறையவே இடம்பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் விசாரிக்கும் தகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட யுத்தக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் சர்வதேச நிறுவனங்களுக்குக் கிடையாது.**

இலகுபடுத்தி குறைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் அமெரிக்காவின் காலைப் பிடித்து கெஞ்சியுள்ளது. பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகியவையும் இலங்கை அரசின் அணுகுமுறையை விமர்சித்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் ராஜதந்திர வழிமுறைகள் குறித்து புதிய அணுகுமுறை கையாளப்பட வேண்டுமென்று கூறுகிறார். இவை அனைத்தினரது நோக்கங்களும் நடவடிக்கைகளும் “கள்வனே, கள்வனைப் பிடி” என்று கத்தும் கடைகெட்ட தந்திரத்தையே புலப்படுத்துகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தத்திற்கு மேலதிகமாக வழங்கப் போகிறோம் என்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல் நடத்தப் போகிறோம் என்றது. யுத்தக் குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணையை நடத்துவோம் என்றது. ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. அப்படியெல்லாம் நடைபெற்றாலும்கூட வீரமிக்க படையினர் அப்பாவிகளைக் கொன்று குவிக்கவில்லை என்றுதான் கூறுவார்கள். இலங்கை இராணுவ தரப்பினர் மீது யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல் குற்றங்கள் எல்லாம் பல தரப்பினரால் இன்னமும் முன்வைக்கப்படுகின்றன. இதுபற்றி விசாரணை நடத்த இராணுவத் தரப்பு விசாரணைக்குழு ஒன்றை நியமித்தது. ஆனால் விசாரணையின் இறுதி அறிக்கையில் இராணுவத் தரப்பினர் குற்றமற்றவர் என்றுதான் பதிலளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதியாகவும் நேர்மையாகவும் விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க உள்ளக விசாரணை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும். நேர்மையாகவும் நியாயமாகவும் இலங்கை அரசாங்கம் அதைச் செய்யுமா என்பதுதான் இன்றைய கேள்விக்குறி.**

இப்படித்தான் அமெரிக்கா சர்வதேச விசாரணைக் குழுவொன்றை நியமித்தாலும் இலங்கை உள்ளக விசாரணை நடத்தினாலும் எல்லாமே உண்மைகளை மூடி மறைக்கும் முயற்சியாகவே அமையும். 2006ஆம் ஆண்டு மூதூரில் பட்டினிக்கெதிரான அமைப்பு என்ற பிரான்ஸ் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் 17 ஊழியர்கள் முழந்தாளில் நிற்கவைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் 16 பேர் தமிழர்கள் ஒருவர் முஸ்லிம். கொலைகாரர்கள் அரசாங்கப் படையினர்தான். விசாரணைக் கமிஷனைக்கூட அரசாங்கம் நியமித்தது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கும் தைரியம் அரசுக்கும் இல்லை. அரசு அமைத்த விசாரணைக் குழுவுக்கும் இல்லை.

2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதியுத்தம் முடிவடைந்து இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் ஐ.நா.செயலாளர்நாயகம் பான்கீ மூன் கொழும்புக்கு வருகைதந்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். 2009 மே 23ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற பேரில் இருவருமே கூட்டறிக்கை ஒன்றினையும் வெளியிட்டார்கள்.

"இலங்கை சர்வதேச கடப்பாட்டிற்கு அமைவாகவும், சர்வதேச மனித உரிமை தரங்களுக்கு ஏற்பவும் இலங்கையின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், முன்னேற்றவும் இலங்கை தனது வலுவான கடப்பாட்டினை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறது. சர்வதேச மனித உரிமை மற்றும் மனித உரிமை சட்ட மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய வழிமுறையின் முக்கியத்துவம் பற்றி செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். இந்த விடயங்கள் குறித்து ஆராய இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்." என்று அந்த கூட்டறிக்கையின் இறுதிப் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உறுதி மொழியின் அடிப்படையில்தான் தனக்கு ஆலோசனை வழங்க தருஸ்மன் தலைமையிலான நிபுணர்களின் குழுவொன்றை செயலாளர் நாயகம் நியமித்தார். 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இந்த நிபுணர் குழு நியமிக்கப் பட்டிருந்தது. இந்த நிபுணர்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில்தான் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மறறும் மனிதாபிமான மீறல்கள் தொடர்பான குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. அமைப்புகள் அங்கலாய்க்கின்றன.

யுத்தக் குற்றங்கள் பற்றி விசாரிப்பதற்கான ரோம் சமவாயத்தில் இலங்கை கைச்சாத்திட வில்லை. எனவே ரோம் சமவாயத்தில் இலங்கை ஓர் அங்கத்துவ நாடல்ல. ஆனால் யுத்தக் குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த நாடொன்று சம்மதிக்கும் பட்சத்தில் அவ்வாறான விசாரணை ஒன்றினை நடத்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் முடியும். ஆனால் இன்று யுத்தக் குற்றங்கள் பற்றி விசாரரிக்க ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கோ அதிகாரம் இல்லை என்று கத்துபவர்கள் அன்று அவ்வாறானதொரு கூட்டறிக்கையில் கைச்சாத்திட்டது ஏன்?

இலங்கையின் இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல மூன்று தசாப்த கால யுத்த காலத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் எல்லாம் நிறையவே இடம்பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் விசாரிக்கும் தகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட யுத்தக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் சர்வதேச நிறுவனங்களுக்குக் கிடையாது. வீரமிக்க படையினர் என்று கூறிக்கொண்டு யுத்த களத்தில் நின்ற படை மேலதிகாரிகளை இராஜதந்திர உயர் பதவிகளுக்கு நியமிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் உண்டா என்பது நியாயமான கேள்வியே. இருந்தாலும் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தினால் மூவின மக்களுமே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இவைபற்றி நீதியாகவும் நேர்மையாகவும் விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க உள்ளக விசாரணை ஒன்றினை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். நேர்மையாகவும் நியாயமாகவும் இலங்கை அரசாங்கம் அதைச் செய்யுமா என்பதுதான் இன்றைய கேள்விக்குறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் கல்வி அபிவிருத்தி

யுத்தம் மையம் கொண்டிருந்த வட மாகாணத்தில் பல்வேறு இழப்புகளை மக்கள் சந்திக்க வேண்டியேற்பட்டது. கல்வியில் முன்னிலை வகித்த வட பகுதி பாரிய பின்னடைவைச் சந்தித்தது. நூற்றுக் கணக்கான பாடசாலைகள் செயலிழந்தன. வடக்கில் 1047 பாடசாலைகள் இயங்கி வந்தன. யுத்தம் முடிவுக்கு வந்து நான்குக்கு மேற்பட்ட வருடங்கள் கழிந்து விட்டபோதிலும் 976 பாடசாலைகளே செயற் படுகின்றன. 2012ஆம் ஆண்டில் 14,578 ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். மாணவர்களின் எண்ணிக்கை 255,000 ஆக இருந்தது.

கிளிநொச்சியில் 99 பாடசாலைகள் செயற்படுகின்றன. இப் பாடசாலைகளில் 29ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சுமார் 1710 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். சத்துணவுத் திட்டம் கிளிநொச்சிப் பாட சாலைகளில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுகிறது. இங்கு பாடசாலை நடைபெறும் நாட்களில் பால், முட்டை, மதிய உணவு ஆகியவை வழங்கப்படுகின்றனவாம்.

இடைநடுவில் பாடசாலை களை விட்டு விலகும் மாணவர் களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளன. 2011இல் 440 மாணவர்கள் இடைநடுவில் பாடசாலைகளை விட்டு விலகினர். 2012இல் இந்த எண்ணிக்கை 352ஆகவும் 2013இல் இது 208 ஆகவும் குறைவடைந்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த "வடக்கு, கிழக்கு மாணங்களில் சமூக பொரு ளாதார அபிவிருத்தி" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் இந்தப் புள்ளிவிபரங்கள் முன்வைக்கப்பட்டன. யாழ் பல்கலைக்கழக விவசாய பீடப் பேராசிரியர் ஜி.மிகுந்தன் இத் தகவலை வெளியிட்டிருந்தார்.

# யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு கொழும்பின் சிங்கள இரத்தம்

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் யாழ் இரத்த வங்கியில் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் பவானி பசுபதிராஜா விடுத்த வேண்டுகோளையடுத்து கொழும்பிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு அவசரமாக பல நூற்றுக்கணக்கான பைந் இரத்தம் அனுப்பிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் இன்றைய சனத்தொகை நிலவரத்துக்கேற்ப ஏனைய சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களைவிட அதிகளவில் தமிழர்களே வாழ்கிறார்கள். வடக்கின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அவசர சிகிச்சை தேவைப்படும் ஆபத்தான நோயாளர்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ் நோயாளர்களேயாவர்.

கொழும்பு இரத்த வங்கியில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் இரத்தம் ஒப்பீட்டளவில் ஏனைய தமிழ், முஸ்லிம் இனத்தவர்களை விடச் சிங்கள இளைஞர்களால் வழங்கப்பட்டவையாகும். யாழ்ப்பாண வைத்தியசாலை இரத்த வங்கியில் நாளாந்தம் பாவனைக்கென 225 பைந் இரத்தம் சேமிப்பில் வைக்கப்பட்டிருப்பது வழக்கமென்று யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். இது திடீரெனக் குறைவடைந்தமையாலேயே கொழும்பிலிருந்து இரத்தம் அனுப்பி வைக்கப்பட்டது. இன்னொரு வகையில் பார்த்தால் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட சிங்கள இரத்தம், யாழ்ப்பாணத் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்கப் பயன்பட்டுள்ளது. இது மாத்திரமல்ல, யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு குடாநாட்டிலுள்ள படைத்தரப்பினரும் மாதாந்தம் இரத்தம் வழங்கி வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. அதுவும் சிங்கள இரத்தம்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசியல் ஒரு அழுக்கு" என்கிறார் ஆனந்தசங்கரி

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டுவருவது தொடர்பாகவுள்ள நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதினால் பாதிக்கப்படுவோர் தொடர்பாக விளக்கமளித்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கடிதமொன்றை மார்ச் 4ஆம் திகதி அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், இதுவரையில் அரசியல் ஒரு அழுக்கு நிறைந்த விளையாட்டு என்பதையும் தங்களுடைய இலக்கை அடைய ஒருவர் எவ்வளவு தூரம் தன்னைத் தாழ்த்திக்கொள்வார் என்பதையும் அறிந்திருப்பீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சட்டக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலிருந்து நாம் ஒருவரையொருவர் அறிந்திருந்தும் முதல் தடவையாக இக்கடிதத்தை எழுதுகிறேன். மாகாணசபைத் தேர்தல் முடிந்து சம்பிரதாயப்படி முதல் கூட்டம் கூட்டப்படுவதற்கு முன்பு நீங்களும் சில நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் ஒரு குழுவாக கிளிநொச்சிக்கு வந்தது ஏன் எனத் தெரியவில்லை.

நான் உங்களிடம் கேட்கும் ஒரேயொரு கேள்வியானது நான் ஏன் புறக்கணிக்கப்படுகிறேன்? நான் புறக்கணிக்கப்படுவதை யார் விரும்புகிறார்கள்? அவர்கள் இதனால் அடையும் இலாபம் என்ன? பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறார்களா? அல்லது தங்கள் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற விரும்புகிறார்களா? என்றும் தனது கடிதத்தில் ஆனந்தசங்கரி கேட்டுள்ளார்.

## கைது செய்யப்பட்ட தாய் பூஸாவிற்கு, மகள் சிறுவர் நன்னடத்தைப் பிரிவிற்கு

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் வியாழக்கிழமை மார்ச் 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட தாய் பூஸா முகாமிலும் மகள் நன்னடத்தை இல்லத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிசாரால் தேடப்பட்டுவரும் குற்றவாளி ஒருவரைத் தனது வீட்டில் தங்க வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இப் பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

திருமதி. பாலேந்திரன் ஜெயக்குமாரி என்ற பெண் தனது இரண்டு மகன்களை புலிப் போராளிகளாக யுத்தத்திலும், இன்னொரு மகனை காணாமல்போனோர் பட்டியலிலும் இழந்துள்ளார். ஒரேயொரு மகளான 14 வயது விபூசிகாவுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற விசாரணையின் பின்னர் அவர்கள் தடுப்புக்காவலில் உள்ளனர்.

குற்றவாளி ஒருவரைத் தேடிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது அந்த நபர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததையடுத்து, அந்த உத்தியோகத்தர் காயமடைந்ததாகவும் பொலிசாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கைது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. சம்பந்தப்பட்ட பெண் காணாமல் போனோர் தொடர்பான போராட்டங்களில் கலந்துகொண்டவர் என்பதற்காகவே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், இது திட்டமிட்டதொரு நாடகம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

## நலன்புரி நிலையக் காணிகளை அரசு வாங்கி, காணி அற்றோருக்கு வழங்கும்

வடக்கில் நலன்புரி நிலையங்களில் வாழும் 1223 குடும்பங்களை மீள் குடியமர்த்துவது தொடர்பில் மார்ச் 14ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் இல்லத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வட மாகாண ஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நலன்புரி நிலையங்களிலுள்ள காணி அற்ற 900 குடும்பங்களுக்கு அரச செலவில் காணி வாங்கியும், ஏனையோர்களை அவர்களது சொந்த இடங்களிலும் குடியமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

நலன்புரி முகாம்கள் அமைந்திருக்கும் காணிகளை கொள்வனவு செய்து அக்காணிகளில் காணி அற்றவர்களைக் குடியமர்த்துவது தொடர்பான திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீனவர்களே கடல் வலய சட்டத்தை மீறாதீர்கள்!

சட்டவிரோதமான முறையில் ஏனைய நாடுகளின் கடற்பரப்புகளுக்குள் ஊடுருவி செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சியினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"இலங்கை மீனவர்கள், ஏனைய நாடுகளின் கடற்பரப்புகளுக்குள் ஊடுருவி செல்வதால் அந்நாடுகளின் அதிகாரிகளினால் கைது செய்யப்படுவது தொடர்பாக அடிக்கடி அறிய முடிகின்றது. விசேடமாக இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில் உள்நாட்டு மீனவர்கள் ஏனைய நாடுகளின் கடல் பிராந்தியத்திற்குள் சட்டவிரோதமாக நுழைவது அந்த பேச்சுவார்த்தைக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையும். அதுமாத்திரமல்ல, கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான சர்வதேச மற்றும் வலய நியதிகள் மற்றும் விதிமுறைகளின்படி ஏனைய நாடுகளின் கடல் எல்லைகளில் சட்டவிரோதமாக மீன்பிடித்தல் தண்டனை பெறக்கூடிய பாரிய குற்றமாகும். இந்த குற்றத்தைத் தொடர்ந்தும் இலங்கை கடற்றொழிலாளர்கள் செய்து வருவதால் வெளிநாட்டுச் சந்தைக்கு மீன்களை ஏற்றுமதி செய்யும் போது கடும் கட்டுப்பாடுகளுக்கும் முகம்கொடுக்க நேரிடுகின்றது. 2013ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள திருத்த சட்டத்தின் படி சர்வதேச கடலில் அனுமதிக்கப்பட்ட உரிமம் இன்றி மீன்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி பெற்றிருந்தாலும் ஏனைய நாடுகளின் சொந்த வர்த்தக வலயங்களுக்குள் அனுமதியின்றி நுழைவதோ அல்லது மீன்பிடித்தல் என்பது தடையாகும். இந்த தடைகளை மீறும் குற்றத்திற்காக இரண்டு வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கு குறையாத குற்றப்பணம் செலுத்த வேண்டிவரும். அதற்கு மேலதிகமாக அந்த குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து உபகரணங்களும் அரசுடமையாக்கப்படும்.

இதனை மீறி அந்நாடுகளின் கைது செய்யப்பட்டால் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தினால் இது விடயத்தில் தலையிடவோ அல்லது இதற்கு நிவாரணங்களை மேற்கொள்ளவோ முடியாது" என்றும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநகரில் அமைந்துள்ள மீன்வலைத் தொழிற்சாலைக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மார்ச் 13ஆம் திகதி விஜயம் செய்து தொழிற்சாலையின் நடவடிக்கைகளை ஆராய்ந்தார். இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய இயந்திரங்களை உரியமுறையில் பயன்படுத்தி தொழிற்துறையை மேம்படுத்துமாறு தொழிலாளர்களிடம் அப்போது அமைச்சர் கேட்டுக்கொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32 இந்திய மீனவர்களும் அவர்களது படகுகளுடன் விடுவிக்கப்பட்டனர்

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட வேளை இலங்கை கடற்படையினரால் மார்ச் 3ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 32 இந்திய மீனவர்களும் மார்ச் 14ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையே மார்ச் 25ஆம் திகதி இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில், இரு நாடுகளினதும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்வது குறித்து உடன்பாடொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே மார்ச் 13ஆம் திகதி நடைபெறுவதாகவிருந்த இப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எட்டு இந்திய வியாபாரிகள் யாழில் கைது

சுற்றுலா விசாவில் வந்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது எட்டு இந்திய வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி யொன்றில், புடவை வகைகளுடன் தங்கியிருந்த இந்த இந்தியர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

## யானைக்கும் மனிதர்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பனைமர வேலி

பனை மரங்களைக் கொண்டு வேலியை அமைப்பதன் மூலம் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் யானைகள் வருவதை நிரந்தரமாகத் தடுக்க முடியும் என்று இந்த ஆய்வில் ஈடுபட்ட இலங்கையின் ஜனதாக்ஷன் எனும் அமைப்பும் பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிராக்டிகல் ஆக்ஷன் எனும் அமைப்பும் தெரிவித்துள்ளன.

முட்கம்பி அல்லது மின்சார வேலிகளை அமைப்பதற்கான செலவு அதிகமாகவுள்ளது. அத்துடன் இத்தகைய வேலிகளை பராமரிப்பதிலும் சிரமம் உள்ளது. பனைமரங்களைக் கொண்டு இயற்கையான முறையில் வேலி அமைப்பது மிகவும் நீண்ட காலத்திற்கு பயன்மிக்கதாக இருக்கும்.

இலங்கையில் நான்கு இடங்களில் சோதனை முறையில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்றும் இதையடுத்து நாடெங்கும் யானைகள் நடமாடும் கிராமங்களை ஒட்டிய பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறுக்கு நெடுக்காக பனை மரங்களை நடுவதன் மூலம், அந்த மரங்கள் செறிந்து நெருங்கி வளரும்போது, யானைகள் மனிதர்கள் வாழும் பகுதிக்குள் வருவதை தடுப்பதோடு மட்டுமல்லாமல், யானைகளுக்கு உணவுக்கும் வழி செய்யும் எனவும் இது தொடர்பான திட்ட இயக்குநர் லாஃபிர் மொஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.



முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மறிச்சிக்கட்டி மறைக்கார் தீவு கிராம முஸ்லிம் மக்கள் தமது காணிகளை கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் பலவந்தமாக பிடித்து வைத்துள்ளனர் எனக்கூறி ஞாயிற்றுக்கிழமை மார்ச் 9ஆம் திகதி மறிச்சிக்கட்டி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1984 பொற்கோயில் படுகொலை தொடர்பில் பொது விசாரணைக்கு பிரிட்டன் தயாரில்லை

இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற தமிழர்களின் கொலைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு ஆதரவு வழங்குதைப் போன்று 1984 ஆம் ஆண்டு சீக்கிய பொற்கோயில் படுகொலை விசாரணைக்கும் பிரித்தானியா ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பிரபுக்கள் சபையில் இந்திரஜித் சிங் பிரபு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் என பி.பி.சி.தெரிவித்துள்ளது.

சீக்கியர் சமூகம் தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

பொற்கோயில் முற்றுகை முடிவடைந்து 30 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த விவாதம் இடம்பெற்றது. பொற்கோயில் முற்றுகையின் போது சுமார் இரண்டாயிரம் பக்தர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.



பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன்

ஏற்கனவே கடந்த ஜனவரியில் கருத்து வெளியிட்டிருந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், 1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொற்கோயில் படுகொலைகளின் போது பிரித்தானியாவின் ஆதரவு இருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் பொது விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேள்விக்குள்ளாகும் தூய்மை!



சிறார் பாலியல் துர்ப்பிரயோகம் தொடர்பில் அண்மைக்காலங்களில் சமயத் தலைவர்கள், சமய நிறுவனங்கள் கூட கேள்விக்குள்ளாக்கப் பட்டிருக்கின்றன. சமயத் தலைவர்கள் அதுவும் கடவுளுக்கு சமமாக மதிக்கப்படும் வத்திக்கானின் போப் கூட விமர்சனத்திற்கு எ்ளாக்கப்பட்டிருக்கிறார்.

“ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கான், சிறார் பாலியல் குற்றங்களுக்கு உள்ளான பாதிரியார்கள் குறித்த கோப்புகளை வெளிப்படுத்தவில்லை. அவர்களை திருச்சபையில் இருந்தும் அகற்றவில்லை. குற்றமிழைத்த பாதிரியார்களை அவர்கள் பங்குத் தந்தையாக இருக்கும் பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு இடம் மாற்றுவது, சில சமயங்களில் நாடு விட்டு நாடு மாற்றுவது போன்ற நடைமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டுள்ளன” என்று ஐக்கிய நாடுகள் சபையினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்குள் சிறார்கள் துர்ப்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க, திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கான நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கை வத்திக்கானைக் கட்டுப்படுத்தாது. அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தும் அதிகாரங்கள் கொண்ட அமைப்பும் அங்கு இல்லை.

இதன் மூலம் ரோமன் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார்கள் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர்களை பாலியல் ரீதியாக துர்ப்பிரயோகம் செய்வதை அனுமதிக்கும் கொள்கைகளை, வத்திக்கான் தொடர்ந்து கடைப்பிடிக்கிறது என்று ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30ஆம் திகதிய இந்திய செய்தித்தாள்களில் இரண்டு நீதிமன்றத் தீர்ப்புகள் வெளிவந்திருந்தன. அவை இரண்டும் மத வெறியர்களால் இந்தியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான தீர்ப்புகள். ஒன்று பாகிஸ்தானிலிருந்து வந்த முஸ்லிம் மதவெறி அமைப்பின் உறுப்பினர்களால் நடத்தப்பட்ட தாக்குதல். இதில் 166 பேர் கொல்லப்பட்டிருந்தனர். மற்றது இந்தியாவின் மத வெறியர்களால் குஜராத் மாநிலத்தில் கோத்ரா ரயில் எரிக்கப்பட்ட சம்பவமும் அதைத் தொடர்ந்து நரோடாவில் நடந்த கொலைகளும். அப்போது 97 பேர் கொல்லப்பட்டனர் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

**மும்பாய் தாக்குதல்:**

பாகிஸ்தானில் இருந்து சென்ற கசாபும், மேலும் ஒன்பதுபேரும் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆந் திகதியில் இருந்து மூன்று நாட்கள் மும்பாய் தாஜ் சமுத்திரா மீது தாக்குதல் நடத்தினார்கள். அதில், 166 பேர் கொல்லப்பட்டார்கள். கசாப் மட்டும் உயிருடன் கைது செய்யப்பட்டான். ஏனையோர் சண்டையில் கொல்லப்பட்டுவிட்டனர். அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டான். கசாப் வெறும் 21 வயது மட்டுமே நிரம்பியவன். தீவிரமான கருத்துக்களால் உணர்ச்சியுறும் வயது.

**கோத்ரா ரயில், நரோடா தாக்குதல்:**

2002ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் கோத்ரா ரயில் விபத்தையடுத்து அகமாபாத் நகரில் நரோடா முஸ்லிம் காலனிக்குள் புகுந்த இந்து மத வெறியர்கள் தாக்குதல் நடத்தி பெண்களையும் குழந்தைகளையும் வெட்டியும் எரித்தும் கொன்றனர். இன்றைய அரசியல் களத்தில் முன்னணிக்கு வந்துவிட்ட நரேந்திர மோடிக்கும் குஜராத் மாநிலம் நரோடாவில் நடைபெற்ற கொலைகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று ஒருபோதும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் அவர் விடுவிக்கப்பட்டார். கொடூரமான மதவெறி சம்பவம் குறித்து அவர் வருத்தம் தெரிவிக்கவும் இல்லை. இதேபோல் மேலும் 29 பேர் போதிய சாட்சியங்களில்லையென்று விடுவிக்கப்பட்டனர்.

**கீழ் வெண்மணி கிராமத்தவர் படுகொலை:**

தமிழ்நாடு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள சின்னஞ்சிறு கிராமம் கீழ்வெண்மணி. "நெல் உற்பத்தியாளர்" சங்கத்திற்குத் தலைவராக இரிஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடு இருந்தார். கூலியை அதிகரித்துக் கேட்ட தலித் கூலித் தொழிலாளர்களை வஞ்சம் தீர்த்தார்.

1968 டிசம்பர் 25 கைகளில் பெட்ரோல் டின்கள், துப்பாக்கிகள் சகிதம் கோபாலகிருஷ்ண நாயுடு தலைமையில் சுமார் 200பேர் இரவு 8 மணியளவில் வெண்மணி கிராமத்திற்குள் புகுந்தனர். எல்லோரும் சிதறி ஓடினர். 44பேர் ஒளிந்துகொண்டிருந்த ராமய்யாவின் வீட்டின் மேல் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினார்கள். அந்த 44 மனிதர்களும் கருகிக் கரிக்கட்டையானார்கள். 20 பேர் பெண்கள்! அவர்களில் இரண்டு பேர் கர்ப்பிணிகள்! 13 வயதிற்கும் குறைவான சிறுவர்கள் 19 பேர், 70 வயது முதியவர் உட்பட 5 பேர் ஆண்கள.

வெண்மணி கோரம் தொடர்பாக இரண்டு வழக்குகள் போடப்பட்டன. பக்கிரி எனும் ஒரு ரவுடி இறந்ததற்காக கோபால் உள்ளிட்ட 22 விவசாயத் தொழிலாளர்கள் மீது ஒரு வழக்கு. 44 விவசாயத் தொழிலாளர்களைத் தீ வைத்துக் கொன்ற குற்றத்திற்காக கோபாலகிருஷ்ண நாயுடு உள்ளிட்ட சிலர் மீது இன்னொரு வழக்கு.

**தீர்ப்பு என்ன தெரியுமா?**

முதல் வழக்கில் கோபாலுக்கு ஆயுள் தண்டனை! இன்னொருத்தருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை! மற்றும் 6 பேருக்கு தலா 2 ஆண்டு சிறைவாசம்!

இரண்டாவது வழக்கில் கோபாலகிருஷ்ண நாயுடுவுக்கும் அவரைச் சார்ந்த 7 பேருக்கும் 10 வருடம் சிறைத் தண்டனை! இறுதித் தீர்ப்பில் மிராசுதார்கள் 8 பேரும் உயர்நீதிமன்றத்தால் நிரபராதிகளென விடுதலை செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளரி நிலத்தில் பிள்ளைப் பேறு



**பரீஸ் கர்பாதவ் என்ற பிரபல ரஷ்ய எழுத்தாளரின் சிறுகதை "வெள்ளரி நிலத்தில் பிள்ளைப் பேறு" 1990களில் சோவியத்யூனியனில் வெளிவந்தது. 3 பகுதிகளாகப் பிரித்து இச் சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். இறுதிப் பகுதி இது.**

அவர் மனதில் இந்த எண்ணம் பளிச்சிட்டது: "எங்கிருந்து எனக்கு இவ்வளவு துணிவு, இவ்வளவு அதிகாரம் வந்தது? இங்கே நான் பேசுவேன், அங்கே அவர் என் சொற்படி எல்லாவற்றையும் செய்வார். எல்லாம் நலமே நிறைவுறக் கூடும் ஒருவேளை. இதைச் செய்விப்பவன் நான்! நான் !"

"வலக்கை விரல்கள் இரண்டை நுழைத்து, குழந்தையின் பாதத்தைப் பற்ற முயலுங்கள்" என உரக்கக் கூறினார்.

வானொலிப் பெட்டியின் ஒலிக் கருவி கிறீச்சிட்டது, புள்ளிகளும் கோடுகளும் சிதறின, மருத்துவரது மூளையிலோ வேறு எண்ணங்களே இல்லை. பிரசவிப்பவளை அவர் தமது கண்ணெதிரே கண்டார். இதோ, அவர் தாம் விரல்களை நுழைக்கிறார். பிரசவிப்பவள் ஓலமிடுவதைக் கேட்கிறார். குழந்தையின் காலை, செயலற்ற காலைத் தொட்டு உணர்கிறார்!

"உன்னிப்பாய்க் கவனியுங்கள்!" என்று மருத்துவர் கத்தியதைப் பணிவுடன் அஞ்சல் செய்தான் வானொலி இயக்குநர். "கையைக் கால் என்று தவறாக நினைத்து விடாதீர்கள். குதிகாலை நெருடிக் கண்டுகொள்ளுங்கள். குதிகாலை, தெரிந்ததா? நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள், இல்லாவிட்டால் குழந்தையின் கையைப் பற்றி இழுத்து விடப் போகிறீர்கள்" அம்மாதிரி நடப்பது உண்டு... தொடர்ந்தார் மருத்துவர்.

வெள்ளரி நிலத்திலும் மக்கள் வானொலி இயக்குநரைச் சுற்றிக் கவலையுடன் குழுமியிருந்தார்கள். பிரசவிப்பவளின் கணவன், உடல் வியர்த்து வடிய, அலங்கோலமான ஆடைகளுடன் வானொலிப் பெட்டிக்கும் மனைவியின் படுக்கைக்கும் இடையே போய்வந்தபடி இருந்தான். வானொலி மூலம் வந்த உத்தரவுகளை மருத்துவரிடம் கொடுப்பது அவருடைய பதிலை வாங்கிக்கொண்டு, ஏதேனும் சொல்லை விட்டு விடவோ, தவறு செய்து விடவோ கூடாது என்பதற்காக அதை வாய்க்குள்ளாகப் படித்தவாறு வானொலிப் பெட்டியருகே திரும்பி ஓடுவதுமாக இருந்தான்.

மருத்துவர் பதற்றமடைந்திருந்தார் எனினும் ஸெர்கேய் மாத்வேயிச்சின் ஆதரவு அவருக்குத் தெம்பு அளித்தது. பிரசவிப்பவளின் கண்ணீரும் வேதனையும் பொங்கும் விழிகள் தம்மையே உற்று நோக்குவதை அவர் கண்டார்.

வேலை செய்தவாறே அவர் முணுமுணுத்தார்:

"ஒன்றுமில்லை, கவலைப்படாதீர்கள். ஸெர்கேய் மாத்வேயிச்சும் நானும் உங்களுக்கு ஒத்தாசை செய்கிறோம், கவலைப்படாதீர்கள்" இதோ குதிகால்! பட்டுப் போல...

"காலைப் பற்றிக் கொண்டு விட்டேன்" என்ற செய்தியைப் படித்தார் ஸெர்கேய் மாத்வேயிச்.

"ஆகா! காலைப் பற்றிக்கொண்டு விட்டான். அருமை" என்று உரக்கக் கூறினார்.

மகிழ்ச்சி நிறைந்த, அடங்கிய முணுமுணுப்பு அறையில் தவழ்ந்தது: "காலைப் பிடித்துவிட்டார். காலைப் பிடித்துவிட்டார்" என்று எல்லாரும் அசைந்தார்கள், முறுவலித்தார்கள், ஒருவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் வாழ்த்துக் கூறத் தயாராகிவிட்டார்கள். ஆனால் ஸெர்கேய் மாத்வேயிச்சின் முகம் மறுபடியும் உர்ரென்று ஆகிவிடவே அனைவரும் மௌனமானார்கள்.

"நல்லது, இப்போது பாதத்தைப் பற்றியபடியே குழந்தையைத் திருப்புங்கள். மற்றக் கையால்.." என்று மருத்துவர் உத்தரவிடத் தொடங்கினார்.

தொலைவு பற்றிய நினைவே அவருக்கு இல்லை. பிரசவிப்பவளின் படுக்கையருகே நின்றவாறு உதவி மருத்துவருக்குச் சுருக்கமாக உத்தரவிடுவது போல அவருக்குத் தோன்றியது. "அவன் கெட்டிக்காரன், கெட்டிக்காரன்! மருத்துவச் சிகிச்சையாளன்தான் என்றாலும் பிரமாதமானவன். அருமை!" என்று உதவி மருத்துவரைப் பற்றி நினைத்துக் கொண்டார். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற நம்பிக்கை அவர் உள்ளத்தில் வரவர அதிகரித்தது. முழு வெற்றி கிடைக்கும் என்ற உறுதி முன்னமேயே தமக்கு இருந்தது என இப்போது அவருக்குப் பட்டது. அதாவது வேலையில் நிதானம் அவருக்கு முடிவில் வந்து விட்டது. மறுபடியும் வழக்கமான சூழ்நிலையில் இருந்தார்.

யுகம் போலத் தோன்றிய கணங்கள் கழிந்தன. ஸெர்கேய் மாத்வேயிச் முதல் செய்தியை அனுப்பி ஒரு மணி ஆகிவிட்டது.

"எல்லாவற்றையும் யோசித்துத் திட்டம் செய்து விட்டேனா? எதிர்பாராதது ஏதேனும் இப்போது நிகழக்கூடுமோ? இந்த ஆள் ஈடு கொடுப்பானா? ஏன்தான் நான் அங்கே இருக்க முடியாமல் போயிற்று? அவனை ஏதாவது கேட்க மறந்துவிட்டேனோ?"

ஒலி பெருக்கியிலிருந்து இக்கேள்விகளுக்குப் பதிலை நேராகக் கேட்க முடியும் போல அதையே நோக்கினார். அவருக்குக் கேட்டவையோ, புள்ளிகள், கோடுகள், புள்ளிகள், கோடுகள்! அவ்வளவுதாம். அவையோ விளங்காப் புதிர்கள்.

இயக்குநரின் தோளுக்கு மேலாகக் குனிந்து, அவன் எழுதும் போதே படித்தார்: "பத்திரமாகத் திருப்பி விட்டேன்".

"பத்திரமாக..." என்று அடக்கமாட்டாமல் கூவினார் இயக்குநர்.

"பத்திரமாக, பத்திரமாக!" என்று உயிர்ப்புற்று நிமிர்ந்தனர் அறையிலிருந்தவர்கள் எல்லாரும். "டாக்டர்! ஸெர்கேய் மாத்வேயிச்! அன்பார்ந்த டாக்டர்!"

"குழந்தையின் இதயத் துடிப்பைக் கவனியுங்கள்!" என்று சீறினார் மருத்துவர்.

வானொலி மூலம் வந்த பதிலைக் கேட்டுக் கிளர்ச்சியுற்றதற்காக, முதலாண்டு மாணவன் போல, முதல் அறுவையின் போது துணை மருத்துவன் போல நடந்து கொண்டதற்காக அவருக்குத் தன் மீதே கோபமுண்டாயிற்று.

"வெட்கம், வெட்கம், டாக்டர்! அவமானம்!"

"குழந்தையின் இதயத் துடிப்பைக் கவனியுங்கள்!" என்று இன்னொரு முறை கத்தினார். இயக்குநர் அச்சொற்களை அவசரத்துடன் அஞ்சல் செய்தான்.

"பிரசவம் இன்னும் நடந்தாகவில்லை. ஆமாம், அதற்குள் நடந்து விடாது" என்று பொதுவாக அறையிலிருந்தவர்களை நோக்கிக் கடிந்துகொள்ளும் தோரணையில் கூறினார் மருத்துவர். மீண்டும் அறையில் மௌனம் குடிகொண்டது. "அதற்குள் நடந்து விடாது" என்று மறுமுறை தணிந்த குரலில் முணுமுணுத்துவிட்டு, ஒலி பெருக்கியை உறுத்துப் பார்க்கலானார்.

திடீரென அவர் உள்ளத்தில் ஓர் ஆசை, அடக்கமுடியாத ஆசை எழுந்தது. குழந்தை உயிரோடு பிறக்க வேண்டும் என்ற ஆசை. உயிரோடு, அதுவும் ஆணாகப் பிறக்க வேண்டும். சுருட்டை மயிருடன்... தானே குழந்தையின் தகப்பன் போன்று அதை நினைத்தார். தாய்க்கு இனி ஆபத்து இல்லை. ஆனால் குழந்தை, குழந்தை?

"இதயத் துடிப்பு துலக்கமாக, தெளிவாகக் கேட்கிறது" என்ற பதிலைப் படித்தார் இயக்குநர்.

ஆனால் மருத்துவர் கேட்டது இயக்குநரின் சொற்களை அல்ல, இன்னும் தாயின் கருப்பையிலிருந்த குழந்தையின் இதயத் துடிப்பையே. இன்னும் உலகில் உதிக்காத மானிடனின் இதயத் துடிப்பு அது. ஆனால் அவன் இதோ பிறந்து விடுவான், வெற்றி முழக்கம் செய்து தனது உரிமைகளை வலியுறுத்துவான். அவன் இதயம் எப்படிப் பட்டதாயிருக்கும்? தான் உயிருடன் பிறந்ததன் பொருட்டு தாய்நாட்டிற்கு "வானொலி இயக்குநர்கள் அனைவருக்கும், இதோ சுங்கான் புகைத்துக் கொண்டிருக்கும் கட்சிச் செயலாளனுக்கும், மருத்துவச் சிகிச்சையாளனுக்கும் (அவன் பாராட்டுக்குரியவன், கெட்டிக்காரன்!), ஸெர்கேய் மாத்வேயிச்சுக்கும் கடமைப்பட்டுள்ள இந்த மனிதனின் இதயம் எத்தகையதாயிருக்கும்?"

அவர் வாய்விட்டுச் சிரித்தார். அதற்கு முன் ஒருபோதும் சிரிக்காத விதத்தில் நகைத்தார். அவரது நகைப்பில் வெற்றியோ, கர்வமோ, திருப்தியோ இல்லை. அவருக்கே இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்காத ஏதோ ஒன்றுதான் அதில் இருந்தது.

கர்ப்பிணிக்கு வலியெடுக்கத் தொடங்கியது. வெள்ளரி நிலத்திலிருந்து செய்திக்கு மேல் செய்தியாக மளமளவென்று வரத் தொடங்கின. பிரசவிப்பவளின் நிலைமை பற்றியும் வலிகளுக்கு நடுவிலுள்ள இடைநேரம் பற்றியும் அங்குள்ள மருத்துவர் சுருக்கமான அறிக்கைகள் விடுத்துக் கொண்டிருந்தார்.

அவளது கணவனோ, "பயங்கர வேதனைப்படு கிறாள்! மகா கோரமாகக் கூச்சலிடு கிறாள்" என்ன செய்வது? என்ன செய்வது, டாக்டர்? ஐயோ, என்ன வேதனைப்படுகிறாள், பாவம்! ஏதாவது செய்யுங்கள். இந்தக் கதறலை என்னால் பொறுக்க முடியவில்லை!" என்று தானாகவே சேர்த்துக் கூறினான்.

பிரசவிப்பவளின் கோரக் கூச்சல் இங்கே, ஒலிபெருக்கி மூலம் கேட்பது போலப் பிரமை உண்டாயிற்று. கட்சிச் செயலாளன் சுங்கானை வலிவாகக் கடிப்பதையும் அவன் முகம் சாம்பலாக வெளுத்துவிட்டதையும் ஸெர்கேய் மாத்வேயிச் கண்டார்.

"நீங்கள் என்ன இப்படி? ஏன், ஐயா, உங்களுக்கு என்ன? உங்கள் மனைவி பிரசவிக்கவில்லையே, ஊம்?" என்றார்.

கட்சிச் செயலாளன் சோர்வுடன் முறுவலித்து, "உண்மைதான், அவள் என் மனைவி இல்லை. ஆனால் தாயும் சேயும், எப்படி உங்களுக்குச் சொல்வது, நம்மவர்கள் அல்லவா?" என விடையளித்தான்.

தனது முட்டாள்தனமான கேள்விக்கும் கட்சிச் செயலாளனின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளத் தவறியதோடு அவன் மனத்தைப் புண்படுத்தி விட்டதற்கும் ஸெர்கேய் மாத்வேயிச் வெட்கமுற்றுத் தம்மையே நொந்து கொண்டார். ஆனால் இதைப் பற்றிச் சிந்திக்கவே இப்போது நேரமில்லை.

"குழந்தையின் இதயத் துடிப்பைக் கவனியுங் கள்!"

"மூன்று மணி நேரம் கழிந்துவிட்டது. வானொலிப் பெட்டியின் அருகே அவர் உட்கார்ந்தது மூன்று மணிக்கு முன்பு. இப்போது ஒருபோதுமில்லாத களைப்பும், உரலில் இடிக்கப்பட்டது போன்ற தளர்வும் அவரைக் கவ்விக் கொண்டது. சீக்கிரத்தில், சீக்கிரத்தில் முடியுமா இதெல்லாம், வானொலி மூலம் நடக்கும் இந்த அசாதாரணப் பிரசவம்?"

"பையன்! பையன்! ஆமாம். இதோ! பையன்!" என்று வானொலி இயக்குநர் மகிழ்ச்சியுடன் கூவியது திடீரென அவர் காதில் பட்டது. ஆப்பரேட்டர் வானொலிச் செய்தியை ஸெர்கேய் மாத்வேயிச்சிடம் நீட்ட அவர் அதை உரக்கப் படித்தார்:

"டாக்டர், தோழர்களே, நண்பர்களே! எனக்கு ஆண் மகவு பிறந்திருக்கிறது, மகன், பையன். நன்றி, நீங்கள் செய்த எல்லாவற்றுக்காகவும் உங்களுக்கு நன்றி. ஸெர்கேய் மாத்வேயிச், நன்றி. நீங்கள் அருமையான மனிதர். உங்களுக்கு நன்றி!"

எல்லாரும் மருத்துவரின் கையைப் பற்றிக் குலுக்க விரும்பினார்கள். உளமார்ந்த, நட்பு ததும்பும், உணர்ச்சி பொங்கும் கைகுலுக்கல்கள். எல்லாரும் அவரை வாழ்த்தினார்கள், புகழ்ந்தார்கள், அவருக்கு நன்றி கூறினார்கள். கட்சிச் செயலாளன் நீண்ட நேரம் அவர் கையை ஆர்வத்துடன் குலுக்கி, "ஆகா, ஸெர்கேய் மாத்வேயிச்! நீங்கள் உண்மையான போல்ஷெவிக்கைப் போலச் செயல்பட்டீர்கள்!" என மீண்டும் மீண்டும் கூறினான்.

மருத்துவரோ, மலைப்புடன் திடீரென ஒரேயடியாகச் செயலிழந்து உட்கார்ந்திருந்தார். எல்லாரையும் ஒன்றும் புரியாமல் நோக்கினார். செய்தியைப் படித்தார், ஆனால் விளங்கிக் கொள்ள வில்லை. ஆட்கள் வாழ்த்துவதைக் கேட்டாரே தவிர அவர்கள் சொல்லுவது அவருக்குப் பிடிபடவில்லை. அவர் மூளை குழம்பியது. அறுவை மருத்துவர் தனது நிதானத்தை இழந்துவிட்டார்.



தமது வாழ்வு முழுவதும், தாமும், தமது தொழிலும், மாணவராயிருக்கையில் தாம் கண்ட கனவுகளும், தாம் செய்தவை, செய்பவை, செய்யக் கூடியவை அனைத்துமே திடீரென அவருக்குப் புதிய, எதிர்பாராத ஒளியில் தென்பட்டன.

அமைதி நிறைந்த முதுமைப் பருவத்தைப் பற்றி, சிறு வீடு, நாஸ்டர்ஷியம் பூப்பாத்திகள், சன்னலுக்குக் கீழே ஆர்க்கிட் செடிகள், இவை பற்றி நேற்றுக் கனவு கண்டது அவர் தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கானல்" ஒரு பார்வை

-க. அபராசுதன்

ஈழத்து நாவல் ஆசிரியர்களில் அமரர் கே.டானியல் அவர்கள் முதன்மையான சிறப்பிற்கு உரியவராவார். பஞ்சமர், கோவிந்தன், தண்ணீர், அடிமைகள் போன்ற நாவல்களைத் தொடர்ந்து "கானல்" எனும் இந்நாவலும் சிறப்பான அவரது படைப்பாற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றது. தனது முந்தைய படைப்புக்கள் போன்றே இந் நாவலையும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் புரையோடிப் போயிருந்த சாதித்துவப் பிரச்சினையைக் கதைக் களமாகக் கொண்டு படைத்திருக்கின்றார். இதற்கு முக்கிய காரணம் இவர் வாழ்ந்த காலத்தில் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட மிகத் தீவிரமான சாதிப் பாகுபாடு ஆகும். இப்பண்பினை அக் காலங்களில் (50, 60, 70களில்) பேராசிரியர்



கதையாசிரியர்
கே.டானியல்

க.கணபதிப்பிள்ளை, மகாகவி உருத்திரமூர்த்தி, கணேசலிங்கன், செங்கை யாழியான், இளங்கீரன் போன்றோரது நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் ஊடாக உணரலாம்.

1983ஆம் ஆண்டு எழுதி முடிக்கப்பட்ட கானல் நாவல் அக்காலத்தை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே திகழ்கின்றது. வசதி படைத்தவர்களாகவும், நிலபுலம் உடையவர்களாகவும் உயர் சமூகத்தவர்கள் காணப்பட தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்களது காணியில் குடியிருப்பதோடு அவர்களது வீடு, வளவு, தோட்டம் என்பவற்றில் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த வாழ் நிலைமை வெளிப்படும் வகையில் "கானல்" நாவலில், நன்னியன் தம்பாப்பிள்ளையாரின் தோட்டத்தில் தனி ஒருவனாய் ஐயாயிரம் கன்று புகையிலைச் செடிகளுக்கு பாத்தி கட்டுவதும் அவனது மகள் சின்னி தம்பாபிள்ளையின் தங்கையின் வீட்டில் வேலை செய்வதாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக் கிராமங்களின் யதார்த்த வாழ்வு மிகச் சிறப்பாக இந்த நாவலில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. "நன்னியன் அந்தச் சிறிய குடிசைக்குள் தலை முகட்டில் முட்டாத அளவுக்குக் குனிந்து அன்று காலைதான் முள்முருக்குச் சாறு கலந்து சாணி மெழுக்குச் செய்து விட்டிருந்த சிறு திண்ணையைக் கைத்துண்டால் துடைத்து விட்டான்" என்பதனூடாக ஏழை மக்களின் வாழ்விடங்களையும் "உன்ர கோத்தையாணை ஆத்திரப்பட்டு ஏதும் செய்து போடாதையடா" என்பதனூடாக அவர்களது பேச்சு வழக்குச் சொல்லாடல்களையும் "முசுட்டை இலை போட்ட தினைக் கஞ்சியை பலாவிலைக் கோலலினால் குடிக்க ருசியாக இருந்தது", "நீத்துப் பெட்டியில் ஒடியற் பிட்டு அவியும் வாசனை மூக்கைப் பிடுங்கியது" என்பனவற்றின் மூலம் அவர்களது உணவுப் பழக்கத்தையும் தெளிவாக ஆசிரியர் விளக்குகின்றார்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதிநிதிகளாகவே "கானலின்" பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. நன்னியன், செல்லி, சின்னி, மூத்தவன், இளையவன், தம்பாபிள்ளை, வெள்ளைச்சிஅம்மா, பூங்கண்டர், தம்பன், நெஞ்சுச் சுப்பன், ஞானமுத்துச் சுவாமியார் போன்ற அத்தனை பாத்திரங்களும் அவரவர் நிலைப்பட்ட நியாயம் உடையவர்களாகவும் நடை, உடை, பாவனை என அனைத்தும் அவரவர்க்கு ஏற்றாற்போன்று மிக யதார்த்தமாகவே படைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சமூகத்தவர்களை ஏனையோர் நயினார், நயினாத்தி என்று அழைப்பதும், அவர்களைக் கண்டால் வெய்யிலாக இருந்தாலும் தலைப்பாகையைக் கழற்றுவதும், "ஆராக்கும், இல்லையாக்கும்" என மரியாதை செய்வதனையும் காணலாம். ஆனால் தம்பாப்பிள்ளையார் நன்னியனிலும் ஐந்து வயதேனும் குறைந்தவராக இருந்தாலும், டேய் நன்னியன், எட நன்னியன் என்றே அழைக்கின்றார். மேலும், "அங்க நயினாத்தி வீட்டில் மாசத்துக்கு ஒருக்காத் தானாம் கல்லுத் தொட்டிக்க தண்ணி அள்ளி வாப்பினம், மாட்டுக்கு தண்ணி விடுகிற கல்லுத் தொட்டியில் குளிச்சவள் நல்ல தண்ணியில குளிக்க ஆசையாய் இருக்கெண்டு சொல்லிப்போட்டுப் போனவள்"என்பதன் மூலம் நயினார் வீடுகளில் அந்த மக்கள் நடத்தப்பட்ட விதம் விளக்கப்படுகின்றது.

கானல் நாவலில் சாதிப் பிரச்சினைக்கு அப்பால் முதலாளித்துவப் போக்குடையவர்கள் ஏழைகளை, தொழிலாளர்களை நடத்திய விதத்தினைப் பல இடங்களில் காணலாம். எடுத்துக் காட்டாக மெனிக்கா எனும் சிங்களப் பணிப்பெண் தம்பாப்பிள்ளை மற்றும் அவன் கூட்டாளிகளால் பாலியல் வல்லுறவின் பின் கொலை செய்யப்பட்டு வல்லைப் பாலத்தடியில் போடப்பட்ட செயல் அவர்களது செல்வச் செருக்கே ஆகும். இதேபோன்று "எல்லாச் சாதீக்கையும் எல்லா மாதிரியான மனிதரும் இருப்பினம் பிள்ளை, அதிலும் எல்லாச் சாதிக்கையும் பணக்காரச் சாதியெண்டு ஒண்டு நெடுகவே இருக்கு. அந்தச் சாதீக்க சேந்தவை எல்லாம் இரணியச் சாதி பிள்ளை" என்பது பூங்கண்டர் போன்றோரது செயல்களை நியாயப்படுத்தி முதலாளி வர்க்கத்தைச் சாடுவதாகவே உள்ளது.

இந் நாவலில் இந்து, கிறிஸ்தவம் ஆகிய இரு மதங்களைப் பற்றியும் அம் மதங்களின் வழிபாட்டு முறைகள் பற்றியும் அந்தந்த மதத்தவர் நிலையில் நின்று ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார். ஊரிலே காசு சேர்த்து காளிகோயிலுக்கு திருவிழா செய்வதும் அதன்போது ஒவ்வொரு சாதியினருக்கும் ஒவ்வொரு உபயம் வழங்குவதும் காளாஞ்சி, கொடியேற்றம், சாத்துப்படி, வேள்வி என இந்துமதம் பற்றியும் காரணிக்கம், பாவசங்கீர்த்தனம், பிரார்த்தனை, பூசைப்பலி, ஆசீர்வாதம் என கிறிஸ்தவ மதம் பற்றியும் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும் இவ்விரு மதங்களைக் காரணம் காட்டியும் இம்மண்ணில் பிரச்சினைகள் ஏற்பட்டது என்பதனை "எண்டாலும் எங்கட கடவுளுகள் தமிழ்க் கடவுளுகள்! எங்களை எங்கடை கடவுளுக்குத்தான் நல்லாத் தெரியும்" என தம்பாப்பிள்ளையாரும் "உங்கட ஊருக்க பத்து வருசத்துக்கு முந்தி வேதக் கோயில் கட்டி நீங்கள் பட்ட பாட்டை அதுக்கிடையில் மறந்திட்டியள் என்ன, நயினாரவை உங்கள எல்லாம் வளவுக்கிளால குடியெழுப்பினவ. வீடுகளுக்கு நெருப்பு வச்சவ. தோட்டம் துரவுக்க இறங்கவிட மாட்டம் எண்டவ. இப்பதான் ஒருமாதிரிக் கிடக்கு. அந்த நேரத்தில கொஞ்ச நஞ்சமே நடந்தது" என நன்னியனும் கூறுவதூடாக தெளிவுபடுத்துகிறார்.

தலைவன், தலைவி என வரையறைக்குள் நில்லாத ஆசிரியர் தான் சொல்ல வந்த விடயங்களை அனைத்துப் பாத்திரங்களுக்கு ஊடாகவும் குறிப்பிடுகிறார். பாத்திரங்களின் மீள் நினைவுகளூடாக யாழ்ப்பாணத்து முதல் பத்திரிகை, திண்ணைப்பள்ளி போன்ற பல வரலாற்றுப் பதிவுகளையும் குறிப்பிடும் ஆசிரியர் படிப்போரின் சுவைக்காக உவமைகள், வர்ணனைகள் என்பவற்றையும் கையாள்கின்றனர். விவசாயம், மீன்பிடி என மக்களது தொழில் பற்றிப் பேசப்படுவதோடு "பொன்நூல் செபமாலை" எனும் நாடகம் பழகி மேடையேற்றும் தயாரிப்பு படிமுறைகளினூடாக அவர்களது கலை வெளிப்பாட்டைப் புலப்படுத்துகின்றார். "இலவசத்தில் தேத்தண்ணி கொடுத்து சனத்துக்கு தேத்தண்ணி குடிக்கப் பழக்கின தேயிலைக் கொம்பனி" என்பதனூடாக ஆசிரியரின் அனுபவ முதிர்ச்சி புலனாகிறது.

தீண்டாச் சாதி என கல்வி மறுக்கப்படலும் பொதுக் கிணறு பாவனையால் தொற்று நோய் போன்ற பிரச்சினைகளும் பஞ்சமருக்குப் பிரத்தியேகம் எனக் கூத்துக் கொட்டகையில் எழுதித் தொங்கவிடுவதும் என இன்னல்பட்ட மக்கள் மதமாற்றமே ஒரே வழி என முடிவெடுக்கிறார்கள். ஆனால் அங்கேயும் சாதி பார்க்கப்படுவதால், சாதிப் பிரச்சினைக்கு மத மாற்றமே தீர்வாகும் என எண்ணிய நன்னியன் குடும்பத்துக்கு அது கானலாகவே தோன்றுகிறது. இதேபோல் இறுதியில் படகினி எனும் வயிற்றிலே நெருப்பு (பசி) என்பதனூடாக அவர்களது எல்லாச் செயல்களும் தோற்றுப்போய்க் கானலாகவே தெரிகிறது. இவையே இந் நாவலின் தலைப்பிற்கான பொருத்தப்பாடாகவும் அமைகிறது.

தென்னிந்திய தமிழ்ச் சினிமா போன்று ஈழத்து தமிழ்ச் சினிமா வளர்ச்சி பெற்று இருக்குமானால் "கானல்" நாவலை அடிப்படையாகக் கொண்டு பல திரைக் காவியங்கள் உருவாகி இருக்கும் என்பது எனது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே என் சிட்டுக்குருவிகள்!

என் வீட்டு சிட்டுக் குருவிகள்
எங்கே?
காலையில், வாசலில்
கீதம் இசைத்து
முற்றத்தில் தத்தித் தத்தி
தீனி பொறுக்கி
கோலம் போடும்
அந்த சிட்டுக் குருவிகள்
எங்கே?

சமையலறையில்
எல்லாம் சுத்தம்
அரிசியில் குருணல் இல்லை
பயறில் சப்பை இல்லை
பானையில் சோறு மிச்சமில்லை
றைஸ் குக்கரில் சோறு
ஒட்டாமல் அள்ளி
தின்று தீர்ப்போம்
சோறு மிஞ்சினால்
அப்பா சத்தம் போடுவார்
அம்மா சிக்கனம்

தம்பிக்கு சாப்பாடு
அம்மா ஊட்டுவா, ரீவி.க்கு முன்னால்
உதிரும் துணிக்கைகள்
சுத்தமாய் துடைத்தெடுத்து
குப்பை வாளிக்குள்



சிட்டுக் குருவிகளுக்கு
என் வீட்டில்
என்ன வேலை?

சிட்டுக்குருவிகள்
இல்லையென்றால்
உனக்கென்ன நஷ்டம்
பேசாமல் போய் படி! -
அண்ணாவின் அதட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் இல்லை என்ற மதம்

மதம் என்றால் அதில் கடவுள் இருக்கவேண்டுமென்று நினைப்பது தவறானதாகும் என்று சொல்கிறார் ராகுல் சாங்கிருத்யாயன். "வால்காவிலிருந்து கங்கை வரை" என்ற பிரசித்தி பெற்ற நாவலை எழுதியவர் ராகுல் சாங்கிருத்யாயன். இந்நூல் மனித குலத்தின் வளர்ச்சிப்போக்கை எளிமையான முறையில், அதாவது நாவல் வடிவில் வெளிக்கொண்டு வந்தது. ராகுல் சாங்கிருத்யாயன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்.



1932ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி அவர் கூறுகிறார். அனைத்து மதங்களும் அங்கம் வகிக்கக்கூடிய ஒரு நிறுவனத்தை அமைக்கத் தொடங்கினர். அதன் முதல் விதியாக, "கடவுளின் குழந்தைகளானதால் மனிதர்கள் அனைவருமே சகோதரர்களே" என அமைந்தது. ராகுலின் நண்பர் திரு.பதந்த ஆனந்த கவுசல்யாயன் என்பவர் பௌத்தர்களின் பிரதிநிதியாக அங்கே சென்றிருந்தார். "முதல் விதியில் உள்ள கடவுளின் பெயரை விலக்காதவரை பௌத்தர்கள் அந்நிறுவனத்தில் சேர முடியாது" என்று அவர் கூறினார். இதைக் கேட்ட ஏனையவர்கள் பௌத்தர்களும், வியப்படைந்தனர். ஜைனர்களும் கடவுளை ஏற்பதில்லை எனவும் ராகுல் சாங்கிருத்யாயன் குறிப்பிடுகிறார்.

பௌத்த மத கலாசாரத்தின் செல்வாக்குக்குட்பட்ட மக்கள் உலகத்தில் 80 கோடிக்கும் அதிகமாகவே உள்ளனர். சீனா, ஜப்பான், கொரியா, வியட்னாம், இலங்கை, மங்கோலியா, கம்போடியா, தாய்லாந்து பர்மா ஆகிய நாடுகளில் பௌத்தர்களே பெருமளவில் உள்ளனர். இந்தியாவிலும் 40 இலட்சத்திற்கு மேற்பட்ட பௌத்தர்கள் உள்ளனர். இத்தகைய பௌத்த மதம் கடவுளை அங்கீகரிப்பதில்லை. "உண்மைப் பொருள் வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டே இருக்கும். அவ்வாறு மாற்றம் அடையாத பொருள் உண்மைப் பொருளே அல்ல" என பௌத்தமும் கூறுகிறது. மார்க்ஸிய மும் கூறுகிறது. ஆனால் மார்க்ஸியம் பௌத்தம் உட்பட எந்த சமய தத்துவங்களையும் ஏற்றுக்கொள்வதில்லை.

# மகாபாரதத்தை படிப்பது எப்படி?

மகாபாரதம் படிக்க விரும்புபவர்களுக்கு எழுத்தாளர் ஒருவர் கூறிய அறிவுரை இது. மகாபாரதம் படிக்க ஆரம்பிக்கும் போது முதலில் எதற்காகப் படிக்க ஆரம்பிக்கிறீர்கள் என்பது முக்கியமானது. அதைப் பொறுத்து தான் எவ்வளவு காலம் தேவைப்படும் என்பது முடிவு செய்யப்படும்

வெறும்கதையை மட்டும் வாசிப்பது என்றால் ஆறு மாத காலத்திற்குள் உங்களால் மகாபாரதத்தை வாசித்துவிட முடியும், ஆனால் மகாபாரதம் என்பது மாபெரும் இதிகாசம், அதன் நுண்மையான அம்சங்கள், கவித்துவ அழகு, அறச் சிந்தனைகள், ஊடாடும் பண்பாட்டு சிந்தனைகளை ஆழ்ந்து கற்க விரும்பினால் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு காலம் தேவைப்படும், காரணம் ஒவ்வொரு பருவத்தையும் புரிந்து கொள்ள மேலும் அதிகமாக வாசிக்க வேண்டி வரும்,

மகாபாரதம் பதினெட்டு பருவங்களைக் கொண்டது, மொத்தமாக பதின்மூன்று ஆயிரத்தில் இருந்து பதினைந்தாயிரம் பக்கம் வரக்கூடியது, இதற்கு காரணம் சில பதிப்புகளில் கிளைக் கதைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன, கிரேக்க காப்பியங்களை விட பத்து மடங்கு பெரியது மகாபாரதம், மகாபாரத கதாபாத்திரங்களை அறிந்து கொள்வதற்காக பாரதிய வித்யா பவன் வெளியிட்டுள்ள who is who in the Mahabharata- subash Mazumdar என்ற சிறிய நூலை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுபிரான் திருமணமானவர் அவரது வாரிசுகள் பிரான்சிலாம்



புகழ்பெற்ற ஓவியர் லியனாடோ டாவின்சி, யேசு கிறிஸ்துநாதர் தனது சீடர்களுடன் கடைசியாக உணவருந்திய காட்சியை ஓவியமாகத் தீட்டியிருந்தார். அதில் யேசுநாதருக்கு அருகே அவரது சீடர் ஜோன் அமர்ந்திருப்பதாகத்தான் குறிப்பிடப்பட்டது. ஆனால் யேசுபிரானுக்கு அருகே அமர்ந்திருந்தது அவரது சீடர் ஜோன் அல்ல, யேசுபிரானின் மனைவி மேரி மக்தலீன்தான் அமர்ந்துள்ளார் என்று மர்மக் கதை பாணியில் 2008ஆம் ஆண்டு நாவலொன்று வெளியிடப்படடது. மேரி மக்தலீன் யேசுபிரானுக்குப் பணிவிடை செய்த பாலியல் தொழிலாளி என்றும் அந்த மர்மக் கதையில் குறிப்பிடப்பட்டிருந்தது,

யேசுபிரான் திருமணமானவர் என்பதும் அவருக்குக் குழந்தைகள் கூட இருந்தன என்றும் கதையில் குறிப்பிடப்பட்டிருந்தது. யேசுவின் வாரிசுகள் இன்னமும் பிரான்ஸில் இரகசியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களாம். அவர்களை ஒழித்துக்கட்ட வத்திகன் திருச்சபை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் கதையின் சாராம்சம்.

"தி டாவின்சி கோட்" என்று தலைப்பிலான இந்த நாவலை எழுதியவர் டான் பிரைஎன் என்பவர். 2006ஆம் ஆண்டு இதே தலைப்பிலேயே இந்த நாவலைக் கருவாகக் கொண்டு சினிமாப் படமும் வெளிவந்தது. நாவல் சினிமாப்படம் இரண்டுமே பெரும் சர்ச்சைகளையும், பரபரப்பையும் ஏற்படுத்தின. கிறிஸ்தவ திருச்சபையும் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட கிறிஸ்துவ அமைப்புகளும் எதிர்ப்புகளைத் தெரிவித்தபோதிலும் நாவலும், சினிமாவும் பல நாடுகளில் தடை செய்யப்படவில்லை. இந்தியா, சீனா உட்படப் பல நாடுகளில் இந்தச் சினிமாப் படம் திரையிடப்பட்டது. நாவல் 45இற்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. இது ஆங்கிலத்தில் மட்டும் ஆறு கோடி பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

கடைசி விருந்தில் யேசுபிரான் பயன்படுத்திய கோப்பைக்குள் கடவுளின் இரத்தம் இருப்பதாகக் கருதப்பட்டதால் அந்தக் கோப்பை கிறிஸ்தவர்கள் மத்தியில் புனிதமாகக் கருதப்பட்டது. லியனாடோ டாவின்சியின் ஓவியத்தில் கோப்பையே கிடையாது. கோப்பை என்பது ஒரு குறியீடுதான். யேசுவின் இரத்தத்தைத் தனது வயிற்றுக்குள் குழந்தை வடிவத்தில் மேரி மக்தலீன் சுமந்து கொண்டிருந்தாள் என்பதுதான் நாவலாசிரியர் டான் பிரௌனின் வியாக்கியானம்.



## இருபதாம் நூற்றாண்டின் மிக நீண்ட மத ரீதியான யுத்தம்

ஈரானுக்கும் ஈராக்கிற்குமிடையில் 1980களில் முதலாவது வளைகுடா யுத்தம் நடைபெற்றது. இருபதாம் நூற்றாண்டின் மிக நீண்ட காலம் நடைபெற்ற மரபு ரீதியான யுத்தம் இதுதான் என்று வர்ணிக்கப்படுகிறது. 1980ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை இந்த மரபு ரீதியான யுத்தம் இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்றது. 1980ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி இந்த யுத்தம் வெடித்தது. தரை வழியாகவும் ஆகாய மார்க்கமாகவும் ஈராக், ஈரானின் நிலப்பரப்பை ஆக்கிரமித்ததே யுத்தம் ஏற்பட்டதற்கான காரணமாகும். இது முதலாவது பாரசீக வளைகுடா யுத்தமென்று அழைக்கப்பட்டது.

1990களின் ஆரம்ப வருடங்களில் இடம்பெற்ற பாரசீக வளைகுடா யுத்தத்துக்குப் பின்னர் 1980களில் இடம்பெற்ற முதலாவது பாரசீக வளைகுடா யுத்தம் ஆரம்ப காலங்களில் வளைகுடா யுத்தம் என்றே வர்ணிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை அர்த்தப்படுத்துவது எப்படி?

ஒருவர் வாழும் காலகட்டமும், அவர் வாழ நேரும் சமுதாய சூழலும் அவருக்கு வாழ்க்கையில் வெற்றி என்பது குறித்த வரையறையை உருவாக்கி அளிக்கின்றன. அந்த வெற்றியை அடைவதிலேயே மகிழ்ச்சி இருப்பதாக கருதப்படுகிறது. இதை நோக்கியே அனைவரும் இயந்திர கதியில் ஓடுகின்றனர். பலருக்கும் இந்த வெற்றியை முழுவதும் அடைய முடிவதில்லை. வெற்றியை அடைய முடிந்த மற்றவர்களுக்கும் ஒரு ஏமாற்றம் மிஞ்சுகிறது. நடுவயது நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அவர்கள் கற்பித்துக் கொண்ட இலக்கு மகிழ்ச்சியை அளித்ததா என்று ஐயப்படுகின்றனர். வாழ்வின் பொருள் கை நழுவிப் போனதாக உணர்கின்றனர்.

இது நிகழும்போது மனிதர்கள் வெவ்வேறு வகையான எதிர்வினையை ஆற்றுகிறார்கள். சிலர் எஞ்சி இருக்கும் தங்கள் வாழ்கையைச் சுற்றித் தடுப்பு அரண்களை அமைத்து, இருப்பதைக் காப்பாற்றிக் கொண்டு, தங்களுக்குள் ஒடுங்கியவர்கள் ஆகிறார்கள். சிலர் மனச் சோர்வினால் பீடிக்கப்பட்டு, அதில் அமிழ்ந்து போகிறார்கள். சிலர் மட்டுமே வாழ்க்கைக்கு வேறு அர்த்தம் கொடுத்து மீண்டு வர முயல்கிறார்கள். அவர்கள் தங்களுக்கான இலக்குகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதை நோக்கிய தங்கள் பயணத்தில் நிறைவைத் தேடுகின்றனர்.

மகிழ்ச்சியற்ற நிலை என்பது இந்தத் தன்னிலை தன் இலக்குகளை அடைவதில் ஏற்படும் தடையே. வெற்றிகரமான வியாபாரி ஆக வேண்டும் என்ற இலக்கிற்கு நாட்டின் பொருளாதாரச் சூழல் தடையாகலாம். மகிழ்ச்சியான குடும்ப வாழ்வை ஒரு மரணம் புரட்டிப் போடலாம். இவ்வாறு நிகழும் போது தன்னிலை தன் ஒழுங்கை இழக்கிறது. கலைக்கப்பட்ட தேன்கூட்டின் தேனீக்களாக எண்ணங்கள் அலைந்து, பறந்து துன்பத்தில் ஆழ்த்துகின்றன. அவற்றை எப்படி மறுபடியும் கூட்டுக்குள் அடைப்பது. புறச்சூழல்களை மாற்ற முடியாது. ஆனால் ஒருவருடைய அகச் சூழலை மாற்றி அமைக்க முடியும். தன்னிலையை வேறு இலக்குகளைக் கொண்டு மாற்றிக் கட்ட முடியும். இதற்கு முதற்படியாக மனம் தான் அடையச் சாத்தியமான ஆகச்சிறந்த நிலையாகிய பிரவாக நிலையைக் கண்டு கொண்டு, அதை வலிந்து உருவாக்குவதற்கான முயற்சியில் தொடங்க வேண்டும் என்கிறார் மிஹாய் சீக்சென்ட்மிஹாயி.

**மனிதர்கள் தங்கள் துயர்களில் இருந்து மீண்டு வாழ்வை அர்த்தப்படுத்துவது எப்படி? என்கிறார் இருபது வருடங்களுக்கு மேல் மகிழ்ச்சி குறித்தும் படைப்பாற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டு வரும் ஹங்கெரிய மனோத்துவ நிபுணர் மிஹாய் சீக்சென்ட்மிஹாயி.**

## பிரவாக நிலை என்பது என்ன?

இது ஒரு செயலை முழு கவனத்துடன் வேறு சிந்தனைகளே இல்லாது செய்யும்போது உருவாகக் கூடிய ஒரு ஆனந்த நிலை. ஒவ்வொருவருமே இந்த நிலையை ஏதாவது ஒரு தருணத்தில் உணர்ந்திருப்போம்.

ஒரு வேலையில் மூழ்கி இருக்கும் போது நேரம் போவதே தெரியாமல் இருப்பது மற்றும் அந்த வேலையை முடிக்கும் போது வரும் உற்சாகம் போன்றவை. கலைஞர்கள், ஓவியர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், மலையேறிகள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்கள் இந்த நிலையை அதிகமும் அடைகின்றனர் என்கிறார் மிஹாய்.

மகிழ்ச்சியை உருவாக்கும் இந்தச் செயல்களை, வெறும் இன்ப நாட்டத்தினைக் கருத்தில் கொண்டு செய்யும் செயல்களில் இருந்து பிரித்துப் பார்த்தல் அவசியம்.

நாளெல்லாம் தொலைக்காட்சி முன் அமர்ந்து பொழுதைப் போக்கும் ஒருவர் ஒரு மேலோட்டமான இன்ப நிலையில் இருக்கிறார். ஆனால் ஒரு போதும் அவர் செயற்பிரவாகத்தின் ஆனந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அடைவதில்லை எனும் மிஹாய் இந்த நிலை குறித்த கீழ்க்கண்ட வரையறைகளை முன்வைக்கிறார்.

### தெளிவான இலக்குகள்

செயல்களுக்குத் தெளிவான இலக்குகள் அவசியம். வெற்றியும் தோல்வியும் தெளிவாக வரையறை செய்யப்படுவது தேவை. ஆனால் இலக்குகள் எளிதாக இல்லாமல் சவாலை அளிக்க வேண்டும். ஒருவர் நாள் முழுதும் மெத்தையில் படுத்திருப்பேன் என்ற இலக்கை வைத்துக் கொள்வதில் எந்தப் பொருளும் இல்லை. அது எந்த வகையான சவாலையும் அளிப்பது இல்லை. சில செயல்களில் இலக்குகள் தெளிவில்லாமல் இருக்கும். உதாரணமாக ஒரு பாடலாசிரியர் என்ன பாடலை எழுத வேண்டும் என்ற இலக்கை வைத்துக் கொண்டு செயல்படுவதில்லை. ஆனால் எழுதி முடித்ததும் அது அவர் நினைத்ததுதானா என்று அவரால் சொல்ல முடியும். அந்த செயலின் வெற்றி தோல்வியை அவரால் உணர முடியும்.

### தன்னிலை மறத்தல்

மகிழ்ச்சி அளிக்கும் செயல்களில் தன்னிலை மறக்கப்படுகிறது. தன்னிலை அழிவதில்லை ஆனால் அது குறித்த கவனம் இல்லாமல் போகிறது. செயலாக மாறி நிற்கும் ஒருவரின் மனது தன்னை மறந்து செயல் தரும் இன்பத்தில் திளைக்கிறது. இந்த அனுபவத்தை அடைய அந்த செயல் மனதிற்குகந்ததாக இருத்தல் அவசியம். பிரவாக நிலையில் இருந்து மீண்டு வருபவர் ஒரு பொழுதும் பழையவராக மீளுவதில்லை. அவரது தன்னிலை மேலும் செறிவாக, ஒருங்கிணைந்து, மேம்பட்ட திறன்களுடன் மீளுகிறார்.

### வாழ்வை அர்த்தப்படுத்துவது எப்படி?

முழு வாழ்க்கைக்கும் செல்லுபடியாகக் கூடிய ஒரு இலக்கை உருவாக்கிக் கொள்ளுதல். அது சமுதாயம் உருவாக்கி அளித்த இலக்காக இல்லாமல் ஒவ்வொருவரும் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் இலக்காக இருக்க வேண்டும். மேலும் அது ஒருவருடைய திறமையிலிருந்தும், தனித்தன்மையில் இருந்தும் உருவாகி வருவதாக இருக்க வேண்டுமே அன்றி பணம், பதவி, சமூக அந்தஸ்துகளைக் குறியாகக் கொண்டு உருவானதாக இருக்கக் கூடாது. தன் சுயத்திற்கு உண்மையான செயல்களைச் செய்யும்போது மட்டுமே கவனமும் அர்ப்பணிப்பும் கூடி பிரவாக நிலை சாத்தியமாகிறது. இப்படிப்பட்ட அன்றாடச் செயல்கள் வாழ்க்கைக்கான மொத்த இலக்கை நோக்கிய நகர்வாக இருக்கும்போது நாட்கள் பொருள்படுகின்றன.

(மூலம்: சொல்வனம்)

## உலக சாதனையிலும் ஒரு சத்திய வேட்கை




எதில் உலக சாதனைகள் நிகழ்த்தப் பட்டனவென்று பட்டியலிட்டுப் பார்த்தால் சில சாதனைகள் எவ்வித விவஸ்தைகளும் இல்லாமலேயே புரியப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கடதாசியால் செய்யப்பட்ட பொம்மைகளைக் கொண்டு உலகிலேயே மிக நீண்ட தூரத்துக்குக் கடதாசிப் பொம்மைகளைக் கொண்டு நடத்தப்பட்ட கண்காட்சியையும் இப்படித்தான் ஆரம்பத்தில் கருதவேண்டியிருந்தது. கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதி இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. உலகில் பல நாடுகளிலிருந்தும் அனுப்பப்பட்ட கடதாசிப் பொம்மைகளை வரிசையாக அடுக்கி 4549.7 மீற்றர்கள் நீளத்துக்கு இந்தப் பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன. தென்னாபிரிக்கா, சிரியா போன்ற தொலைதூர நாடுகளிலிருந்து மட்டுமல்ல பிரிட்டனின் லண்டன், லங்காஷயர் போன்ற இடங்களிலிருந்தும் இந்தப் போட்டிக்காகப் பொம்மைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ஒரு பொம்மைக்குத் தலா பத்து பென்ஸ் வீதம், போட்டியில் வைக்கப்பட்டிருந்த 42282 பொம்மைகளுக்கான மொத்தப் பணம் “சேவ் த சில்ட்ரன்” என்ற தொண்டு அமைப்புக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கிறது. உலகெங்கும் வாழும் நலிவடைந்த சிறுவர், சிறுமியர்களுக்கு உதவிக் கரம் நீட்டும் என்ற தொண்டு அமைப்பே இதுவென்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்த உலக சாதனை விவஸ்தை இல்லாமல் நிகழ்த்தப்படவில்லை. சாதனையிலும் கூட ஒரு சத்திய வேட்கை நிலவியதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறதல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னடா உலகம் இது.....?



**பிரதீப்:** ஏன் நீ வேற பாடசாலைக்கு மாறிட்டாய்?

**தனுஷ்:** அப்பா, அம்மாதான் மாறச் சொன்னவை.

**பிரதீப்:** ஏன்?

**தனுஷ்:** இனி நான் இங்கிலீஷ் மீடியத்திலதான் படிக்க வேணுமாம். என்னோட இங்கிலீசிலைதான் இப்ப கதைக்கிறவை. அப்பதான் லண்டனிற்கு அண்ணாவிட்ட போகலாமாம்.

**பிரதீப்:** உங்கட அப்பா தமிழ் கட்சி எம்.பி.யல்லோ. தமிழ் பேசிற மக்களை சிங்கள அரசாங்கம் அடக்கி வைச்சிருக்கு என்று சொன்னாரே...?..... ?

**தனுஷ்:** அதுதான். நான் இங்கிலீசில் படிக்கப் போறன். அண்ணா லண்டனிலை படிக்கிறார். இடைக்கிடை போராட்டம் நடத்திறவர். நானும் அங்கே போய் போராட்டம் நடத்தலாம்.

**பிரதீப்:** அப்பா அம்மா இங்கேயே இருப்பினமோ?

**தனுஷ்:** அப்பா இங்க பாராளுமன்றத் திலை இருப்பார். வயசு போன பிறகு அவரும் லண்டனுக்கு வந்திடுவார். பிறகு அண்ணா இங்க வந்து எலக்ஷன் கேட்பார்.

**பிரதீப்:** ஏன் எலக்ஷன் கேட்க அவர் வரவேணும்?

**தனுஷ்:** எம்.பி.யாகி இங்கிலீஷ் காரன்களையும் சேர்த்துக் கொண்டு விடுதலைக்குப் போராடத்தான்.



# ஹா! ஹா.. ஹி..

## முல்லாவின் சட்டை



வீட்டின் பின்புறம் வெள்ளை உருவம் ஒன்று இருப்பதைக் கண்டு தன் வில்லையும் அம்பையும் தருமாறு தன் மனைவியைக் கேட்டான் முல்லா நசுருதீன்.

- அந்த உருவத்தின் மீது அம்பை விட்டான்.
- பின் தோட்டத்திற்குச் சென்று பார்த்தான்.
- மிகவும் கலவரத்துடன் திரும்பி வந்தான்.

'மனைவி உங்களுக்கு என்னாச்சு?" என்று கேட்டா.

'ஒரு மயிரிழையில் தப்பினேன். நான் மட்டும் அந்தச் சட்டையில் இருந்திருந்தால் நான் இறந்து போயிருப்பேன். அம்பு சரியாக நெஞ்சுப் பக்கம் துளைத்திருந்தது." என்றான் நசுருதீன்.

**தம்பி:** அக்கா! இதென்ன, இந்த தேசிக்காய் மரத்திற்கு கீழே வெட்டினால் எலும்பு வருகுது.

**அக்கா:** எட, சத்தம் போடாதை. எங்கட ரினஎ்ஏ மாமாவுக்கு காதில விழுந்தால், சர்வதேச விசாரணை தேவை எண்டு பேப்பருக்கு அறிவித்தல் கொடுத்திடுவார்.

**தம்பி:** ஹய்! நல்லதுதானே அக்கா. வெள்ளைக்காரன்கள் எங்கட வீட்டுக்கு வருவாங்கள். பேப்பர்காரர் வந்து படம் எடுப்பினம்.

**அக்கா:** போடா! இது தேசிக்காய் மரத்திற்கு பசளையெண்டு, எங்கட செத்த ஆட்டை இங்கதான் புதைச்சனாங்கள்.

**தம்பி:** ஆட்டெலும்பு எண்டு கண்டுபிடிக்கும் மட்டும் எங்களுக்கு பொழுது போகும்தானே!

**அக்கா:** அங்க வன்னிக்குள்ள கண்டெடுக்கிற எலும்புக்கூட்டையும் மாட்டெலும்பு எண்டு சொல்லி முடிச்சிடுவாங்கள் தெரியுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன விலங்கு பாதுகாப்பு




ஒவ்வொரு நாடும் தனது காட்டுப் பகுதியில் எட்டு வீதத்தினை வன விலங்குகளுக்காக ஒதுக்கவேண்டும் என்ற சர்வதேசச் சட்டம் உள்ளது. இப்பகுதிக்குள் வாழும் விலங்குகள் மனிதர்களின் அழிப்பு நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கப்படுகின்றன.

மனிதன் தனது சொந்த தேவைகளுக்காக பல அபூர்வ விலங்குகளையும் உயிரினங்களையும் முற்றாக அழித்து விடுகிறான். தெந்தம், தோல், இறைச்சி, பற்கள், தேன், அரக்கு, பட்டு போன்றவற்றை வேட்டையாடினர்.

மென்மயிர் தோலுக்காக எலிகளும், நீர் நாய்களும், தோலுக்காக பலவகை மான்கள் பாம்புகள், புலிகள் கஸ்தூரிக்காக கஸ்தூரி மான்களும், தந்தத்திற்காக ஆண் யானைகளும், மருந்திற்காக முதலைகள், கருமந்திகள் போன்றவையும் வேட்டையாடப்படுகின்றன.

# அழிவை நோக்கியுள்ள உயிரினங்கள்

கடந்த 2000 ஆண்டுகளில் 106 விலங்கினங்களும் 140 பறவையினங்களும் அழிந்துள்ளன. தற்போதைய கணக்கெடுப்பின்படி மேலும் சுமார் 300 இனங்கள் அழிவின் வாயிலில் உள்ளன. பெங்குவின், புள்ளிமான், கஸ்தூரி மான், ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம், யானை சிங்கம், கரடி, புலி, காட்டெருமை, முதலை, பாம்பு, மயில், சிங்கவால் குரங்கு, பறக்கும் அணில் போன்றவற்றில் சில சிற்றினங்கள் அடியோடு அற்றுப் போகும் நிலையில் உள்ளன.





# பூகம்பம்... பூகம்பம்..



பூகம்பம் வந்த பின்னரே அதனை ரிக்டர் அளவில் அறிந்துகொள்கிறோம். போதியளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு மனிதர்களுக்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது. பூகம்பம் தாக்கும் நேரம், இடம் என்பவற்றையும் துல்லியமாக அறியும் தொழில்நுட்பத்தை மனித அறிவியலாளர்கள் இதுவரை அண்மிக்கவில்லை.

ஆனால், “பூகம்பம் வருவதை விலங்குகளும், பறவைகளும் முன்கூட்டியே உணர்ந்து கொள்கின்றன” என்றதொரு கருத்து உலகத்தில் உள்ளது.

உண்மையில் விலங்குகள் பூகம்பத்தை உணர்ந்து கொள்ளுமா என்றால், அதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. விஞ்ஞானம் அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆனால், சீனா, ஜப்பான், இந்தோனேஷியா போன்ற நில நடுக்கம் உள்ள அதிகம் நிகழக் கூடிய நாடுகள், “விலங்குகளுக்கு இந்த ஆற்றல் உண்டு” என்று வாதிடுகின்றன. இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழ்ந்திருந்தால், மனிதனும் பூகம்பம் வருவதை முன் கூட்டியே அறிய முடியும் என்கிறார்கள்.

விலங்குகள் உண்பது, உறங்குவது எல்லாமே பொதுவாக தரையில்தான். தரை மீதுதான் பெரும்பாலான நேரங்களில் காதை வைத்துத் தூங்கும். தரைக்கும் விலங்குகளுக்கும் தொடர்பு உண்டு. அதனாலேயே தரையில் ஏற்படும் மெல்லிய அதிர்வுகளைக் கூட அவற்றால் உணர்ந்து கொள்ள முடிகிறது என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம்

1789ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சி நடந்தபோது பெண்களும் போராட்டக் களத்தில் இறங்கினர். சமத்துவ உரிமைகள் வேண்டும் என்றும் எட்டு மணி நேர வேலை, வேலைக்கு ஏற்ற ஊதியம், பெண்களுக்கு வாக்குரிமை, பெண்களை அடிமைகளாக நடத்தக் கூடாது போன்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடினர். போராட்டத்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் மன்னர் லூயிஸ் பிலிப் தன் மன்னர் பதவியைத் துறந்தான்.

அதன் வெற்றியைத் தொடர்ந்து ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் போராட்டம் நடத்தினர். பிரான்ஸில் பிரஷ்யனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங் பெண்களை அரசவை ஆலோசனை குழுக்களில் சேர்க்கவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புக்கொண்ட அந்த நாள் 1848 மார்ச் 8.

அமெரிக்கப் பெண்கள் 1908ம் ஆண்டு வாக்குரிமை கேட்டுப் போராடினர். 1910ம், ஆண்டு ஒப்பன் ஹேகனில் கிளாரா ஜெட்கின் தலைமையில் அனைத்துலக பெண்கள் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அமைப்பின் சார்பாக 1911ம் ஆண்டு மார்ச் 19ம் திகதி டென்மார்க் ஆஸ்திரியா ஜெர்மனி இன்னும் சில ஐரோப்பிய நாடுகளின் பெண் பிரதிநிதிகள் முதலாவது சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர்.

இந்தக் கொண்டாட்டத்தின் போதுதான் மார்ச் 8ஆம் திகதியை சர்வதேச மகளிர் தினமாக கொண்டாட வேண்டுமென்பது முடிவு செய்யப்பட்டது.

இன்றைய நிலையில், மேற்குலக நாட்டுப் பெண்கள் சமத்துவ வாழ்வை அனுபவித்தாலும், வறுமையில் வாடும் சிறிய நாடுகள், வளர்ந்துவரும் நாடுகளிலுள்ள பெண்கள் இன்னமும் இரண்டாம் நிலையில் அல்லது அடக்கியொடுக்கப்பட்ட நிலையிலோதான் வாழ்கிறார்கள்.

இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், அரசின் அபிவிருத்திகள் தொட்டுப் பார்க்காத மூலைகளிலுள்ள கிராமங்களில் பெண்களின் மீதான ஒடுக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன. அதேநேரம், மும்பாய், டில்லி, சென்னை போன்ற நகரத்து பெண்கள் ஆண்களுடன் போட்டியிடுமளவு சமத்துவத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டைப் பொறுத்தவரையும் பெண்கள் உயர்கல்வி பெற்று சகல துறைகளிலும், ஆண்களுக்கு சமமாக தொழில்வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் தொழில்ரீதியான அதிகாரத்தினைக் கொண்டிருப்பவர்களாக மாத்திரமே அவர்கள் இருக்கிறார்கள். மத்தியதரக் குடும்பங்களில் சமையலறையிலும், அலுவலகங்களிலும் பெண்கள் ஓய்வின்றி உழைக்கிறார்கள். ஆண்களுக்கென்றே விதிக்கப்பட்ட பொருளாதாரச் சுமையைப் பெண்கள் பகிர்ந்துகொண்டபோதும் ஆண்கள் பெண்களுக்கு விதிக்கப்பட்ட சமையலறைச் சுமையைப் பகிர்ந்துகொள்ளவில்லை என்பதே இன்றைய பெண்களின் ஆதங்கம்.

> **ஆண்-பெண் சமத்துவம் மட்டுமல்ல, மனித சமத்துவத்திற்கான போராட்டத்திலும் பெண்கள் தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது.**

சுமார் 226 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் போராடிப் பெற்ற உரிமைகளை மேலும் மேலும் வலுப்படுத்தி மற்றைய சந்ததிக்கு வழங்குவதே இன்றைய பெண்களின் கடமை.

## இலங்கையின் முதலாவது பெண் எம்.பீ.க்கள்

சுதந்திர இலங்கையில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பெண் எம்.பி.யின் பெயர் திருமதி புளோரன்ஸ் சேனநாயக்கா. இவர் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவரது கணவரும் லங்கா சம சமாஜக் கட்சியின் முக்கிய உறுப்பினர். முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1847ஆம் ஆண்டு ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் சுமார் 19 நாட்கள் நடைபெற்றன. இரத்தினபுரி மாவட்டத்தின் எல்லைப் புறத் தொகுதியான கிரியல்ல தொகுதியில் போட்டியிட்டே இவர் வெற்றி பெற்றார். 1949 ஆம் ஆண்டு கண்டித் தொகுதியில் இடம்பெற்ற இடைத் தேர்தலில் தாமர குமாரி இலங்கரத்ன வெற்றி பெற்றார். அப்போது இவருக்கு வயது 24. 1970ஆம் ஆண்டு கலகெதர தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் எம்.பி.யாகத் தெரிவானார் தாமரகுமாரி. முதலாவது தமிழ்ப் பெண் எம்.பி. திருமதி ரங்கநாயகி பத்மநாதன் ஆவார். இவர் பொத்துவில் தொகுதி எம்.பி.யாக 1980ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறி சொல்வது சாத்தியம்



தெருவோரத்தில் அமர்ந்துகொண்டிருக்கும் குறவர்கள் நீங்கள் நினைப்பதையெல்லாம் சொல்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டுப் போயிருப்பீர்கள். அவர்கள் மனிதர்களின் உளவியலை அறிந்துகொண்டு குறி சொல்பவர்கள்.

ஆனால், அது எம்மாலும் முடியும் என்கிறார்கள், நரம்பியல் விஞ்ஞானிகள்.

உலக அளவில் முன்னணி நரம்பியல் அறிவியலாளர்கள் சிலர் இணைந்து, ஒரு மனிதரின் மூளைக்குள்ளாக நுழைந்து அவர் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளார்களாம்.

மனிதர்கள் சிந்திக்கும் போது எத்தகைய மாற்றங்கள் மூளையில் ஏற்படுகின்றன என்பதை அறிய உயர் நிலை ஸ்கேனரைப் பயன்படுத்தினர். இருட்டில் ஒரு சுவற்றில் எழுதப்பட்ட வார்த்தைகளை மின்பந்தம் கொண்டு வாசிப்பது போல், மூளையைச் சுற்றித் ஸ்கேனரைக் கொண்டு தேடி, கண்டுபிடிப்பதைப் போன்றது இந்தத் தொழில்நுட்பம் என்கிறார் இந்த ஆய்வினை முன்னின்று நடத்திய ஜெர்மன் நாட்டு மேக்ஸ் பிளாங்க், மனித எண்ணங்கள் மற்றும் மூளை அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஜான் டைலன் ஹெய்ன்ஸ். லண்டனின் பல்கலைக்கழகக் கல்லூரி , ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நரம்பியல் அறிவியலாளர்களுடன் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டார் ஜான் டைலன் ஹெய்ன்ஸ்.

இத்தகைய தொழில்நுட்பம் ஒழுங்கமைவோடு, நெறிப்படுத்தப்பட்டால் அது குற்றவாளிகளை விசாரிக்கவும், சில குற்றங்கள் நிகழாமல் தவிர்க்கவும் உதவும்.

ஆனால், இவற்றை நடைமுறைப்படுத்துவதில் தார்மீக நெறிமுறை சார்ந்த சிக்கல்கள் உள்ளன. தனிமனித உரிமைகள் பெருமளவு மீறப்படலாம். பெரும் குழப்பங்களை ஏற்படுத்தலாம்.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க மனிதகுலம் தயார் இல்லை.

# கார்மட் செயற்கை இதயம் 5 வருட உத்தரவாதம்!



இதய மாற்று சிகிச்சைக்குக் காத்திருப்பவர்களுக்கு மாற்று இதயம் கிடைக்கும் வரை செயற்கை இதயத்தைப் பொருத்துவார்கள்.

அண்மையில் பிரான்சில் "கார்மட்" எனும் உயிரி மருந்தியல் துறை நிறுவனம் புதிய செயற்கை இதயத்தை வடிவமைத்து சாதனை புரிந்துள்ளது.

மாரடைப்பு வந்தவரின் இதயத்தில் எல்லா தமனி இரத்தக் குழாய்களும் அடைபட்டு ஆஞ்சியோ பிளாஸ்டி, பைபாஸ் சிகிச்சை எதுவும் பலனளிக்காமல் போனால், அவருக்குச் செயற்கை இதயத்தைப் பொருத்தலாம்.

செயற்கை இதயத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி 50 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது. 1982ல் வடிவமைத்த "ஜார்விக் ரூ 7" (Jarvik 7) எனும் செயற்கை இதயம் இதயத்திற்கு வெளியே பொருத்தப்பட்டது. இது அதிகபட்சமாக 6 மாதங்களே செயல்பட்டது.

இதனைத் தொடர்ந்து, போனிக்ஸ்-7 (Phoenix 7), அபியோகோர் (AbioCor), சின்கார்டியா (SynCardia) என்று பல செயற்கை இதயங்கள் செயலுக்கு வந்தன. இவை நோயாளியின் இதயத்துக்குள்ளேயே பொருத்தப்பட்டு செயல்பட்டன. இவற்றில் 2010ல் சின்கார்டியா செயற்கை இதயம் மட்டும் 4 வருடங்களுக்குச் செயல்பட்டது.

இப்போது "கார்மட்" எனும் செயற்கை இதயம் கிடைத்துள்ளது. இதை உருவாக்கிய டாக்டர் அலென் கார்ப்பென்டியர் கூறுகையில்,

இது லித்தியம் பட்டரி மூலம் இயங்குகிறது. பட்டரியை இடுப்பில் அணிந்துகொள்ள வேண்டும். இயற்கை இதயத்திலிருந்து செயற்கை இதயத்துக்கு இரத்தம் வருகின்ற இடம் பசுவின் திசுக்களால் தயாரிக்கப்பட்டது. ஆகவே, இதை உடல் எளிதாக ஏற்றுக்கொண்டது. இயற்கை இதயத்துக்கு நிகராக இது கருதப்படுகிறது. இதன் எடை 900 கிராம். இது 5 ஆண்டுகளுக்கு நீடித்து உழைக்கும்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் சமுதாயமும்

மானுட நுண்ணுணர்வின் வளர்ச்சியின் மிக உயர்ந்த வடிவங்களிலொன்று இலக்கியம். அது ஒரு கலை வடிவம். கலைக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவைப் புறக்கணிக்க முடியாது. ஏனெனில் கலையே ஒரு சமூக நிகழ்ச்சிப் போக்குத்தான். முதலாவதாக, ஒரு கலைஞர் - அவரது சொந்த, நேரடியான, முதன்மையான அனுபவம் என்னதான் தனிச் சிறப்பானதாகவும் அவருக்கே உரியதாகவும் இருந்தாலும்கூட - ஒரு சமூக ஜீவி. இரண்டாவதாக, அவரது படைப்பின் மீது அவரது நேரடியான, சொந்த, முதன்மையான அனுபவம் எத்தகையதொரு ஆழமான முத்திரையைப் பதித்திருந்தாலும்கூட, அந்த அனுபவத்தைத் தனது கலைத்திறன் கொண்டு உருத்திரட்சி செய்து, தனிச்சிறப்பான, அவருக்கு மட்டுமே சாத்தியப்படுகிற, பிறரால் நகல் செய்ய முடியாத ஒரு கலைப்படைப்பு என்ற புறப்பொருள்களை அவர் ஆக்கித் தந்திருந்தாலும்கூட, அந்தக் கலைப்படைப்பு, எப்போதுமே அக்கலைஞருக்கும் சமுதாயத்தின் இதர உறுப்பினர்களுக்குமிடையே உள்ள ஒரு பாலம்தான், ஓர் இணைப்புக் கண்ணிதான்.

ஏனெனில் ஒரு கலைப் படைப்பு மக்கள் மீது தாக்கம் செலுத்துகிறது. அவர்கள் தமது கருத்துக்கள், இலக்குகள், விழுமியங்கள் ஆகியவற்றை மீண்டும் உறுதி செய்து கொள்வதற்கோ அல்லது அவற்றை மறுமதிப்பீடு செய்வதற்கோ அல்லது அவை மதிப்பிழக்கும்படி செய்வதற்கோ தன் பங்களிப்பை வழங்குகிறது. தான் தட்டியெழுப்பும் உணர்ச்சிகள், உணர்வுகள், கருத்து நிலை ஆகியவற்றின் மூலம் மக்களை உலுக்குகிற, அவர்களது மனதைத் தொடுகிற அல்லது வருடுகிற ஒரு சமூக சக்தியே கலை. எனவே ஓர் உண்மையான கலைப் படைப்பு நம் மனதைத் தொடுகின்றதே, அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு, அதற்கு முன்பு இருந்த நிலையிலிருந்து சற்று மாறுபட்ட மானுடர்களாக மாற்றம் பெறுகிறோம்.

“எழுத்தாளர்கள் எழுத்தாளர்களாகவே பிறக்கிறார்கள், படைப்பாற்றல் அவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம், யாரேனும் அவர்களது எழுத்துக்களைப் படிக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றி அவர்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை” என்ற கருத்துக்களுக்கு நேர்மாறான உண்மை என்னவென்றால் ஓர் எழுத்தாளர் படைக்கும் ஒவ்வொரு படைப்பும் அவர் மேற்கொள்ளும் ஓர் உணர்வுபூர்வமான செயற்பாடுதான். ஒரு சமுதாயத்தில் நிகழும் சமூக, அரசியல் அல்லது வேறு நிகழ்வுகளால் உந்தப்பட்டு, தூண்டப்பட்டு, உத்வேகம் பெற்ற எழுத்தாளர்கள் நிஜம் போன்ற ஓர் உலகைப் படைக்கின்றனர். அது அவர்களது சமகாலத்தில் நிகழ்கிற சம்பவங்களின் உயிரோட்டமுள்ள பதிவுகளோ ஆவணங்களோ மட்டுமல்ல, மாறாக அவற்றிற்கு அடிப்படையாக உள்ள வரலாற்று இயக்கப் போக்குகளின் பதிவுகளுமாகும்.

**பல்வேறு கருத்துநிலைக் கண்டோட்டங்களுக்கிடையே நடுநிலை வகித்தல் என்பது இருக்கமுடியாது. அது வாழ்க்கைக்கே முரணானது, ஏனெனில் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லாச் சமயங்களிலுமே எல்லாப் பிரச்சினைகளிலுமே ஒரேயொரு பக்கம் சாய்கிற, சார்ந்திருக்கிற, பக்கச்சார்பு கொள்கிற, ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்கிற கட்டாயத்துக்குள்ளாகிறார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய எரியும் பிரச்சினை களின்பால் அக்கறை கொண்ட எழுத்தாளர்கள், வரலாற்றுரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிப் போக்குகளை வடித்தெடுத்து, இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்குமிடையே உள்ள இணைப்புக் கண்ணிகளை வெளிப்படுத்துகின்றனர். கற்பனையான அல்லது யதார்த்தமான பாத்திரங்களைப் படைப்பதன் மூலம் ஓர் எழுத்தாளன் மானுடர்களின் சமூக வாழ்க்கையை, சமூக இருப்பை, சமுதாயத்தின் குறிப்பிட்ட பிரிவினர் வரலாற்றில் வகிக்கும் பாத்திரத்தை, அவர்களது நலன்கள் ஒன்றோடொன்று முரண்பட்டு மோதுவதை, அந்த மோதல்களின் தன்மைகளை, அந்த நலன்களுக்கிடையே உள்ள பிளவுகளை ஆராய்கிறார். நன்மை, தீமை, அர்த்தம், அர்த்தமின்மை என்பவற்றைக் குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்திற்குள் மட்டும் அடங்காத, திட்டவட்டமான சில பருண்மை வடிவங்களுக்குள் மட்டும் முடக்கி வைக்க முடியாத, எல்லாக் காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் உரிய, அல்லது அவற்றுக்கும் மேலான விஷயங்களாக சித்தரிக்கும் எழுத்துகளும்கூட ஒரு குறிப்பிட்ட வரலாற்று அனுபவத்தின் தூ ண்டுதலுக்குப் பிறகே சாத்தியமாகிறது.

எனவே ஓர் எழுத்தாளர், யதார்த்தத்தைச் சித்தரிப்பது மட்டுமல்ல, ஆபிரிக்க எழுத்தாளர் எங்கூக் வா ட்டோங் கூறுவதுபோல, அந்த யதார்த்தத்தை ஒரு குறிப்பிட்ட நோக்குநிலையிலிருந்து, கண்ணோட்டத்திலிருந்து பார்க்குமாறு நம்மைத் தூண்டுகிறார்.

கலை கலைக்காகவே என்பதோ அல்லது கலைப்படைப்பு, இலக்கியப் படைப்பு அல்லது அதைப் படைக்கும் படைப்பாளி நடுநிலையோடு இருப்பது என்பதோ சாத்தியமற்றது. நடுநிலை அல்லது பக்கச் சார்பின்மை என்பதை "வாசனைத் தைலம் தெளிக்கப்பட்ட நாய் விட்டை" என்கிறார் நைஜீரிய எழுத்தாளர் சினுவா அச்செபெ.

பல்வேறு கருத்துநிலைக் கண்டோட்டங்களுக்கிடையே நடுநிலை வகித்தல் என்பது இருக்கமுடியாது. அது வாழ்க்கைக்கே முரணானது, ஏனெனில் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லாச் சமயங்களிலுமே எல்லாப் பிரச்சினைகளிலுமே ஒரேயொரு பக்கம் சாய்கிற, சார்ந்திருக்கிற, பக்கச்சார்பு கொள்கிற, ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்கிற கட்டாயத்துக்குள்ளாகிறார். "நமது அன்றாட வாழ்வை வடிவமைக்கும் வர்க்க அதிகாரக் கட்டமைப்புகளிலிருந்து ஏதோவொரு தரப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிறார். மக்கள் பக்கம் நிற்பதா அல்லது மக்களை அழுத்தி வைக்க முனையும் சமூக சக்திகளின் பக்கமா என்பதை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் கட்டாயத்திற்குள்ளாகிறார்" என்கிறார் எங்கூக்.

கென்ய எழுத்தாளர் எங்கூக் வா ட்டோங் கிக்கியு மொழியில் எழுதிய "Devil on th cross" என்ற நாவல் தமிழில் "சிலுவையில் தொங்கும் சாத்தான்" என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை அவர்கள் வழங்கிய நூல் அறிமுக உரையின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது.

## சாக்கடலில் தற்கொலை செய்ய முடியாது!

பலஸ்தீனம் - இஸ்ரேல் - ஜோர்டான் நாடுகளுக்கு இடையிலுள்ளது சாக்கடல். இக்கடலில் உயிரினங்கள் வாழமுடியாதாம் எனவே சாக்கடல் என அழைக்கப்படுகின்றது. பொதுவான கடல்நீரிலுள்ள உப்புத்தன்மையை விட 8.6 மடங்கு அதிகளவு உவர்ப்புடைய நீரைக் கொண்டது. மக்னீசியம் குளோரைட் 53%, பொட்டாசியம் குளோரைட் 37%, சோடியம் குளோரைட் (சாதாரண உப்பு) 8%, பல்வேறு உப்புக்கள் 2%. இக்கடலில் உள்ளன.

இதன் உவர்த்தன்மை மாறிக்கொண்டிருந்தாலும் அண்ணளவாக 31.5%. அதிகளவு உப்பிருப்பதால் நீரின் அடர்த்தி அதிகமாகக் காணப்படுகிறது. இந்நீரை விட அடர்த்தி குறைவாயுள்ள எதுவும் சாக்கடல் நீரில் மிதக்கும். பல கனிமங்களின் படிவுகள் சாக்கடலின் கரையில் காணப்படல், மாசுபடாத வளி, வளியமுக்கம் அதிகமாயிருத்தல், அதிஊதாக் கதிர்களின் வீச்சுக் குறைவாயிருத்தல் என்பன அமைவதால் உடல் மற்றும் அழகுச் சிகிச்சைக்குப் புகழ் பெற்ற இடமாகவும் சாக்கடல் விளங்குகிறது.

நீரின் அடர்த்தி அதிகம் என்பதால் இக்கடலில் எந்தப் பொருளும் மூழ்காது. அதனால் நீச்சலடிப்பதற்கு சிறப்பான இடம்.

சாக்கடலின் நீளம் 42 மைல் அகலம் 11 மைல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவே மருந்து



## புழுக்கொடியல்மா கேசரி

தேவையானபொருட்கள்:

| | | | |
|---|---|---|---|
| புழுக்கொடியல் மா | 1 கிலோ | ரவை | 1/4 கிலோ |
| பால் | 1/2 போத்தல் | நெய் | 1/2 போத்தல் |
| சீனி | 350 கிராம் | உப்பு | தேவையானளவு |
| ஏலக்காய் | 5 | பேரீச்சம்பழம் | 50 கிராம் |
| பிளம்ஸ் | 50 கிராம் | கஜு | 50 கிராம் |

### செய்முறை

பேரீச்சம்பழம், பிளம்ஸ், கஜு ஆகியவற்றை தனித்தனியே நெய்யில் வறுத்தெடுத்து, பின் ரவையையும் வறுத்தெடுக்கவும். ரவையையும் புழுக்கொடியல் மாவையும் 1/2 போத்தல் நீர் விட்டு வேகவிட்டு, பின் பாலையும் சீனியையும் சேர்த்து நன்கு வேக விடவும். கஜு, பிளம்ஸ், பேரீச்சம்பழம், ஏலக்காய், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அடிப்பிடிக்காமல் நெய் விட்டுக் கிளறவும். சட்டியில் ஒட்டாமல் பதமாக வந்ததும் நெய் தடவிய தட்டில் கொட்டி வைக்கவும். இது சாப்பிடுவதற்கு தயார்.

## ஊதுமாக்கூழ்

அரிசிமா, உளுத்தம் மா ஒவ்வொரு சுண்டு, பனங்கட்டி அரைக் கிலோ, தேங்காய் பாதி, நற்சீரகம், மிளகு சிறிதளவு என்பவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

### செய்முறை

தேங்காயைத் துருவி பாலை எடுக்கவும். அரைவாசிப் பாலுடன் பனங்கட்டியைச் சேர்த்துக் காய்ச்சவும். மிகுதிப் பாலுடன் உழுத்தம்மா, அரிசிமா, பொடியாக்கிய நற்சீரகம், மிளகு ஆகியவற்றைச் சேர்க்கவும். இக் கலவையை காய்ச்சிய பாலுடன் கொட்டிக் கிளறவும். நன்றாகக் கொதித்தவுடன் திரவநிலையில் இறக்கிப் பரிமாறவும்.

## பனம் பால்

பனை மரத்தின் பால் பதநீர் எனப்படும். சுண்ணாம்பு கலவாதது கள் எனப்படும். அதிகாலையில் பனம் பாலை 100 -200 மி.லி. அருந்தி வந்தால் உடல் குளிர்ச்சி பெறும். ஊட்டம் பெறும். வயிற்றுப் புண் ஆறிவிடும். புளிப்பேறிய கள் மயக்கம் தரும், அறிவை மயக்கும். சுண்ணாம்பு சேர்த்த பதநீர் எல்லோருக்கும் சிறந்த சுவையான சத்தான பானமாகும். பதநீரைக் காய்ச்சினால் இனிப்பான கருப்பட்டி கிடைக்கும்.

## குழந்தைக்கு உணவூட்டல்



உங்கள் குழந்தையைச் சாப்பிட வைப்பதில் சிரமப்படுகிறீர்களா? எமக்குத் தெரிந்த ஆலோசனையொன்றைச் சொல்கிறோம். முயன்று பாருங்கள்.

குழந்தைகள் சாப்பிடுவதற்கென்று சிறிய தட்டை வைக்க வேண்டாம். நீங்கள் சாப்பிடுவது போன்ற தட்டு ஒன்றையே உங்கள் குழந்தை சாப்பிடுவதற்கும் கொடுங்கள். பெரிய தட்டில் குழந்தைக்கு போதுமான சிறியளவு உணவை வையுங்கள். அதிலும் உங்களால் முடிந்தால் இரண்டு அல்லது மூன்று வகையான உணவுகளை வையுங்கள். பார்க்க அழகாகவும் இருக்க வேண்டும்.

குழந்தை தானே உணவை எடுத்து உண்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள். சாப்பிடும் நேரத்தில் குழந்தையை எவ்வாறாயினும் மிரட்டாதீர்கள்.

குழந்தை ஆய்வாளர்களும் இவ்வாறுதான் சொல்கிறார்கள். சாப்பிடும் நேரத்தில் குழந்தைகளை மிரட்டினால் உணவை அவர்கள் விழுங்கலாம். ஆனால் உணவின் மீதான வெறுப்பும், சமிபாட்டுக் குறைவும் ஏற்பட வாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டெங்கு காய்ச்சல் என்பது திடீரெனத் தோன்றும் ஒரு வைரஸ் நோயாகும். டெங்கு நான்கு வகை வைரஸ்களால் ஏற்படுகிறது. ஏடிஸ் ஏஜிப்டி (Aedes aegypti) என்ற ஒரு வகை நுளம்பால் இது பரவுகிறது.

1990ஆம் ஆண்டுகளில் நுளம்பு மூலம் பரவும் முக்கியமான நோயாக டெங்கு இருந்தது. இது ஒரு தொற்று நோயாக பரவும் நெருக்கடி மிகுந்த பகுதிகளில் சுமார் 2.5 பில்லியன் மக்கள் வாழ்ந்து வருவதாக உலக சுகாதார கழகம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் டெங்கு நோய் அபாயம் அதிகரிக்கும் பிரதேசங்களாக இலங்கையில் பதினான்கு மாவட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து சுகாதார அமைச்சும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏடிஸ் ஏஜிப்டி என்ற நுளம்பு அதிகமாக காணப்படும் வெப்பமண்டல நாடுகளில் டெங்கு காய்ச்சல் அதிகமாக வருகிறது. திறந்த வெளியில் தேங்கும் நீர், நீர்ப் பாசன கால்வாய்கள் ஆகியவைகளில் இந்த வகை நுளம்புகள் அதிகம் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

**ஐந்து நோய் அறிகுறிகள்:**

1. திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டு உடல் உஷ்ணம் அதிகரித்தல். 2. சருமத்தில் வேனற்கட்டிகள், அல்லது வெடிப்புகள், நோய் தொற்றிய 3-4 நாட்களில் உடலின் நடுப்பகுதியில் தோன்றி, முகம், கை, கால்கள் என்று பரவ தொடங்கும். 3. தசை வலி. 4. மூட்டுகளில் வலி. 5. தலைவலி.

**நோய் அறிதல்:**

மூன்று நாட்களில் காய்ச்சல் சிறிதும் குறையாவிட்டால் உடனடியாக வைத்தியரை அணுகி இரத்த பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இரத்தத்தில் சாதாரணமாக இருக்க வேண்டிய லியூகோசைட்ஸ் என்ற வெள்ளை இரத்த அணுக்களின் அளவு (4000-10,000சி.எம்.) எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை பரிசோதனை செய்தல்.

டெங்கு காய்ச்சலின் போது இரத்தத்தில் உள்ள த்ராம்போசைட்டோபீனியா இரத்த வட்டுக்களின் (platelets) எண்ணிக்கை குறைவாகக் காணப்படும்.

டெங்கு வைரஸிற்கு எதிராக உடல் உற்பத்தி செய்யும் ஆன்ட்டி-பாடி என்று அழைக்கப்படும் எதிர்ப்பு சக்தியை பரிசோதனை செய்யும் இரத்த நிணநீர் பரிசோதனை ஆகியவைகள் இந்த நோயை கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்படும்.

**சிகிச்சை:**

டெங்குக் காய்ச்சல் குணமாக, ஓய்வுடன் திரவ வகை உணவுகளை அதிகம் உள்ளெடுப்பது, உடல் உஷ்ணத்தைக் குறைக்க வைத்தியர் சிபார்சு செய்யும் மாத்திரைகள் ஆகியவை அவசியம். நோய் முற்றிப் போகும்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை யளிக்கப்பட வேண்டும். இதற்கான தகுந்த ஆலோசனைகளை உங்கள் மருத்துவர் வழங்கக்கூடும். இரத்த வட்டுக்கள் அளவு 40,000-த்திற்கும் குறைவாக இறங்கும்போது புதிய இரத்தமோ அல்லது இரத்த வட்டுக்கள் நிறைந்த பி.ஆர்.பி ஏற்றப்படும்.

**முற்பாதுகாப்பு:**

கொசுக்கடிகளிலிருந்து நம்மை பாதுகாப்பதன் மூலம் இதனைத் தடுக்கலாம். நுளம்புகளை விரட்டுவது, அழிப்பது, நுளம்பு உற்பத்தியாகாமல் தடுப்பது போன்ற நடவடிக்கைகளுக்கு அரச திணைக்களங்கள், பொதுமக்கள் ஆகிய அனைத்து மட்டத்திலும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பேத்கர் திரைப்பட விமர்சனம்



ஆங்கிலம், ஹிந்தி மற்றும் பல மொழிகளில் மம்முட்டியின் நடிப்பில் 1998இல் வெளிவந்த அம்பேத்கர்

1991ஆம் ஆண்டு இந்தியாவின் மகாராஷ்டிர அரசு இந்தப் படத்தின் தயாரிப்புக்காக 7.7 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. படத்தில் மலையாள முன்னணி நடிகர் மம்முட்டி அம்பேத்கராக வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஜாபர் பட்டேல் இயக்கம் செய்திருக்கிறார். ஆங்கிலத்தில் மட்டுமல்லாது, இந்தியாவின் ஒன்பது மொழிகளில் டப்பிங் செய்யப்பட்ட இந்தப் படத்தின் ஆங்கிலப் பதிப்பு, 1999ஆம் வருடம் வெளியாகியுள்ளது. ஹிந்தி பதிப்பு 2000ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆந் திகதி வெளியானது.

மிகத் துல்லியமாக ஆய்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட சிறந்த



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கார்

படமாக பத்திரிகைகள் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றன. இதனால் அந்த ஆண்டுக்கான சிறந்த படம், சிறந்த நடிகர் மற்றும் சிறந்த கலை இயக்கம் உள்ளிட்ட பிரிவுகளில் தேசிய விருதுகளை இப்படம் பெற்றுள்ளது. மம்முட்டி இந்தப் படத்தின் மூலம் சிறந்த நடிகருக்கான தேசிய விருதை மூன்றாவது முறையாகப் பெற்றிருக்கிறார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளிலும் டப்பிங் செய்யப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்ற கொள்கையுடன் அதற்கான நிதியுதவிகூட மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் 2007ஆம் ஆண்டு வரை இத் திரைப்படத்தை தமிழில் மறுஆக்கம் செய்து வெளியிடுவதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

2007ஆம் 'விஸ்வாஸ்" சுந்தர் 'அம்பேத்கர்" திரைப்படத்தை தமிழில் வெளியிடும் உரிமையை பெற்றிருக்கிறார். ஆனால், பெரும்பாலான தியேட்டர்களில் திரையிட முடியாத சூழல் தமிழகத்தில் உள்ளது என்கிற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டார். அதனால் விஸ்வாஸ் சுந்தர் இத்திரைப்படத்தை வெளியிட முன் வரவில்லை.

இந்த நிலையில் சத்தியசந்திரன் என்னும் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றத்தில் 'அம்பேத்கர்" திரைப்படத்தை தமிழகத்தில் விரைவில் வெளியிட வேண்டும் என்று கோரி மனு செய்துள்ளார். விசாரணை முடிவில் "இன்னும் நான்கு வாரங்களுக்குள் படத்தை வெளியிட வேண்டும்" என்று 2013 மே 15-ம் தேதி உத்தரவு பிறப்பித்தது. ஆனால் படம் வெளியாகவில்லை. உயர்நீதிமன்றம் இறுதியாக 2013 டிசம்பர் 3-ம் தேதியன்று அப்படத்தினை எப்படியும் வெளியிட்டாக வேண்டும் என்ற உத்தரவினை வெளியிட்டது.

முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பாக பல்வேறு ஊர்களில் இருக்கும் திரையரங்குகளை அவர்கள் அணுகியிருக்கிறார்கள். தமிழகத்தில் 1800 திரையரங்கங்கள் இருக்கின்றன. இந்தியத் திருநாட்டின் அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொடுத்தவரின் வாழ்க்கை வரலாற்று திரைப்படத்திற்கு தியேட்டர்கள் கிடைக்கவில்லை.

அம்பேத்கரின் 65 வருட கால வாழ்க்கையை முழுமையாகக் காட்ட முடியாது என்பதால் சுருக்கமான காட்சிகள் மூலம் காட்டியிருக்கிறார்கள். இத்தனை படிப்புகளை படித்திருக்கும் முதல் இந்தியர் அம்பேத்கர் என்பதும், அந்த முதல் இந்தியரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். காந்தியாரின் மரியாதைக்குரிய எதிரியாகவும் திகழ்ந்தவர் அம்பேத்கார். இதனாலேயே சுதந்திரத்திற்கு பின் ஆட்சியிலிருந்தவர்கள் அம்பேத்கரை பற்றிய பல உண்மைகளை மறைத்திருக்கிறார்கள்.

மாட்டு வண்டியில் தனது சகோதரனுடன் பேசிக் கொண்டே செல்கையில் அவர்களுடைய பேச்சை வைத்தே அவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்து வண்டிக்காரன் வண்டியைக் கவிழ்த்துவிடும் காட்சி.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அவர் படிக்கின்றபோது நடைபெற்ற சம்பவங்கள். இந்தியர்களை கேலியாகப் பார்க்கும் மேல்நாட்டு வர்க்கத்திற்கு அம்பேத்கர் கொடுக்கின்ற பதிலடிகள்.

கல்வியின் மூலமே ஒரு சமூகம் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற முடியும் என்பதை அம்பேத்கர் தெளிவுபடுத்தியிருக்கிறார். 17 வயதில் ராமாபாயை திருமணம் செய்து முடித்த கையோடு வெளிநாட்டு வந்து படிப்பில் முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்.

நாடு திரும்பியவுடன் பரோடா மன்னரின் சமஸ்தானத்திலேயே கணக்கு பார்க்கும் வேலைக்கு அமர்கிறார். அங்கே அவர் சந்திக்கும் அவமானங்கள் மிக அழகாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கீழே வேலை பார்ப்பவராக இருந்தாலும் ஒரு டம்ளர் தண்ணியை கொண்டு வந்து கொடுக்க மனம் இடம் கொடுக்காத அளவுக்கு சாதிப் பித்துப் பிடித்தவர்கள். இது குறித்து பரோடா மன்னருடன் அம்பேத்கர் பேசும்போது மன்னர் "இவ்வளவுதான் என்னால் முடியும்.." என்று சொல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரைப்படம் நான்கு தேசிய விருதுகளை வென்றது. எனினும் பல தடங்கல்களைக் கடந்து தமிழில் கடந்த 2013ஆம் ஆண்டிலேயே திரைக்கு வந்தது.

அப்போதைய இந்திய அரசியல் சூழலை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றும்போது, நீர் அருந்த விடாமல் தடுத்ததையும் எதிர்த்து தனது தாகத்தைத் தீர்த்துவிட்டு, "வேணும்னா நீங்க வரும்போது உங்க வீட்ல இருந்தே தண்ணி கொண்டு வந்திருங்க.." என்று அம்பேத்கர் சொல்லும் காட்சி மிக ரசனையானது..

நன்கு படித்து, நல்ல வேலையில் இருக்கும் தனக்கே இத்தனை இடர்ப்பாடுகளும், சோதனைகளும் கிடைக்கின்றபோது படிப்பறிவில்லாத ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் என்னென்ன சோதனைகளை தினம்தோறும் சந்தித்து வருவார்கள் என்று அவர் சிந்தித்து செயல்பட்டிருக்கிறார்.

சைமன் கமிஷனை காங்கிரஸ் புறக்கணித்தபோதிலும் அம்பேத்கர் "இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் இப்போது இருக்கும் ஒரேயொரு வழக்கறிஞர் நான்தான்" என அங்கு ஆஜராகி, தான் சார்ந்த மக்களுக்காக வாதிடுவது மிக அழகாகப் படமாக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் கொலாபா மாவட்டத்தில் இருக்கும் மகத் என்னும் ஊரிலிருக்கும் சௌதார் குளத்து நீரை தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடையை எதிர்த்து அம்பேத்கர் நடத்தியிருக்கும் போராட்டம் அற்புதமானது. 1927 மார்ச் 20இல் அவர் வரலாற்று முக்கியத்துவம்மிக்க இந்தப் போராட்டத்தை நடத்தியிருந்தார்.

அந்நியர்களுக்கெதிராக சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற அதே காலகட்டத்தில் தமது மக்களை அடக்கியொடுக்கி கொடுமைப்படுத்திய தனது நாட்டினருக்கு எதிராக அம்பேத்கர் நடத்திய போராட்டம் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடவுள்கள், சனாதன தர்மம், வேதங்கள், சாதிகள் என்று இந்து மதத்தில் இருந்த குழப்பங்களை சாக்காக வைத்து ஆதிக்கச் சாதியினர் நடத்திய கொடுமையில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்களை மீட்க அம்பேத்கர் நடத்திய சுதந்திரப் போராட்டம் இது.

அடக்குமுறையை எதிர்த்தாக வேண்டுமெனில் ஆட்சி, அதிகாரத்துக்கு செல்வதுதான் மிகச் சிறந்த வழி என்றுணர்ந்து அதற்கான வழிமுறைகளுக்குள் அம்பேத்கர் இறங்கியபோதுதான் இந்தியாவின் விடிவெள்ளியாக இருந்த காங்கிரஸின் இன்னொரு பக்கமும் அம்பேத்கருக்கு புரிந்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'ஹரிஜன்' என்று பெயர் சூட்டி, கடவுளின் குழந்தைகள் என்று சொல்லி, அவர்களை அரவணைத்துச் செல்லும்படி அறிவுரை கூறிய காந்தியார் அவர்களுடைய நடைமுறை வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை.

தேர்தல்களில் தனது இனத்திற்காக இரட்டை வாக்குரிமை தேவை என்று கேட்டு போராடி வெற்றி பெற்று வந்த அம்பேத்கரை காந்தியார் தனது தந்திரத்தால் வெல்கிறார். "அவ்வாறு இரட்டை வாக்குரிமை தருவது அவர்களை இன்னமும் ஒதுக்குவது போலாகும். இந்து மதத்தை இரண்டாகப் பிரிப்பது போலாகும்" என்று காந்தியார் மறுக்கிறார். அம்பேத்கர் இதனை ஏற்க மறுக்கிறார். ஆனால் காந்தியார் வழக்கம்போல தனது உண்ணாவிரதம் என்னும் ஆயுதத்தைக் கையில் எடுக்கிறார். அம்பேத்கர் இறுதியில் வேறு வழியில்லாமல் நாட்டு நலனுக்காக தனது இனத்து மக்கள் நலனை பலிக்கடாவாக்கும் சோகக் காட்சி மனதை உருக்கும்.

பிரிட்டிஷ் இந்திய அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பதவி வகித்து இந்தியாவிலேயே முதல் முறையாக தொழிலாளர் நலத்துறை மூலமாக தொழிலாளர்களின் வேலை நேரத்தை முறைப்படுத்த உத்தரவிட்டவர் அம்பேத்கர்தான். அந்த அனுபவத்தோடும் தனக்கு உதவியாக நியமிக்கப்பட்டவர்களின் உதவிகள் கிடைக்காத சூழலிலும் தனியொரு மனிதனாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை வடிவமைத்துக் கொடுத்திருப்பது மிகப் பெரும் சாதனை.

பெண்களுக்கான ஜீவனாம்சம், மறுமண உறுதிச் சட்ட விதிமுறைகளை உள்ளடக்கிய இந்து சட்டத் திருத்தத்தை அம்பேத்கர் 1951-ம் ஆண்டு கொண்டு வந்தபோது, அதற்கு எழும்பிய எதிர்ப்பும், இதனைக் கண்டும் காணாததுபோல் பிரதமர் நேரு நடந்து கொண்டதையும் பார்த்து, மனம் வெறுத்து தனது சட்ட அமைச்சர் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

எந்தப் பக்கம் போனாலும், ஒரு இந்துவாக இருப்பதாலேயே தான் அசிங்கப்படுத்தப்படுகிறோம் என்பது அம்பேத்கருக்கு மிகப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாகவே அவர் இந்து மதத்தைத் துறப்பது என்ற முடிவுக்கு வந்து பௌத்தத்தை தழுவியிருக்கிறார். செய்தி கேள்விப்பட்டு சமாதானத்திற்கு ஓடி வரும் இந்து மடாதிபதிகளிடம் "நாங்கள்தான் தீண்டத்தகாதவர்களாயிற்றே.. நாங்கள் உங்களுடன் இருந்தாலென்ன? போனாலென்ன..?" என்று அம்பேத்கர் கேட்கிறார்.

இத்திரைப்படத்தில் வரும் அம்பேத்கரின் அதிரடி வசனங்கள்:

'மகாத்மாக்கள் வருவார்கள், போவார்கள், தீண்டாமை இன்னும் அப்படியேதானே இருக்கிறது'

"காந்தியை துறவி என்றோ, மகாத்மா என்றோ அழைக்காதீர்கள். அவர் ஒரு சந்தர்ப்பவாத அரசியல்வாதி. சீஸனுக்கு சீஸன் அவர் குணம் மாறும். ஆதரவும் மாறும். ஆனால் இந்து மதத்தில் அடிமைகளாக தலித்துகள் காலம் முழுவதும் நீடிக்க வேண்டும் என்ற அவரது ஆசை மட்டும் மாறாது."

"ஆலய பிரவேசத்தைவிட அரசியலில் முக்கியத்துவம் பெறுவதுதான் அவசியமானது.." என்கிறார் அம்பேத்கர்.

இத்திரைப்படம் பெற்ற விருதுகளெல்லாம் நிச்சயமாகக் கொடுக்கப்பட வேண்டியவைதான். அத்தனை கலைஞர்களும் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள் ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையின் மங்கிய
இருட்டில்
வழமை போல்
உன்னைத் தேடி ஆட்கள் வந்தார்கள்
நீயும் வழமையான அவசரத்துடன்
புறப்பட்டாய்

துடிக்கும் நெஞ்சை
ஒரு கையால் தடவிக்கொண்டு
நடுங்கும் மறு கையால்
உன் கைகளைத் தொட்டேன்

நீயோ வழமைக்கு மாறாக
முகத்தை விறைப்பற்று வைத்திருந்தாய்
புன்சிரிப்புடன் சொன்னாய்
"அவர்களும் எங்களைப் போல்தான் அம்மா!
போய் வாறேன்" என்றாய்

உனக்கு பெரிய காரியம் எதுவுமில்லை
என்ற எண்ணத்தில் வாசலிலேயே
அனுப்பிவிட்டு
அமைதியாக நானும் தூங்கப்
போய்விட்டேன்

விடிந்தது, வீட்டில் நீ இல்லை
நீ வருவாய் என்று
மாலை இருட்டையும்
குதூகலமாய்
வரவேற்றேன், நீ வரவில்லை!

வீதி, வீதியாய் ஓடி
இரகசியமாய் தேடினேன்
கெஞ்சலாய், அழுகையாய்,
ஆத்திரமாய்
உன் நண்பர்களைக் கேட்டேன்
"வருவான்" என்றார்கள்

பனங்கூடலுக்குள் அந்த மண்பிட்டி
அதில் நடு இரவு வரை
காத்திருந்தேன்
நீ வரவில்லை
காண்பவரிடம் கேட்டேன்
நீ வருவாயா?
வருவாய்! வருவாய்! என்றார்கள்

ஆண்டுகள் ஓடி மறைந்தது
மண்பிட்டி கரைந்துவிட்டது
என் தடுமாறிய கால்களிடையே
எலும்புத் துண்டுகள்
இறுதியாக
அவர்கள் சொன்னார்கள்
'உன் மகனுடைய எலும்பாகவும் இருக்கலாம்'

நான் இன்னும்
உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
உன்னை மண்ணில் புதைத்தோம் என்று
யாரும் சொல்லவில்லை!
மகனே!
நான்
உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
மகனே! நீ வருவாயா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபை
# Palmyrah Development Board

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

## பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" நிலையங்களில் விற்பனைக்குள்ள பிரதான பனம் பொருள் உற்பத்திகள்

- பனம் கோடியல்
- பனம் பானம்
- பனங்களி
- பனங்கட்டி
- பனம்பாணி
- பனாட்டு
- பாணிப்பனாட்டு
- கல்லாக்காரம்
- பனங்காய்ப் பலகாரம்
- ஒடியல்
- ஒடியல்மா
- புழுக்கொடியல்
- புழுக்கொடியல் மா
- பாம்போஷா
- கைவினைப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- பற்பசை
- மற்றும் ஏனைய பனை சார்ந்த உற்பத்திகள்




**பனை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அதி உயர் தரத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன**



**மேலதிக விபரங்களுக்கு:-**

பனை அபிவிருத்திச் சபை
தலைமை அலுவலகம்:-
தேசிய வீடமைப்பு செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222034, தொலைநகல்: 021-2224154
மின்னஞ்சல்: slpdbho@yahoo.com, info@katpahacholai.com
இணையம்: www.katpahachcholai.com

நகர அலுவலகம்:-
இல.244, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 011-2586820, தொலைநகல்:011-2553697
மின்னஞ்சல்: slpalmyrah@yahoo.com

## பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம்

452ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1962 ஒக்டோபர் 13ஆந் திகதிய 13.348ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அட்டவணை, 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் பலாமரம், ஈரப்பலா மற்றும் பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ANDRA Printers, Jaffna - 021-221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org